

படையினரும் அதிகமுள்ள மாவட்டம் எண்டு சொல்லாமல் போட்டியள்...


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 289 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 25, சனிக்கிழமை 10.09.2016


# போதையால் திறைசேரிக்கு அள்ளித் தருவது யாழ்ப்பாணமே

## யாழ். நகரில் நேற்றுத் தெரிவித்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், செப். 10
போதைப் பொருள் பாவனையால் நாட்டின் திறைசேரிக்கு அதிகளவிலான வரியை அள்ளிக் கொடுப்பது உங்கள் யாழ்ப்பாண மாவட்டம்தான். யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களில் பலருக்கு இன்று முக்கியமான நோய் போதைப் பழக்கம் தான். தன் நலன் பற்றி சிந்திக்கின்ற - குடும்பத்தைப் பற்றி >> 06ஆம் பக்கம்



## போதை ஒழிப்புக்காகப் போராட்டம் நடத்த எவருமே முன்வருவதில்லை

யாழ்ப்பாணம், செப். 10
இலங்கையில் சாராயம், சிகரெட் மற்றும் போதைப் பொருள்களினால் நாள் ஒன்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இறந்து போகிறார்கள். நாட்டில் தேவையற்ற பல விடயங்களுக்காகப் போராட்டம் >> 24ஆம் பக்கம்

## 20 மாதங்களில் வடக்கு—கிழக்கில் 96 கொலைகள்

கொழும்பு, செப்.10
2015 முதல் 2016 ஓகஸ்ட் முதலாம் திகதிவரையான 20 மாத காலப்பகுதியில் நாட்டில் 777 கொலைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் மேல் மாகாணத்தில் 218 கொலைகளும், வடக்கு - கிழக்கில் 96 கொலைகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு >> 24ஆம் பக்கம்




## மதுபானசாலைகளை மூடுவதற்கு சட்டத்தில் திருத்தம்வேண்டும்

### யாழ். மாவட்டச் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 10
கல்வி நிறுவனங்கள் மற்றும் முக்கிய நிறுவனங்களுக்கு அருகிலும் மதுபானசாலைகள் யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கின்றன. அவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு, சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்தார் >> 04ஆம் பக்கம்

# மைத்திரி மீது நம்பிக்கையுண்டு

## யாழ்ப்பாணத்தில் அவர் முன்பாகவே தெரிவித்தார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 10
பல விதமான சிக்கல்களுக்குள்ளும், தடங்கல்களுக்குள்ளும், நெருக்குதல்களுக்குள்ளும் அகப்பட்டு தத்தளித்துக் கொண்டிருக்கும் எங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இயற்கையாகவே தம்முள் கொண்டிருக்கும் மனிதாபிமான உணர்வு, பௌத்த கொள்கைகளில் அவருக்கு இருக்கும் ஆழ்ந்த ஆர்வம் காரணமாக, அவர் இந்த நாட்டை நல்வழியில், நல்லிணக்கத்துடன், நல்ல >> 23ஆம் பக்கம்



# மைத்திரியின் காலில் வீழ்ந்த மாணவிகள்

## அங்கஜனின் ஏற்பாட்டில் அழைத்து வரப்பட்டனர்



யாழ்ப்பாணம், செப். 10
உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் சிலர், யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனின் ஏற்பாட்டில் சந்தித்து மனுக் கையளித்தனர். இதன் போது ஜனாதிபதியின் காலில் வீழ்ந்து >> 04ஆம் பக்கம்

## இரணைமடுக் குளம் சீரமைப்பில் மைத்திரி கரிசனை

யாழ்ப்பாணம், செப். 10
இரணைமடுக் குளத்தின் சீரமைப்பு பணிகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்வதாகவும், அது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று உறுதியளித்தார்.
யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் வைத்து வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இரணைமடுக் குளத்தின் சீரமைப்பில் ஒவ்வொரு திணைக்களங்களும் மாறி மாறி தடைகள் ஏற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதற்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
'இரணைமடுக்குளம் வடக்கு மாகாண மக்களின் மிகப்பெரிய சொத்து. இரணை மடுக் குளம் மட்டுமன்றி ஏனைய நீர்ப்பாசன வளங்களின் >> 25ஆம் பக்கம்

## தேசிய அரசைத் தீர்மானிக்க நீதிமன்றுக்கு அதிகாரமில்லை

### அரசு கடும் ஆட்சேபனை

கொழும்பு, செப்.10
இலங்கையில் தற்போது ஆட்சியிலுள்ளது ஒரு தேசிய அரசா, இல்லையா என்பதை ஆராய்வதற்கு உயர் நீதிமன்றுக்கு அதிகாரங்கள் இல்லை என்று நல்லாட்சி அரசினால் ஆட்சேபனை நேற்று நீதியரசர்கள் முன்னிலையில் முன்வைக்கப்பட்டது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணியில் உருவாக்கப்பட்ட அரசை தேசிய அரசாகக் கருத முடியாது என்று தீர்ப்பளிக்குமாறு கோரி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முன்னாள் >> 23ஆம் பக்கம்

## இரணைமடுக் குளம் சீரமைப்பு வடக்கு மக்கள் பிரதிநிதிகள் திங்களன்று நேரில் ஆராய்வர்

யாழ்ப்பாணம், செப்.10
இரணைமடுக்குளத்தின் சீரமைப்புப் பணிகள் தடைப்பட்டமை தொடர்பில் நேரில் ஆராய வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நாளை மறுதினம் திங்கட்கிழமை இரணைமடுவுக்கு நேரில் பயணிக்கின்றது.
கிளிநொச்சி மாவட்டம் இரணைமடுக் குளத்தின் சீரமைப்புப் பணிகள் இடம்பெற்று வந்தவேளையில், அதன் பணிகளுக்கு கொழும்பு அரசின் கீழ்வரும் >> 25ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரெட் வரியை அதிகரிக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியிடம் மனு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ். மாவட்டத்தில் திரட்டப்பட்ட பத்தாயிரம் பேரின் கையெழுத்துடன் சிகரெட் வரியை உயர்த்துமாறு கோரிய மனு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று நேரில் கையளிக்கப்பட்டது. ஹெல்தி லங்கா நிறுவனத்தினர் இதனை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

போதையிலிருந்து விடுபட்ட நாடு, என்ற தொனிப் பொருளில் ஜனாதிபதி செயலணியினால் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எட்டாவது மாவட்ட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. யாழ். பொது நூலகத்துக்கு அருகில் உள்ள திறந்த வெளி அரங்கில் நிகழ்வு நடைபெற்றது.

உலங்கு வானூர்தியில் யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்துக்கு வந்தடைந்த ஜனாதிபதியை, பாடசாலை அதிபர் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர். அங்கிருந்து நிகழ்வு இடம்பெறும் இடத்துக்கு பாதுகாப்பு வாகனத் தொடரணியுடன் ஜனாதிபதி அழைத்து வரப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அவரை வரவேற்றனர்.

யாழ். கனகரட்ணம் மத்திய கல்லூரி மாணவர்களின் இன்னியம் கீழைத்தேய இசை அணியின் மங்கள இசை முழங்க ஜனாதிபதி விழா மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மங்கள விளக்கேற்றல் தொடர்ந்து நடைபெற்றது. நான்கு மதத் தலைவர்களின் ஆசியுரையும் மங்கள விளக்கேற்றலை அடுத்து இடம் பெற்றது.

வரவேற்பு உரையை தமிழில், யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் நிகழ்த்தினார். தொடர்ந்து சிங்கள மொழியில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி லதாங்கி இராமகிருஸ்ணன் வழங்கினார். அடுத்து, பல்கலைக்கழகத்துக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவியர் போதை ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதன் போது நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் உறுதிமொழி எடுத்தனர். முதலில் தமிழ் மொழியிலும் பின்னர் சிங்கள மொழியிலும் உறுதிமொழி வாசிக்கப்பட்டது.

தேசிய போதை ஒழிப்பு கீதத்துக்கான நடனத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கினர். அதனையடுத்து, வடக்கு மாகாண மதுசார சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த சண்முகதாசன் ரவீந்திரன் நிபுணத்துவ சொற்பொழிவை வழங்கினார். போதை ஒழிப்பு தொடர்பான சிறப்பு நடன அளிக்கை யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தினரால் வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் உரையைத் தொடர்ந்து "போதையற்ற நாடு" செயற்றிட்டத்தின் சின்னம் சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால, யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்றார். அதன் பின்னர் இறுதியாக யாழ். பொலிஸ் நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

ஜனாதிபதியின் நேற்றைய நிகழ்வில், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க, இராஜாங்க அமைச்சர்களான இராதாகிருஸ்ணன், திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன், இ.அங்கஜன், டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோருடன், முப்படைத்தளபதிகள், பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஆகியோரும் பங்கேற்றனர். (வ-5-21-32-101-106)


வரவேற்பு நிகழ்வு.



யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவிகளின் போதைக்கு எதிரான நடன நிகழ்வு.


போதை ஒழிப்பு சத்தியப்பிரமாணம்.


யாழ். மத்திய கல்லூரியில் தபால் தலை வெளியீடு.


யாழ். பொலிஸ் நிலையம் நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது.


யாழ். பொலிஸ் நிலையப் பதிவேட்டில் ஜனாதிபதி கையொப்பம்.


மங்கள விளக்கேற்றும் ஜனாதிபதி


யாழ். பொலிஸ் நிலையத் திறப்பு விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மங்கள விளக்கேற்றுகிறார்.


போதை ஒழிப்பு சத்தியப்பிரமாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாக் கடத்தலில் குற்றஞ்சாட்டப்படுபவரின் அலைபேசி அழைப்புக்கள் குறித்து விசாரணை

## மன்றின் அனுமதி கோரியது பொலிஸ்

யாழ்ப்பாணம், செப். 10

கஞ்சாப்போதைப்பொருளுடன் கடலில் கைது செய்யப்பட்டவரின் தொலைபேசியில், அவர் இறுதி வாரங்களில் உரையாடியவர்கள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக தொலைபேசி இணைப்பை வழங்கிய நிறுவனத்திடம் விவரங்களைப் பெறுவதற்கு கட்டளை வழங்குமாறு மல்லாகம் நீதிவான் மன்றிடம் பொலிஸார் நேற்றுக் கோரினர்.

கடந்த 26ஆம் திகதி பருத்தித்துறைக்கு வடக்கே பயணித்த படகை வழி மறித்த கடற்படையினர் சோதனையிட்டபோது, இரண்டு பொதிகளில் கஞ்சா மீட்கப்பட்டதோடு, ஒருவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்று மல்லாகம் நீதிவான் மன்றில் விசாரணைக்கு வந்தது.

சம்பவதினம் கடலில் பயணித்த குறித்த படகு கடற்படையினரைக் கண்டதும் திசைமாறிச் செல்ல முற்பட்டமையினாலே சந்தேகம் கொண்டு அதனைச் சோதனையிட்ட வேளையில் இரண்டு பொதிகள் படகில் அவதானிக்கப்பட்டது. சந்தேக நபர் முதலில் அதனுள் ஐஸ் இருப்பதாகக் குறிப்பிட்டார். அதனை மீண்டும் சோதனையிட்ட போதே, அதில் கஞ்சா இருந்து மீட்கப்பட்டது.அதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது படகில் மீன்பிடி உபகரணங்களோ, மீனோ இருக்கவில்லை. இவருக்கு வேறு ஒரு நபர் நடுக்கடலில் வைத்து வழங்கியிருக்கலாம். அத்துடன் வேறு நாட்டில் இருந்தே இந்தக் கஞ்சாப் பொதிகள் வந்திருக்கலாம் என்பதனால், சந்தேக நபரின் பாவனையில் இருந்த தொலைபேசிக்கு இறுதி வாரம் அழைப்புக்களில் உரையாடப்பட்ட விவரங்களைப் பெறவேண்டும். அதற்குத் தொலைபேசி நிறுவன முகாமையாளருக்கு மன்று கட்டளை இடவேண்டும். சந்தேக நபருடன் உரையாடியவர்கள் தொடர்பில் அவர்களையும், விசாரணையை மேற்கொண்டு வழக்கை முன்நகர்த்த உரையாடியுள்ளவர்களின் பெயர், முகவரி உள்ளிட்ட விபரங்களையும் தொலைபேசி நிறுவனம் வழங்கக் கட்டளையிடுமாறு பொலிஸார் கோரினர்.

சந்தேகநபருக்கு எதிராக 1984ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தில் 54 இன் கீழ் ஆ சட்டத்தின் பிரகாரம் வழக்குத் தாக்கல் செய்வதாகவும், அவர் தொடர்பில் பல விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் சந்தேக நபரைப்பிணையில் விடுவிப்பதன் மூலம் விசாரணைக்கு இடையூறாகவும் அமையும் எனவும் பொலிஸார் சுட்டிக் காட்டினார்.

குற்றஞ் சாட்டப்பட்டவர் ஒரு மீனவர். அவர் வழமை போன்று தொழிலுக்கே சென்றார். கடற்படையினர் அவரைக் கைது செய்யும் நேரம் அவரின் படகில் மீனும் மீன்பிடித் தூண்டிலும் இருந்தன. அதே வேளை சந்தேகநபர் இறுதியாக வெளிநாட்டிற்கும் உரையாடியுள்ளார் என்ற சந்தேகம் தெரிவிக்கப் படுகின்றது. அவர் சிங்கப்பூரில் உள்ள தனது மைத்துனருடனேயே உரையாடியதாக கூறி தொலைபேசி நிறுவன விளக்க சிட்டையையும் மன்றில் முன் வைத்ததோடு, குறித்த விடயம் 54 இன் கீழ் வழக்கிடப்படுவதனால் இந்த மன்றினில் பிணை கோர முடியாது. அது தொடர்பில் மேல் நீதிமன்றை நாடுவோம் என்று சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களையும் அவதானித்த மன்று சந்தேக நபரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (வ-4,101)

# பெண் பொலிஸார் இல்லாமையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தலைவி நீதிமன்றில் சாட்சியம்

யாழ்ப்பாணம், செப். 10

ஆண் பொலிஸாரே முறைப்பாட்டைப் பதிவிட்டமையினால், என்னால் சகல விடயங்களையும் அவர்களிடம் கூற முடியாமல் இருந்தது.

இவ்வாறு குடும்பத்தலைவி ஒருவர் மல்லாகம் நீதிவான் மன்றில் வழக்கு சாட்சியத்தில் தெரிவித்தார்.

அளவெட்டியைச் சேர்ந்த பெண்,தனக்கு இழைக்கப்பட்ட முறைகேடு தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். அந்த வழக்கு மல்லாகம் நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. அந்தப் பெண்ணின் கணவர் காணாமல் ஆக்கப்பட்டவர். அவர்வீட்டில் பிள்ளைகளுடன் ஆண் துணையின்றி வாழும் நிலையில், வீடு அமைக்கும் நோக்கில் பறிக்கப்பட்ட மணலினால் அயலவருடன் முரண்பாடு ஏற்பட்டது.

அளவெட்டிப் பகுதியில் கடந்த வருடம் ஜூலை 6ஆம் திகதி அயல் வீட்டாருடன் இடம்பெற்ற தகராறு காரணமாக பிரச்சினை ஆரம்பித்தது. அது பற்றி நீதிமன்றில் நேற்றுச் சாட்சியமளித்தார். வழக்குத்தொடர்பாக பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் நீங்கள் தற்போது குறிப்பிட்ட விடயம் இல்லையே என்று குறுக்கு விசாரணை செய்த சட்டத்தரணி கேள்வியெழுப்பினார். அதற்குப் பதிலளித்த குடும்பத்தலைவி, பொலிஸ் நிலையத்திலும் ஆண் பொலிஸாரே இருந்தனர். அவர்களே முறைப்பாடு பதிவு செய்தனர். அதனால் சகல விடயங்களையும் ஆண் பொலிஸாரிடம் தெரிவிக்க முடியவில்லை - என்றார். (வ-4,101)

வாகனம் தேவை
அலுவலக பாவனைக்கு நல்ல நிலையில் உள்ள பின்வரும் வாகனங்கள் தேவை.
→ பிக்கப்
→ உழவு இயந்திரம்
தொடர்புகளுக்கு : 077 6032847
Good Gift Property (Pvt) Ltd
551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.








# 40 போத்தல் கசிப்பு, 11 பரல் கோடா நேற்றுக் கிளிநொச்சியில் சிக்கியது

## மூன்று பேர் பொலிஸாரால் கைது



கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சி - குமாரசாமிபுரம் பகுதியில் 40 போத்தல் கசிப்பும் 11 பரல் கோடாவும் உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டன. அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைய நாள்களில் அதிகரித்து வரும் கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் பொருட்டுப் பொலிஸார் விசுவமடு, பிரமந்தனாறு குளப்பகுதி போன்றவற்றிலும், குமாரசாமிபுரம் பகுதியிலும் காலை 9.30 முதல் மாலை 3.30 வரை சோதனையில் ஈடுபட்டிருந்தனர். குமாரசாமிபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடு படும் நபர்கள் தொடர்பாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அங்கு தேடுதல் நடத்தப்பட்டது: இதன்போதே பொலிஸார் 40 போத்தல் கசிப்பையும் 11 பரல் கோடாவையும் உபகரணங்களையும் கைப்பற்றியதுடன், 3 சந்தேக நபர் களையும் கைது செய்தனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். (கு-4-35)

# கொக்கிளாய் விகாரை தொடர்பில் நாளை முக்கிய கலந்துரையாடல்

முல்லைத்தீவு, செப்.10

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட கொக்கிளாய் கிராமத்தில் தனியாருடைய காணியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பௌத்த விகாரை தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் முள்ளியவளை - தண்ணீரூற்று புனித மத்தேயு ஆலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

கொக்கிளாய் பௌத்த விகாரை பிக்கு திஸ்ஸபுர ஞானரத்தன தேரர், தென்பகுதி பௌத்த தேரர்கள், யாழ்ப்பாண நாகவிகாரை தேரர், வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் குருமுதல்வர் சிவகந்தராசக் குருக்கள், ஜம் இய்யதுல் உலமா சபைத் தலைவர், மருத்துவர் ஜெயகுலராஜா, கனகதவராஜா உட்பட பலரும் கலந்துகொள்கின்றனர்.

கேப்பாப்பிலவு, முறிப்பு, நெடுங்கேணி, கொக்கிளாய் பிரதேச பாடசாலையில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு நல்லிணக்க அடையாளமாக தென்பகுதி சிங்கள மக்களால் துவிச்சக்கர வண்டிகளும் வழங்கி வைக்கப்படவுள்ளது.

நேற்றைய உதயன் பத்திரிகையில் இந்தச் செய்தி இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என தவறுதலாக பிரசுரமாகியது. திருத்தி வாசிக்கவும். (வ-4, ர17)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரியின்...

அழுதனர். உடுவில் மகளிர் கல்லூரியின் முன்னைய அதிபர் 60 வயதை எட்டியுள்ள நிலையில், புதிய அதி பர் நியமிக்கப்பட்டார். பழைய அதிபரை தொடர்ந்தும் பதவியில் இருக்க அனுமதிக்க வேண்டும் எனக் கோரி பாடசாலை மாணவி கள் சிலரும், பழைய மாணவிகள் என்று கூறிக் கொள்பவர்கள் சிலராலும் கடந்த சில தினங்களாக போராட்டங்கள் நடத்தப்பட்டன. மல்லாகம் மாவட்ட நீதிபதியின் கவனத்துக்கு நேற்று முன்தினம் இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது. நீதிபதி ஏ.யூட்சன் பாடசாலைக்குச் சென்று பழைய அதிபர் மற்றும் புதிய அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடினார். அத்துடன் பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறு கோரிக்கை விடுத்ததற்கு அமைவாக, மாணவிகளுக்கு சந்திப்புக்கு ஏற்பாடு செய்து கொடுத்ததாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவித்தார்.

இவ்வாறு அழைத்து வரப்பட்ட மாணவிகள் 16 பேர் மற்றும் 5 அருட்தந்தையர்கள் ஜனாதிபதியைச் சந்தித்தனர். போதையற்ற நாடு நிகழ்வு முடிந்து ஜனாதிபதி வெளியேறும் தருணத்தில், அவரைச் சந்தித்து மனுக் கையளித்த மாணவிகள், அவரது காலில் வீழ்ந்து அழுதனர். மனுவைப் பெற்றுக் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால வெளியேறினார். இதன் பின்னர் அங்கு வந்த பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவிடமும், மாணவிகள் அழுதவாறு தமது பிரச்சினையைக் எடுத்துக் கூறினர். இதன்போது பொலிஸ்மா அதிபர், ஜனாதிபதியின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளதால் அவரூடாகத் தீர்வு கிடைக்கும் என்று குறிப்பிட்டார். (வ-5-21-32)

## மதுபான....

யாழ். மாவட்டச்செயலர் நா.வேதநாயகன்.

போதையிலிருந்து விடுபட்ட நாடு தேசிய நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் வரவேற்புரை வழங்கும் போதே, மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நகர் பகுதியில் மாத்திரம் போதைப்பொருள் பாவனை ஆரம்பத்தில் இருந்தது. தற்போது கிராமப்புறத்துக்கும் பரவியுள்ளது. யாழ். மாவட்டத்தில் 69 மதுபான சாலைகள் உள்ளன. இவற்றில் சில கல்வி நிறுவனங்களுக்கு அருகில் அமைந்துள்ளன. அவற்றைத் தடை செய்ய நடவடிக்கை எடுத்தால், அது கைகூடாமல் போகின்றது. சட்டத்தில் இதற்கு மாற்றம் கொண்டு வரவேண்டும்.

மதுபானப் பாவனை மட்டுமல்ல, தற்போது கேரளக் கஞ்சாப் பாவனையும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது. கடற்படையினர் இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர். போதைப் பொருள் தொடர்பில் இரகசியத் தகவல்களை நாங்கள் மக்களிடமிருந்து பெற்று உரிய தரப்பினருக்கு வழங்கி அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றோம் - என்றார். (வ-5)

**தவறிவிட்டது**
மோட்டார் சைக்கிள் பதிவுப்புத்தகம் NPMI 4870 மற்றும் சிறு ஆவணமும் மருதனார்மடம் சந்தைப் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 748 3840, 077 220 5727

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள Honda CD 200 மற்றும் CD 125 Twin மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு.
077 985 0005

**வீடு வாடகைக்கு விடப்படும்**
உதயநகர் மேற்கு, கிளிநொச்சியில் சோழவளம் ஹொட்டலுக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
077 635 1876

**வேலைஆள்கள் தேவை**
மோட்டார் உதிரிப்பாக வியாபார நிறுவனத்தின் வான் சேலிற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
தொடர்பு: 075 025 5051

**மணமக்கள் தேவை**
- 92இல் பிறந்த 12இல் சூரியனும் செவ்வாயும், சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு பட்டதாரி மணமகன் உள்நாட்டில் தேவை.
- 87இல் பிறந்த 6இல் சூரியனும் செவ்வாயும், லண்டனில் Phd முடித்த மணமகனுக்கு CIMA எக்கவுண்டன் இஞ்சினியர் மணமகள் தேவை.
- 85இல் பிறந்த 6இல் சூரியனும் செவ்வாயும், 9 பாவமுடைய BSc IT மணமகனுக்கு CIMA எக்கவுண்டன் மணமகள் தேவை.
- 85இல் பிறந்த 8இல் சூரியனும் செவ்வாயும், 45 பாவமுடைய MSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு:-
கமலக்கண்ணன் திருமண சேவை
இல.62, இராமலிங்கம் வீதி, முடமாவடி, பூங்கனிச்சோலையடி.
T.P: 077 6070 862

**விற்பனைக்கு**
ஒரு வயது நிரம்பிய யமுனாபாறி ஆட்டுக் கிடாயும், சினையுடன் யமுனாபாறி மறி ஆடும், நாம்பன் கன்றும், பசுக்கன்றும், பொமேரியன் ஆண், பெண் நாயும், பொக்கட்ஸ்பெனியர் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் குட்டிகளும், டாசோன் குட்டிகளும், வெள்ளடியன் கோழிகளும், மணிதாராக்களும் சினையுடன் கூடிய கலப்பின ஆடுகளும் விற்பனைக்கு உண்டு.
மயூரன் பாம் சென்ரர்
நீர்வேலி கந்தசாமி கோயில் பின்வீதி
077 015 8690

**பகிரங்க ஏலவிற்பனை**
எமது பாடசாலையில் பாவனைக்கு உதவாத பொருள்கள் எதிர்வரும் 22.09.2016 வியாழக்கிழமை மு.ப 9.30 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. விரும்பியவர்கள் நேரில் வந்து கலந்து கொள்ளவும்
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
அச்சுவேலி.
J/ST. THERESA'S GIRLS' COLLEGE
ATCHUVELY.

**1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....**

யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,
  **மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**
- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 18.09.2016 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 19.09.2016 (திங்கள்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

**நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வர்ணம் பூசுவதற்கான கூறுவிலை கோரல்**
மேற்படி ஆலயத்துக்கு வர்ணம் பூசுவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. கூலி ஒப்பந்த அடிப்படையில் செய்துதர விருப்பமுடைய முன் அனுபவம் கொண்ட ஒப்பந்தகாரர்கள் ஆலய தலைவர் / திருப்பணி பொருளாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
**இறுதி திகதி:- 25.09.2016**
குறிப்பு :- இறுதி முடிவு நிர்வாகமே தீர்மானிக்கும்
:- நிபந்தனைகளுக்கு உட்பட்டது
077 690 6092, 077 614 5244
பரிபாலன சபை- அந்திரான் முருகமூர்த்தி கோயில்

**பதவி வெற்றிடம்**
இலங்கையில் கடந்த 22 வருடங்களாக விற்பனைத்துறையில் ஈடுபட்டு வரும் எமது நிறுவனம் வடபகுதியில் எமது சேவையை விஸ்தரிப்பதற்கு ஆளணியை வேண்டி நிற்கின்றது.
அடிப்படைத் தகைமைகள்
O/L, A/L
உம் அதற்கு மேற்பட்டதும்.

**குறிப்பு:** விற்பனைத்துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு (காப்புறுதித்துறை மற்றும் ஏனைய விற்பனைத்துறையில்) முன்னுரிமை வழங்கப்படும்.
**ஊதியம் 28000 தொடக்கம் 40000 வரை**
கல்வித்தகுதி, அனுபவம், திறமைக்கேற்ப பதவியும் வேதனமும் வழங்கப்படும். சுயவிவரக்கோவை அனுப்ப வேண்டிய **இறுதி திகதி 24.09.2016**
தொலைபேசி இலக்கம் அவசியம்.
விளம்பர இல - 5114
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**வடக்கு மாகாண உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் தரம் III திறந்த போட்டிப் பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் வகுப்புக்கள்**
தொழில்சார் நிபுணத்துவம் மிக்க தலைநகர் மற்றும் யாழ்.மண்ணின் முன்னணி விரிவுரையாளர்களது வழிகாட்டலில்
- விண்ணப்ப முடிவு திகதி :- 30.09.2016
- பரீட்சைக் காலப்பகுதி :- நவம்பர் 2016
- கல்வித் தகைமைகள் :-

UGC இனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொண்ட கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தை உள்ளடக்கிய ஒரு பட்டம் அல்லது UGC இனால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொண்ட இதற்கு சமனான தகைமை.
**வகுப்புக்கள் ஆரம்பம்:- செப்ரெம்பர் 22 முதல்**
Institute of Business Management
IBM
# 01, 2nd Lane, Power House Road, Jaffna
Phone: 021 222 4111 | 077 783 6653
info@ibmsrilanka.com
www.ibmsrilanka.com

**13வது வருட நிறைவில் Power Gym**
Power Gym - jaffna
Body Care & Fitness Center
இன்றுவரை எம்மோடு இணைந்துள்ள 6,512 அங்கத்தவர்களுக்கும் நன்றி...
புதிய உடற்பயிற்சி உபகரணங்களுடன் மெருகூட்டப்பட்டுள்ளது எமது உடற்பயிற்சி நிலையம்.

0776070685
(Ladies Only)
218, கோவில் வீதி. (Gents Only)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தின் போசாக்கு மட்டம் உயர்வு

## கூறுகிறார் மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர்

கிளிநொச்சி, செப். 10

2012 ஆம் ஆண்டு கணிப்பின்படி இலங்கையில் கிளிநொச்சி மாவட்டம் போசாக்கு மட்டத்தில் கடைசி மாவட்டமாகக் காணப்பட்டது. தற்போது அதிலிருந்து முன்னேறிச் செல்கின்றது. இதனை உத்தியோக பூர்வமாக அறிவிக்க முடியாவிட்டாலும் மாவட்டத்தின் போசாக்கு மட்டத்தில் முன்னேற்றம் காணப்படுகின்றது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.மைதிலி தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் போசாக்குத் தொடர்பான தேசிய வேலைத்திட்ட முன்னேற்றக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

போசாக்கு மட்டத்தை உயர்த்தும் வேலைத்திட்டம் தனியே வைத்தியத்துறையை மட்டும் சார்ந்தது அல்ல. விவசாயத்துறை, மீன்பிடித்துறை, கல்வித்துறை, ஊடகத்துறை எனப் பல்துறைகளின் இணைந்த ஒரு குழு வேலைத்திட்டம். இங்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படும்போதே போசாக்கு மட்டத்தில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். கிளிநொச்சி மாவட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுகின்ற ஒரு சூழல் நிலவுகிறது.

> ❝ எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் போசாக்கு மட்டத்தை உயர்த்தும் வகையில் கிராம மட்டம், பிரதேச செயலக மட்டம், மாவட்ட மட்டம் என அனைத்து நிலைகளிலும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் ❞

இலங்கையைப் பொறுத்தவரை 5 வயதிற்குட்பட்ட 0.2 மில்லியன் சிறுவர்கள் வயதிற்கேற்ற வளர்ச்சி இன்றியும், 0.3 மில்லியன் சிறுவர்கள் வயதிற்கேற்ற நிறையின்றியும், சுமார் 4 மில்லியன் மக்கள் தாதுப்பொருள் ஊட்டச் சத்துக் குறைவாலும், மூன்றில் ஒரு பெண் அதிக எடையுடனும் காணப்படுவதாக 2012 ஆம் ஆண்டு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் போசாக்கு மட்டத்தை உயர்த்தும் வகையில் கிராம மட்டம், பிரதேச செயலக மட்டம், மாவட்ட மட்டம் என அனைத்து நிலைகளிலும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார் மைதிலி.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக மாவட்டச் செயலாளர் சத்தியசீலன், திட்டப் பணிப்பாளர் மோகனபவன், பிரதேச செயலாளர்கள், சுகாதாரத் துறை அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-4-35)

# தொழிநுட்ப உத்தியோகத்தர் வேலைநிறுத்தம் தொடர்கிறது

அரச சேவைகள் தொழிநுட்ப உத்தியோகத்தர் சங்கத்தின் பொது வேலை நிறுத்தப் போராட்டம் கடந்த 6ஆம் திகதி முதல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக வடக்கு மாகாண தொழிநுட்பவியல் சேவையாளர் சங்கம் அறிவித்தது.

நேற்றுமுன்தினமும் அது பற்றிப் பேச்சு நடத்தப்பட்டது. ஆயினும் தீர்வு எட்டப்படவில்லை. இதனால் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் அரச சேவைகள் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மீது பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகள், தொழில் உரிமைகள் புறக்கணிப்பு ஆகியவற்றுக்கு முழு எதிர்ப்பை வெளியிடும் வகையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 6 ஆம் திகதி முதல் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அரச நிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, அமைச்சின் செயலாளர் ஆகியோரால் இணக்கம் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தவில்லை எனவும் அரச சேவைகள் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சிறந்த சேவையையும் அந்தஸ்தையும் வழங்கும் வகையில் தொழிநுட்பவியல் சார்ந்த புதிய சேவை ஒன்றை உருவாக்குதல், பல்கலைக் கழகங்களிலும் உயர் தொழிநுட்பவியல் நிறுவனங்களிலும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குதல், ஒழுங்குமுறையான தொழிநுட்ப அறிவை இலகுவாகப் பெற தொழிநுட்ப நிறுவனம் ஒன்றை உருவாக்கித் தேசிய மற்றும் பன்னாட்டுப் பயிற்சிப் பாடத்திட்டங்களில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல், இடமாற்றம்-பதவி உயர்வு திட்டங்களைத் தயாரித்தல், சமமான தகைமைகளுடன் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்குச் சமமான வேதனம் வழங்கல் மற்றும் வெளிக்களக் கொடுப்பனவு, தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம், தொலை பேசிக் கொடுப்பனவு ஆகிய கோரிக்கை களை முன்வைத்து அரச சேவைகள் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-4-ரி3)

மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

திருமதி தவராணி சிவப்பிரமம்

(யா/ சிந்மய பாரதி வித்தியாசாலை)



அகவை அறுபது தனில் தனது 37 வருட கல்விப் பணியில் கடமையாற்றி 10.09. 2016 இல் ஓய்வு பெறும் நாயகியை சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.திருமதி காராளசிங்கம் சரஸ்வதி குடும்பம்
திரு. திருமதி விக்னேஸ்வரன் வாஹினி குடும்பம்
சோதிவேம்படி ஒழுங்கை, மானிப்பாய்




edexcel | PEARSON | London South Bank University | University of Wolverhampton | CIOB | RICS

INTAKE NOW ON

Sharpen your skills with BCAS today for Colourful Careers tomorrow

UGC அங்கீகாரம் கொண்ட UK Degree இனை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்யும் வாய்ப்பு

UGC Recognized TVEC Approved

ENG ENGINEERING
Civil & Construction
Telecommunication
Electrical | Electronics

BM MANAGEMENT
Business Management | Marketing
Human Resource Management

IT COMPUTING & SYSTEM DEVELOPMENT

BMS BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY

LLB LAW

QS QUANTITY SURVEYING

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131
077 960 3753
COLOMBO 077 283 4595

18 YEARS

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna

ISO 9001:2008 CERTIFIED

HOTLINE : 021 2219510 | Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 23.02.1945
ஆண்டவன் அடியில் 18.08.2010

**அமரர் வேலுப்பிள்ளை விவேகானந்தன்**

திதி: நவமி (10.09.2016)

குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கிய எம் அன்புத் தெய்வமே
ஆண்டுகள் ஆறு கடந்தாலும் ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
என்றென்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அருந்ததியார் வளவு
அல்வாய் மேற்கு, திக்கம்.

என்றும் உங்கள் நினைவுகளோடு
பிள்ளைகள்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மழலையாய் மண்ணில் 18.05.1981
தெய்வமாய் விண்ணில் 10.09.2010

**அமரர் இராசரத்தினம் செந்தில்பிரகாஸ்**

அன்பின் திருவுருவே
ஆதரவாய் இருந்தவனே
இங்கிதமாய் பேசும் இயல்போனே
ஈடில்லா நற்குணத்தைக் கொண்டவனே
உன்னை வீதியிலே நாம் இழக்க
நிர்க்கதிதான் நேர்ந்ததுவோ
எங்கே நீ எம் மகனே சென்றனையோ
ஏங்கியே தினந்தினமும் வாடுகின்றோம்
ஐயா உன் ஆத்மா சாந்திபெறுவதாக.

என்றும் உன் நினைவுடன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.
077 220 9634

(C/25200)(10.18)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07.02.1947
மறைவு 29.08.1990

**திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு**

*திதி: நவமி (10.09.2016)*

எம் குடும்ப பாச விளக்காய் ஒரு கூட்டுக்கிளியாக
எம்மோடு வாழ்ந்து எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை நாம் எண்ணாத
நாளில்லையம்மா

103/1, முருகமூர்த்தி வீதி,
அன்னாரப்பன்னை,
யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்
மற்றும் உறவினர்.

(J/4432)(13.18)

# நிறுவுநர் நினைவும் பரிசுத் தினமும்

## துயர் பகிர்கின்றோம்



யாழ்ப்பாணம். தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்விசாரா உத்தியோகத்தர் திரு. ச. இரவி சங்கர் அவர்களின் பாசமிகு தந்தையார்

**பொன்னையா சபாரட்ணம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்கள் நேற்று (09.09.2016) இறைவனடி எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். உறவுகளுடன் நாமும் இணைந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்**
**கோப்பாய்.**

(J/4458)(10.18)

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையின் நடன ஆசிரியர் **திருமதி சியாதா ஆனந்த ஜோதி** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி புஸ்பவதி வாமதேவன்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகத்தின் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



**ஆசிரியர் சகோதரத்துவம்**
**யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்,**
**கோண்டாவில்**

(J 2993)(12.18)

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.08.2016 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்


**அமரர் மகிழ்லோஜினி கமலநாதன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (09.09.2016) வெள்ளிக் கிழமை அதிகாலை 4 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.09.2016) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஒட்டறுத்தகுளம்,
வவுனிக்குளம். (வ/26126)(11,17,18.)

குடும்பத்தினர்.
குட்டி கராஜ் (நிதர்சிகா சீர்களம்)
அணிஞ்சியன்குளம் பாடசாலை முன்பாக

## முதலாம் ஆண்டு நினைவுகள்





**அற்புதநாதன் குகன்**
அன்னை மடியில் 07.11.1970
ஆண்டவன் அடியில் 01.07.2015
திதி: ஆனித் திங்கள் பூரணை

**கலாநிதி பரமேஸ்வரன்**
அன்னை மடியில் 19.01.1951
ஆண்டவன் அடியில் 24.08.2015
திதி: ஆவணித் திங்கள் பூர்வபக்க நவமி

என்றும் பண்பான தலைவராக பாசமிகு அன்னையாக அவனியில் நாம் உயர உழைத்த உத்தமர்களே
நடுவில் எம் உள்ளம் மினிர பேரிடியாய் எம்மைவிட்டகன்ற பெரியோர்களே!
பாசக் கயிற்றில் எம்மைக் கட்டி ஆண்ட குல விளக்குகளே! உங்கள் நினைவுகள் எம்மிடம் வற்றாத ஊற்றாய்
ஏழு பிறப்பும் உங்கள் நினைவு விருட்சமாய் வளர ஞான வைரவப் பெருமானை என்றும் சரணடைகின்றோம்

**இன்று (10.09.2016) சனிக்கிழமை அமரர்களது ஆண்டுத் திவச வைபவங்களில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

ஞானவைரவர் வளாகம்,
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. (வ/4413)(11.18)

நீங்கா நினைவுகளுடன்
பரமேஸ்வரன் குடும்பத்தினர்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசுத்தின மும் இன்று சனிக் கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் செ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராசா கலந்துகொள்வார். (த-11)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண சைவபரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 9 மணியளவில் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் செல்வ வடிவேல் கேட்டுள்ளார். (த-ரி1)

## போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துகின்றார்கள். ஆனால் போதை ஒழிப்புக்காக எவரும் போராட்டம் நடத்தவில்லை.

இவ்வாறு கவலை தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நாட்டில் தேவையற்ற பல விடயங்களுக்காக பலரும் பல ஆர்ப்பாட்டங்கள் - போராட்டங்களை நடத்துகிறார்கள். தங்கள் சுய லாபங்களுக்காக போராட்டம் நடத்துகிறார்கள். நான் இவை எல்லாவற்றையும் விட அவசியமானதொன்றுக்காக சிந்திக்கின்றேன். எங்களுக்குத் தேவையில்லாத ஒன்றுக்காக யாரும் ஆர்ப்பாட்டம் நடத்துவதில்லை. சாராயக் கடைகளை மூட வேண்டும் என்று யாரும் ஆர்ப்பாட்டம் நடத்துவதில்லை. போதைப் பொருளை நிறுத்த வேண்டும் என்று யாரும் வீதியில் இறங்கிப் போராடுவதில்லை.

எமது நாட்டில் சாராயம், சிகரெட் மற்றும் போதைப் பொருள்களினால் நாள் ஒன்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இறந்து போகிறார்கள். தேவையில்லாமல் எல்லாம் ஆர்ப்பாட்டம் நடத்துபவர்கள் ஏன் இதற்காக ஆர்ப்பாட்டம் நடத்துவதில்லை என்று உங்கள் முன் நான் கேட்க விரும்புகிறேன்.

இங்கு மட்டுமல்ல உலகின் எந்தப் பாகத்திலும் இப்படி ஒன்றுக்காக மக்கள் இறங்கிப் போராடுவதைக் காண முடியாது. உலகத்தில் எந்தப் பகுதியிலும் மக்கள் மூலமாகவோ அரசியல்வாதிகள் மூலமாகவோ இந்த விடயங்கள் வெளிக்கொண்டு வரப்படுவதில்லை. போதைப் பொருளுக்கு எதிராகக் குரல் கொடுக்கின்ற அமைப்புக்களினால் மாத்திரம்தான் அது சாத்தியமாகிறது என்றார். (வ-5-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தறிவை வளர்ப்பதற்கு தடையாகக்கூடாது வறுமை

## தென்மராட்சி பிரதேச செயலர் தெரிவிப்பு

தென்மராட்சி: செப். 10
எழுத்தறிவை வளர்ப்பதற்கு மாணவர் சிலருக்கு வறுமை தடையாகக் காணப்படுகிறது. இவ்வாறான தடைகளை உடைத்தெறிந்து அந்த மாணவர்களின் கல்வி அறிவு விருத்தி பெற வேண்டும். அதற்காக பிரதேச வாழ்வின் எழுச்சிப் பிரிவினர் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளின் பிள்ளைகளைத் தெரிவு செய்து அவர்களின் கல்வி அபிவிருத்திக்காக மாதாந்தம் புலமைப் பரிசில் நிதி வழங்கும் திட்டத்தை வருடாந்தம் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேச செயலக வாழ்வின் எழுச்சிப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்த சர்வதேச எழுத்தறிவு தின நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-




மாணவர்களின் கல்வி நிலை தற்போது பல்வேறு விதங்களில் மழுங்கடிக்கப்படுகின்றன. மது போதையாளர்களின் நடவடிக்கைகள், தாக்குதல் சம்பவங்கள், தொலைபேசி, தொலைக்காட்சி, ஒலிபெருக்கி போன்றவற்றின் பாவனை ஆகியனவற்றை இங்கு குறிப்பிடலாம்.

மதுபோதையில் காணப்படுவோர் வீதிகளில்-கிராமங்களில் நடத்தும் பல்வேறு அருவருக்கத்தக்க செயற்பாடுகளால் மாணவர்கள் கற்க முடியாத நிலை காணப்படுகிறது. பெற்றோர் தாம் தொலைக்காட்சி நிகழ்வுகளைப் பார்ப்பதாலும், அதனால் தமது பிள்ளைகளின் கல்வி நிலை மழுங்கடிப்படுகிறது எனத் தெரிந்தும் கல்வியில் அக்கறை செலுத்தாமல் உள்ளனர்.

அத்துடன் ஆலயங்கள் மற்றும் பொதுநிகழ்வுகள் ஆகியவற்றில் ஒலிபெருக்கி பாவிப்பது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.

மாணவர்களின் கல்வியை உரிய காலத்தில் வழங்க வேண்டியது அனைவரினதும் தலையாய பொறுப்பாகும்.

பிரதேச செயலகத்தின் அனுமதி பெறாமலேயே பலர் ஒலிபெருக்கியினைப் பாவித்து வருகின்றனர். தமது பிரிவில் யாரும் மாணவர்களின் கல்வி நிலையைப் பாதிக்கக்கூடிய வகையில் ஒலிபெருக்கி பாவித்தால் உடனடியாகப் பிரதேச செயலகத்துக்கு அறிவியுங்கள். அதனைத் தடுக்க பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கும். கல்வியில் மட்டுமல்ல எதிர்காலத்தில் ஒழுக்கமுள்ள மாணவர்களாகவும் திகழவேண்டும் - என்றார்.

வாழ்வின் எழுச்சிப் பிரிவின் சிசுதிரிய செயற்றிட்டத்தின் கீழ் இந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களில் 12 பேருக்கு நேற்று மாதாந்த புலமைப் பரிசில் நிதி வழங்கப்பட்டது. ஏனையோருக்கு அடுத்த மாதம் நடைபெறும் சர்வதேச சிறுவர் தின விழாவில் வழங்கப்படுமெனவும், அத்துடன் இந்தத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மேலும் 300 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# வீடு புகுந்த கொள்ளையரை அடையாளம் காட்டிய தம்பதி

## சாவகச்சேரி நீதிமன்றில் சம்பவம்

தென்மராட்சி செப் 10
பட்டப்பகலில் வீடு புகுந்து தம்பதியைக் கட்டிவைத்துத் தாக்கிய பின்னர் அறையொன்றில் வைக்கப்பட்டிருந்த பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரையும் உடைமைகளைப் பறிகொடுத்த வயோதிபத் தம்பதியரும், அவர்களது வீட்டுக்கு முன்னால் கடை வைத்திருக்கும் ஒருவருமாக மூவர் நேற்று நீதிமன்றில் அடையாளம் காட்டினர்

இதனையடுத்து மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 23 ஆம் திகதி வரணி, இயற்றாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தம்பதியர் சமையலறைக்குள் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கு புகுந்த 3 கொள்ளையர் இருவரது கைகள் மற்றும் வாய் ஆகியவற்றைக் கட்டிவிட்டு நகைகள், பணம் என்பவை எங்குள்ளன எனக் கேட்டுத் தாக்கியுள்ளனர். அங்கு சுவாமி அறையில் இருந்த 10 ஆயிரத்து 200 ரூபா பணத்தையும், காப்பு, சங்கிலி உள்ளிட்ட தங்க நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான தம்பதியினர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு சாவகச்சேரி வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கார்ச் சாரதி, திருட்டுடன் தொடர்புடைய நபர், நகைகளைக் கொள்வனவு செய்த வர்த்தகர் ஆகிய மூவரையும் கைது செய்து கடந்த 26 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தினர்.

இந்த மூவரையும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், வர்த்தகர் தவிர்ந்த இருவருக்கும் அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேலும் ஒருவரைக் கைதுசெய்து கடந்த 30 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தினர். இந்த நபரையும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் நேற்று நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் இணைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நேற்று நீதிமன்றக் கட்டடமொன்றில் நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. மூவரும் மூடிய வாகனத்தில் கொண்டு வரப்பட்டு மூடிய நிலையில் அறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு சாட்சிகளான தம்பதியரும், அவர்களது வீட்டுக்கு முன்னால் கடை வைத்திருக்கும் ஒருவரும் இணைந்து கொள்ளையர்கள் மூவரையும் அடையாளம் காட்டினர்.

இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மூவரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-9)

# ரத்மலை சிக்கனக் கடன் சங்கக் குழு யாழ். வருகை



யாழ்ப்பாணம், செப்.10
ரத்மலை எக்கமுத்து சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

சங்கத்தின் தலைவர் ஜே.கொத்தலாவல தலைமையில் வருகை தந்த இவர்கள் யாழ். குடாநாட்டுச் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் குறித்து அறிந்து கொண்டனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இது சம்பந்தமான கருத்துப் பரிமாறல் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். இலகுநாதன் தலைமையில் இடம்பெற்றது.

சங்கங்களின் செயற்பாடுகள், நடவடிக்கைகள், அபிவிருத்திகள் என்பன குறித்துக் கருத்துப் பரிமாறல் இரு பகுதியினருக்கிடையேயும் இடம் பெற்றது. (த-17)

# உடுப்பிட்டி மகளிருக்கு விஞ்ஞான ஆய்வுகூடம்

கரணவாய், செப். 10
அருகிலுள்ள பாடசாலை தரமான பாடசாலை என்ற கல்வியமைச்சின் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய் யப்பட்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நேற்றுக் கணித விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கான அடிக்கல் நடப்பட்டது



கல்லூரி அதிபர் திருமதி கௌரி சேதுராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்டடத்துக்கான அடிக்கல்லை வடக்கு மாகாண உறுப்பினர் [illegible], எம்.கே. சிவாஜிலிங்கம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் நட்டனர்.

இந்த நிகழ்வில் பழைய மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (த-108)

## மூன்று கிழமைக்கு மேல் இருமல், சளி இருந்தால் பரிசோதனை அவசியம்

யாழ்ப்பாணம், செப். 10
மூன்று கிழமைக்கு மேல் இருமல், சளி இருப்பின் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பரிசோதிப்பதன் ஊடாகப் பெரிய நோய்களில் இருந்து விழிப்பாக விலகியிருக்கலாம் என்று வெளி நோயாளர் பிரிவுப் பொறுப்பதிகாரி மருத்துவர் ந.ஜமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவில் சளிப் பரிசோதனை செய்யக் கூடிய வசதிகள் தற் போது உள்ளன. மூன்று கிழமைக்கு மேல் சளியோ, இருமலோ இருந்தால் வைத்தியசாலையில் உரிய பரிசோதனையை மேற்கொள்வதன் ஊடாகக் காசநோய் இருக்கின்றதா? இல்லையா? என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். இருமல், சளி இருப்பவர்கள் இதில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என அவர் மேலும் கூறினார். (த-ரி7)

## பரிசளிப்பு நிகழ்வு

வல்வெட்டி இந்துத் தமிழ் வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை பிர தான மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

பாடசாலை அதிபர் சு. சிறீஸ்குமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி புஸ்பகுமாரி புஸ்பலிங்கம் வழங்கிக் கௌரவிப்பார். (த)

## வட்டு. இந்துக் கல்லூரியில் புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

வட்டுக்கோட்டை, செப்.10
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் புதிதாகக் கட்டப்படவுள்ள மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள் ளது.

கல்லூரி அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தலைமை விருந்தினர்களாக கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணனும், வட்டு இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியை இ.குகநந்தினியும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் கலந்து கொள்ளவுள்ளனர். (த)

## பிரபல உணவகத்துக்கு 10,000 ரூபா அபராதம்

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த பிரபல உணவகம் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

குறித்த உணவகத்துக்கு எதிராக யாழ்ப்பாண நீதிவான் மன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. உணவகத்துக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 5 குற்றச்சாட்டுக்களையும் உணவக உரிமையாளர் ஏற்றுக் கொண்டதையடுத்துத் தண்டம் விதிக்கப்பட்டது. (த-103-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் விழிப்புணர்வு திட்டங்கள் வவுனியாவில்



கிளிநொச்சி, செப். 10

முதியோர் தொடர்பிலான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் செயற்றிட்ட நிகழ்வுகள் வவுனியாமாவட்டப்பாடசாலைமாணவர்களுக்கிடையே இடம் பெற்றன.

"முதியோரைப் பேணுவோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் இந்த நிகழ்வுகள் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு வவுனியா விபுலானந்தா கல்லூரியில் நேற்றுமுன்தினம் கல்லூரி முதல்வர் சுப்பையா அமிர்தலிங்கம் தலைமையில் இடம் பெற்றன.

இதன்போது முதியோரின் மகத்துவம், மாணவர்கள் முதியோரைப் பேணுவதன் அவசியம், இளைய சமூகத்தினர் வளர்ச்சியில் முதியோர்களின் முக்கியத்துவம், முதியோரின் விழுமியங்கள் தொடர்பில் வவுனியா மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் செ.ஸ்ரீனிவாசன் கருத்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வுகளில் பண்டாரிக்குளம் முதியோர் சங்கச் செயலாளர் சண்முகராஜா, பொருளாளர் அருளானந்தம் மற்றும் உறுப்பினர்கள், சமூகசேவை உத்தியோகத்தர் ச.சோபனா, அபிவிருத்தி உத்தியோகத்தர் அ. தவீசன், அபிவிருத்தி உத்தியோகத்தர் கி.வசந்தன் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு முதியோருக்கான கௌரவத்தை வழங்கியிருந்தனர்.

மேலும் "தலைமுறைப் பாகுபாட்டுக்கு எதிரான நிலைப்பாட்டைஎடுத்தல்" எனும் தொனிப்பொருளில் இவ்வருடம் வடக்கு மாகாணத்தில் வடமாகாண சமூகசேவைகள் திணைக்களம் முதியோர் தினத்தைக் கொண்டாடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-21)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு நடவடிக்கை

## பிரதேச செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, செப். 10

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் போர் காரணமாக அழிவடைந்த நிலையில் காணப்படும் கிணறுகள், வீடுகள் தொடர்பிலான விவரங்கள் சேகரிக்கப்படுவதாகவும், பிரதேச அபிவிருத்தி சார்ந்து கிடைக்கப்பெறுகின்ற நிதிமூலங்களின் ஊடாகவே இவை மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனிருத்தன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

புனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற அபிவிருத்திக்கான நிதிகள் எங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அபிவிருத்தி தொடர்பான தேவைப்பாடுகளின் விவரங்களை எங்களிடம் கேட்டிருக்கின்றார்கள்.

இதற்கிணங்க போர்க் காலங்களில் சேதத்துக்குள்ளான கிணறுகள், மற்றும் வீடுகளின் விவரங்களைத் தற்போது சேகரித்து வருகிறோம்.

இவை தவிர அபிவிருத்தி சார்ந்த ஏனைய நிதி பெறல்களின்போது வேலைத்திட்டங்களை விரைவுறச் செய்வதற்கு இலகுவாக இருக்கும் என்ற அடிப்படையிலும் இந்தத் தகவல் திரட்டல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

> “ கடந்த காலப் போர் காரணமாக மக்களின் விவசாயக் கிணறுகளும் வீட்டின் பாவனைக்குகந்ததாக இருந்த குடிதண்ணீர்க் கிணறுகளும் சிதைவடைந்து போயுள்ளன. ”

அத்துடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊடான வறிய மக்களுக்கு ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்ட நடைமுறைப்படுத்தலை மேற்கொள்வதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது. அதற்குரிய விவரம் சேகரிப்பை கிராம சேவகர் பிரிவு ரீதியாகத் திரட்டி வருகிறோம்–என்றார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வசித்துவருகின்ற மக்கள் தொகையினரில் பெரும்பாலானவர்கள் தமது ஜீவனோபாயத் தொழிலாக விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த காலப் போர் காரணமாக மக்களின் விவசாயக் கிணறுகளும் வீட்டின் பாவனைக்குகந்ததாக இருந்த குடிதண்ணீர்க் கிணறுகளும் சிதைவடைந்து போயுள்ளன. இவற்றில் சில விவசாயக் கிணறுகள் புனரமைக்கக் கூடிய நிலையிலும் இன்னும் சில தூர் வாருவதன் மூலம் சீர்ப்படுத்தக் கூடிய நிலையிலும் காணப்படுகின்றன. இருந்தபோதும் அவற்றைப் புனரமைப்பதற்கு வசதிகள் அற்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர். தற்போது விவசாயத்துக்குரிய பொதுக் கிணறுகளும் சாதாரண பொதுக் கிணறுகளும் வெட்டிக் கட்டுவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்களை மேற்கொள்ளும் அதே நேரத்தில் பகுதியளவில் திருத்தங்களுக்கு உள்ளான எமது கிணறுகளையும் புனரமைப்புச் செய்து தர வேண்டும் என ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர்பிரிவைச் சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-ரி7-102)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
12 . 12 . 1925



மறைவு
11 . 08 . 2016

அமரர் பரமு நடேசு

(ஓய்வு நிலை உள்ளூராட்சி சபை உத்தியோகத்தர்)

2016.08.11 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்ட அஞ்சலி, ஆறுதல் தெரிவித்து மற்றும் மரணச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அஞ்சல் திணைக்கள அலுவலர்கள் மற்றும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (10.08.2016) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சக்தி வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(C.26127)
(14,17,18)

குடும்பத்தினர்.
ந.இரவீந்திரன்(மகன்)
(தபாலகம் அச்சுவேலி)

# தலைமைத்துவத்தை கூட்டுறவு வளர்க்கும்

## வடக்கு விவசாய அமைச்சர் கூறுகிறார்

கிளிநொச்சி, செப். 10

முன்னைய காலங்களில் குடும்பங்கள் கூட்டுறவாக வாழ்வதில் அதிகம் அக்கறை செலுத்தி வந்தனர். உண்மையிலே தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்குக் கூட்டுறவான செயற்பாடுகளே இன்றியமையாதவை.

இவ்வாறு வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கூட்டுறவு சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று பாடசாலை மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்புகள் என்பது எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பில் பலரும் பல்வேறு கருத்துக்களைக் கூறி வருகின்றனர். தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கு இவ்வாறான கூட்டுறவுச் செயற்பாடுகள் இன்றியமையாத தேவைப்பாடாக உள்ளன. முன்னைய காலங்களில் குடும்பங்கள் கூட்டுறவாய் வாழ்வதில் அதிகம் அக்கறை செலுத்தி வந்தனர். இருந்தபோதும் தற்காலத்தில் நிலைமை மாற்றம் கண்டுள்ளது.

கூட்டுறவாகச் செயற்படுவதற்கு நேரம் இல்லாது மக்கள் செயற்பட வேண்டிய காலம் தோற்றம் கொண்டுள்ளது. மாணவர்கள் தலைமைத்துவப் பண்புகளைச் சிறுவயதிலேயே வளர்த்துக் கொள்வதற்குக் கூட்டுறவு மிகவும் இன்றியமையாதது.

தலைமைத்துவம் என்பது இன்று எம் முன்னால் உள்ள அரசியல் தலைமைகளைப் போன்று வளர்த்துக் கொள்ளவேண்டிய ஒரு பண்பாகும். இன்று எம் மத்தியில் பல அரசியல் கட்சிகள், தலைமைகள் உள்ளனர். ஆனால் அவர்கள் தேர்தல் காலங்களின்போது மாத்திரமே பேசப்படுகின்றனர் – என்றார். (த-21-34)

# கசிப்பு உற்பத்தி: இருவருக்கு தண்டம்

கிளிநொச்சி செப். 10

கிளிநொச்சி, பளை முகாவில் பகுதியில் 35 போத்தல் கசிப்பு, 220 போத்தல் கோடாவையும் உற்பத்திஉபகரணங்களையும் வைத்திருந்தவர்களுக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது எனப் பளை பொலிஸார் தெரிவித்தனர்.

பளை, முகாவில் பகுதியில் 35 போத்தல் கசிப்புடன் ஒருவரும், உற்பத்தி உபகரணங்கள், 220 போத்தல் கோடாவுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டபோது தண்டம் விதிக்கப்பட்டது.

35 போத்தல் கசிப்பு வைத்திருந்தவருக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் 15 நாள்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும், 220 போத்தல் கோடாவை வைத்திருந்த நபருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டமும் விதித்து தீர்ப்பளித்தார் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ ஆனந்தராஜா. (த-4-ரி3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக மாணவர்களுக்கு குருதிச்சோகை நோய்

## கர்ப்பிணிகளும் விதிவிலக்கல்ல கூறுகிறது சுகாதாரத் திணைக்களம்

தென்மராட்சி செப். 10
தென்மராட்சிப் பிரதேசத்தில் குருதிச் சோகையினால் பீடிக்கப்படும் கர்ப்பிணிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது என்னும் அதிர்ச்சி அறிவிப்பைச் சுகாதாரத் திணைக்களத்தின் சாவகச்சேரி அலுவலகத்தினர் வெளியிட்டுள்ளனர்.
தென்மராட்சிப் பிரதேச செயலக வெளிக்கள அலுவலர்களுக்கு நடத்திய போசாக்கு தொடர்பான விழிப்புணர்வுக்கருத்தரங்கிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்போது பெருமளவான கர்ப்பிணிகளும் பாடசாலை மாணவர்களும் குருதிச் சோகையினால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதெனவும், இவர்களில் பெரும்பாலானோர் இரும்புச் சத்துள்ள உணவு வகைகளை உட்கொள்ளாமையே காரணமெனவும் தெரிவிக்கப்பட்டது.
தற்போது மக்கள் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் உரம் மற்றும் கிருமிநாசினிகள் பாவிக்கப்பட்ட மரக்கறி வகைகளையே கொள்வனவு செய்து உணவாகப் பயன்படுத்தி வருகின்றனர்.இலை வகைகள் மற்றும் அவரை இன மரக்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்வதில்லை. இதனால் இவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். இவ்வாறான பாதிப்புகளுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாதுவிடின் உயிராபத்து ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.
தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத் தோட்டப் பயிர்கள் மேற்கொள்ளக்கூடிய காணி வசதிகள் உள்ளபோதிலும் அவற்றை மேற்கொள்ள முயற்சிக்காததால் இவ்வாறான பாதிப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.
பிரதேசத்தில் காணப்பட்ட அவரை இனங்கள் இல்லாமல் போய் விட்டன. இதனை ஈடு செய்ய ஏனைய பிரதேசங்களில் காணப்படும் அவரை இனங்களை வீட்டுத் தோட்டங்களில் நாட்டி சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி அதில் கிடைக்கும் இலை வகைகள் மற்றும் மரக்கறிகளை உட்கொண்டு குருதிச் சோகை வராமல் பாதுகாக்கப் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் ஒவ்வொரு வெளிக்கள அலுவலர்களும் முன்வர வேண்டுமெனவும் சுகாதாரப் பிரிவினர் கூறினர்.
(த-9)

## மக்கள் பாவனைக்குக் கட்டணக் கழிப்பறை

தென்மராட்சி செப். 10
சாவகச்சேரிப் பிரதேச சபையின் கொடிகாமம் பேருந்து நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட கட்டணக் கழிப்பறை கடந்த திங்கட்கிழமை பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.
இந்த இடத்தில் அமைந்திருந்த கழிப்பறை போதிய பராமரிப்பின்றி சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்படுவதாகப் பொதுமக்கள் மற்றும் பயணிகள் முறையிட்டதையடுத்துவேள்ட்விசன்லங்காநிறுவனத்தின் பிரதேச சுகாதார மற்றும் குடிதண்ணீர்ச் செயற்றிட்டத்தின் கீழ் 3 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கழிப்பறை கடந்த மாதம் பிரதேசசபையிடம் கையளிக்கப்பட்டது.
கொடிகாமம் பேருந்து நிலையத்துக்கு வரும் பயணிகளின் நலன் கருதி அருகில் உள்ள காணியில் பிரதேச சபையினால் கழிப்பறை நிர்மாணிக்கப்பட்டது. அந்தக் கழிப்பறைபோதிய பராமரிப்பின்றிபொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டு பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.
இதனையடுத்து வேள்ட் விசன் நிறுவனத்தினர் முன்னர் இருந்த கழிப்பறையை அகற்றிவிட்டு அதே இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வகையில் இருபாலாருக்குமான கழிப்பறையை நிர்மாணித்துப் பிரதேச சபையினரிடம் கையளித்திருந்தனர்.
தினமும் பெருமளவு பயணிகள், வாகனங்களில் வருவோர், கொடிகாமம் சந்தைக்கு வரும் பொதுமக்கள், நகர்ப் பகுதி வர்த்தகர்கள் போன்றோர் விடுத்த வேண்டுகோளையடுத்து இது கட்டணக் கழிப்பறையாகப் பொது மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## இன்று மின் தடை

யாழ்ப்பாணம், செப்.10
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமைகாலை8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.
யாழ். பிரதேசத்தில் மயிலங்காடு, குப்பிளான், அளவெட்டிப் பிரதேசம், பன்னாலை, மல்லாகம், மல்லாக நீதிமன்றக் கட்டடத் தொகுதி ஆகிய இடங்களிலும், கிளிநொச்சிப் பிரதேசத்தில் பனிக்கன்குளம், பனிக்கன்குளம் CATIC, மாங்குளம் கொலனி, புத்து வெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயன்குளம், றூபவாகினி, தொலைத் தொடர்பு கோபுரம், கொக்காவில் இராணுவ முகாம் தொலைத் தொடர்பு கோபுரம், ஆனந்தபுரத்திலிருந்து கொக்காவில் வரைக்கும், மத்திய வங்கி, SFHOஇரணைமடு,மாஸ் அக்ரிவ், யுனிச்செலா பொறியியல் பீடம், விவசாய பீடம், நோர்த் காகில்ஸ் அக்றி பூட்ஸ், 7ஆவது படை யணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரட், கொக்காவில் இராணுவ படை முகாம் I,IIமற்றும் III, றூபவாகினிதொலைத் தொடர்பு கோபுரம் ஆகிய இடங்களிலும்,
வவுனியா பிரதேசத்தில் புதிய பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து நேரியகுளம் ஊடாகச் செட்டிகுளம் வரைக்கும், நெளுக்குளத்திலிருந்து பம்பைமடு வரைக்கும், தோணிக்கல் சிவன் கோயில் பிரதேசம், குட்செட்வீதி, மூன்றுமுறிப்பிலிருந்து கற்குண்டமடு வரை, வன்னி விசேட அதிரடிப்படை தலைமையகம் றிபெக்கோ, ஈரட்டைபெரிய குளம் இராணுவ முகாம், ஓமந்தை லைன், குருமன்காடு, யு.என்.எச்.சி.ஆர், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, சிறீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரன் அரிசி ஆலை, சயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, பம்பை மடு பல்கலைக் கழகம், தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரைக்கும், இத்திக்கண்டல்,வேட்டையன்முறிப்பு, மினுக்கன், பாப்பாமோட்டை ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும். (த-ரி)

## நினைவு நாளும் பேருரையும்

யாழ்ப்பாணம், செப்.10
கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரை சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வகத்தின் செல்லம்மா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ''பதின்ம வயதுப் பிரச்சினைகளும் அவற்றைக் கையாளுதலும்'' எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கலந்து கொள்ளவுள்ளார்.
(த-ரி)

## கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், செப். 10
மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிசேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.48 மணிக்கு நடைபெறவுள்ளது எனவும், இதனைத் தொடர்ந்து 45நாள்கள்மண்டலாபிசேகம் நடைபெறும் எனவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (த-ரி)

## மென்பானங்களில் சீனியின் அளவை பார்த்து வாங்குங்கள்

### சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்து

வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள மென்பானங்களில் ( சோடா வகைகள் ) சீனியின் அளவு குறிப்பிட்டுள்ளதா எனப் பார்த்து கொள்வனவு செய்யுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.
மென்பானங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதிக்குப் பின்னர் உற்பத்தி செய்த அனைத்து மென்பானங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள சீனியின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.
சிறிய ரக மென்பானங்களில் போத்தல்களின் மூடிகளிலும் பெரிய ரக போத்தல்களில் வட்டமிடப்பட்ட லேபிள்களிலும் சீனியின் அளவு அச்சிடப்பட்டுள்ளது.
லேபிளில் காணப்படும் சிவப்பு நிற வட்டம் 11 கிராமுக்கு மேற்பட்ட அளவையும், ஒரேஞ் நிற வட்டம் 2 தொடக்கம் 11 கிராமுக்கும் இடைப்பட்ட அளவையும், பச்சை நிற வட்டம் 2 கிராமுக்கு குறைவான அளவையும் கொண்டதாக இருக்கும்.
அண்மையில் சுகாதார அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட தேசிய உணவுப் பாதுகாப்பு வாரப் பரிசோதனையின்போது மென்பானப் போத்தல்களில் சீனியின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளதா எனப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
12 . 12 . 1925

மறைவு
11 . 08 . 2016

### அமரர் பரமு நடேசு

(ஓய்வு நிலை உள்ளூராட்சி சபை உத்தியோகத்தர்)

2016.08.11 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்ட அஞ்சலி, ஆறுதல் தெரிவித்து மற்றும் மரணச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அஞ்சல் திணைக்கள அலுவலர்கள் மற்றும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (10.08.2016) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சக்தி வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(C 26127)
(14,17,18)

குடும்பத்தினர்.
ந.இரவீந்திரன்(மகன்)
(தபாலகம் - அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பயங்கரவாதச் சட்டம் எதிர்காலத்தில் ஆபத்தானது

## அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு, செப். 10

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட இலங்கை அரசு எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தவுள்ள சர்வதேச தரத்திலான பயங்கரவாதத் தடைச் சட்டம் மிகவும் ஆபத்தானதாகக் காணப்படும் என்று அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கம் எச்சரித்துள்ளது.

அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை கோரும் மனுவில் கையெழுத்திடும் நிகழ்வு கொழும்பில் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசு புதிய, சர்வதேச தரத்துடனான பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவர முயல்கின்றது. இந்தச் சட்டவரைவு மக்களை ஒடுக்கு வதற்குப் பயன்படப் போகின்றது. தங்கள் உரிமைகளைக் கோரும் நீதிக்காகக் குரல்கொடுப்பவர்கள் இந்தச் சட்டத்தால் இலக்கு வைக்கப்படலாம்.

அரசியல் கைதிகள் விவகாரத்தை வடக்கின் பிரச்சினை என்கிறார்கள். இது பயங்கரவாதப் பிரச்சினை என்கின்றார்கள். இனவாதச் சாயம் பூசுகின்றார்கள்.

அரசியல் கைதிகளை அரசு விடுதலை செய்யவேண்டும். எந்தவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யவேண்டும்.

1971, 1989இல் அரசியல் தீர்மானம் எடுத்து தெற்கு இளைஞர்களை விடுதலை செய்தது போன்று இவர்களையும் அரசியல் தீர்மானத்தின் ஊடாக விடுதலை செய்யவேண்டும்.

2011ஆம் ஆண்டு முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்திய பின்னர் விடுதலை செய்தீர்கள். இதுவும் அரசியல் தீர்மானத்தின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கை.

அரசியல் கைதிகள் 170 பேர் வரை மிக நீண்டகாலமாகச் சிறைகளில் வாடும் அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதிக்கு கட்சியின் முக்கிய பொறுப்பும் அமைச்சும் வழங்கப்பட்டது. அதே போன்று பலர் சுதந்திரமாக உள்ளனர். அவர்களை என்ன சட்டத்தின் கீழ் விடுதலை செய்தீர்களோ அதே சட்டத்தின்கீழ் இவர்களையும் விடுதலை செய்யுங்கள்.

நல்லாட்சி குறித்த நம்பிக்கை நிலை நாட்டப்படவேண்டும் என்றால், –உறுதியான ஓர் அரசியல் ஏற்படுத்தப்படவேண்டும் என்றால் இவர்களை விடுதலை செய்வது அவசியம்.

இவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பலவந்தமாக வாக்குமூலம் பெறப்பட்டு அந்த வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச சமூகமும், அரசும் பயங்கரவாதத் தடைச் சட்டம் குறைபாடுகள் நிறைந்தது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன. நாங்கள் அதனைப் பயங்கரவாதச் சட்டம் என்கின்றோம். இது அரச பயங்கரவாதத்துக்குத் துணை போனது; துணைபோகின்றது. இதனை எதிர்த்தவர்களே இன்று சிறையில் வாடுகின்றனர்.

இன்னொரு முக்கியமான விடயத்தை நாங்கள் தெரிவிக்கவேண்டும். இலங்கையில் பல விடயங்கள் ஏழை மக்களுக்குப் பாதகமாக உள்ளன.

புதிய பயங்கரவாத தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், சர்வதேச சமூகம் அதனை ஏற்றுக்கொண்டு மௌனமாகிவிடும். அதற்கு அங்கீகாரம் அளித்துவிட்டு அமைதியாகிவிடும். ஆனால், குறிப்பிட்ட புதிய சட்டம் மக்களின் குரலாக ஒலிப்பவர்களை, அரசின் கொள்கைகளை எதிர்ப்பவர்களை, அடக்குமுறைகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குபவர்களை இலக்கு வைக்கும்.

அரசுக்கு எதிராக எவர் குரல் கொடுத்தாலும் இந்தச் சட்டம் அவர்களுக்கு எதிராகப் பாயும். சர்வதேச சமூகம் கேள்வி கேட்காது. மிகவும் ஆபத்தான நிலை உருவாகும்–என்றார். (த-4)

# பிறந்துள்ள குழந்தைக்கு பெயர் வைப்பதில் தாமதம்

## புதிய கட்சி குறித்து வீரவன்ஸ



கொழும்பு, செப். 10

குழந்தை பிறந்துள்ளது. அதற்கு எப்போது பெயர் வைப்பது என்பதிலேயே தாமதம் ஏற்பட்டுள்ளது. பிறந்த பிள்ளைக்குத் தாமதித்து பெயர் வைப்பதில் எந்தச் சிக்கலும் இல்லையெனக் கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் அவரது கடவுச் சீட்டு தொடர்பிலான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த வழக்கு நிறைவடைந்த பின்னர் அங்கிருந்து வெளியேறுகையில், கூட்டு எதிர்க் கட்சி உருவாக்கப் போவதாகக் கூறப்படும் புதிய கட்சி குறித்து ஊடகவியலாளர் ஒருவர், அவரிடம் வினவினார். இதன் போதே வீரவன்ச இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:–

அரசின் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய பலமான ஓர் அரசியல்சக்தி உருவாகியுள்ளது. அதற்கு இன்னும் பெயர் வைக்கப்படவில்லை. தேவையான சந்தர்ப்பத்தில் அதனை வைப்போம் –என்றார். (த-4)

# ஸ்ரீலங்கன் விமான சேவையின் விமானிகள் சட்டப்படி வேலை

கொழும்பு, செப். 10

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் விமானிகள் நேற்றுத் தொடக்கம் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.


விமானிகள் குடிபோதையில் உள்ளனரா என்பது தொடர்பில் விசாரணை செய்ய ஆரம்பித்துள்ள முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக இதுவரை எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. விமான நிலையச் செயற்பாடுகள் வழமை போல் இடம்பெறுவதாகவும் கூறப்பட்டது. (த-4)

# 7ஆம் ஆண்டு நினைவலைகளுடன்...

மலர்வு
07 . 01 . 1988

உதிர்வு
28 . 08 . 2009



கண்மூடித் திறப்பது போல் 7 ஆண்டுகள்
உன்னைப் பிரிந்து தொலைந்து போனதுவோ..
கனவுகள் கலைந்து போகும் என்று தெரிந்தே
கனவுகள் பல காண்கிறோம்
நீ இருப்பதைப் போல....
றஜீ

எம் குரல் கேட்க வில்லையா...?
அதை புரிந்துகொண்டும்
நீ அன்று கேட்காமல் சென்றது ஏனோ..
காரணம் தெரியாது விழிக்கிறோம்...
உன்னை.

கையளவு இதயம்
உன் நினைவுகளோ கடலளவு
எண்ணிலடங்கும் இருதய துடிப்பில்
எண்ணில் அடங்காத உன் ஞாபகங்கள்
இறைவா,

எழுதாத எம் கண்ணீர்த் துளிகள்
எவருக்குமே தெரியாத வலிகளை
பொறுக்கவா முடியும்...
கண் இமைப்பதைக் கூட
குறைத்து விட்டோம் - எம்
கரு விழிக்குள் இருக்கும் நீ
குறைந்து விடுவாயோ என்ற பயத்தில்

இறைவா
உம்மால் மட்டும் எப்படி முடிந்தது.
றஜீயை உன் வசமாக்கி.
வலிகளை எம் வசமாக்க
உரிமையுடன் தந்ததனால் என்னமோ...



கருவில் இருந்த போது
துக்கத்தைத் தொலைத்து விட்டு
இரவில் விழித்திருந்த சூரியர்கள்
என் தாய் தந்தை...
இன்று. இரவெல்லாம் போராடி
உறங்கப்பார்க்கின்றார்கள்
உன் நினைவுகளுடன்...
இறுதியில் தோற்றுப் போகின்றனர்.
செல்வத்துள் செல்வம் நீ இல்லாதது
நிறைவான செல்வமாகுமா?
இன்று நிழற்படமே
மிகப் பெரிய செல்வமாகிறது
எம் வீட்டுக் கோயிலிலே.

உன்னை என்றும் சுமந்து செல்கிறோம்
கூட்டை விட்டு வாழ முடியாத
நத்தையாய் ...
உன் வருகைக்காய் வலிமையுடன் காத்திருக்கும்
தசரதன் பெற்ற புத்திரிகளாய்...

அமரர்
**கருணாதேவன் றஜீபன் (றஜீ)**
(வணிக முதற்தேர்வு - முதலாம் வருட மாணவன் யாழ். பல்கலைக்கழகம்)
(திதி: பூர்வபக்க நவமி)

என்றும் உன் நினைவுடன் வாழும்
**குடும்பத்தினர்.**

றஜீ ஸ்ரோர்ஸ்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கி கடன் பத்திர விசாரணைகள் முடிவு

கொழும்பு, செப். 10
மத்திய வங்கி கடன் பத்திர ஒப்பந்தம் தொடர்பிலான கோப் குழு முன்னெடுத்த விசாரணைகள் நேற்றுமுன் தினம் முடிவடைந்துள்ளன.
தற்போது விசாரணை அறிக்கைகளுக்கு கோப் குழுவின் தலைவர் நாடாளு மன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி கோப் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார். (த-4)

# 2017 முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல்

## ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, செப். 10
அடுத்த வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.
சுதந்திரக் கட்சியின் தலைமை யகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
உள்ளூராட்சிமன்றத் தேர்தலை அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை இந்த வருட இறுதியில் ஆரம்பிக்கவேண்டும்.
அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என அமைச் சர் கூறினார். (த-4)

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்தப் பின்னிற்கும் அரசு

## கூட்டு எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 10
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதற்கு அரசுக்கு எவ்வித தேவையும் இல்லாதிருப்பதாகவும், இதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரும் உடந்தையாகவுள்ள தாகவும் நாடாளுமன்ற உறுப் பினர் மஹிந்த யாப்பா அபே வர்தன குற்றம்சாட்டினார்.
கூட்டு எதிர்க் கட்சியின் ஊடக வியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
அரசின் தேவையைக் கருத்தில் கொண்டு தேர்தல்கள் ஆணைக் குழுவும் செயற்பட்டு வருகின்றது. இந்தத் தேர்தல் குறித்து அரசி லுள்ள தலைவர்கள் பலரும் பல் வேறு தினங்களைக் குறிப்பிட்டு வருகின்றனர். தேர்தல் நடை பெறும் ஒரு தினத்தை அறிவிக்கு மாறு நாம் அரசைக் கேட்டுக் கொள்கின்றோம்.
தேர்தல் முறைமை சீர்திருத்தத்தில் பிரச்சினை இருந்தால் அதற்காக மேற்கொள்ள வேண்டிய நட வடிக்கைகள் உள்ளன. அவற்றை முன்னெடுக்காமல் அரசுக்காக ஆணைக்குழுவின் தலைவர் குரல் கொடுத்து வருவது கவலையாக வுள்ளது—என்றார். (த-4)

# தனிப்பட்ட முறையில் எம்மை விமர்சிக்காதீர்

## சபையில் கோரினார் பந்துல

கொழும்பு, செப். 10
நாம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளை எழுப்பும் போது எம்மை தனிப்பட்ட முறை யில் விமர்சிப்பது போன்று பதி லளிக்கப்படுகின்றது. இவ்வாறு கேள்விகளுக்கு இடமளிக்காது விட்டால் நாம் ஏன் நாடாளு மன்றத்திற்கு வரவேண்டும்?
இவ்வாறு கேள்வியெழுப்பிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியில் ஒன்றிணைந்த எதிர்க் கட்சி உறுப்பினரான பந்துல குணவர்த்தன, எதேச்சதிகாரமா கச் செயற்பட வேண்டாமெனவும் குறிப்பிட்டார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தி னம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தைத் தொடர்ந்து கேள்வி எழுப்பப்பட்டது. நிலை யியற் கட்டளை 84 இன் கீழ் 10 இன் பிரகாரம் உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பும்போது அந்த வினாவைப் பொருட்படுத்தாது அவரை விமர்சிக்கும் வகையில் பதிலளிப்பது தவறாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன சபாநாயகர் கரு ஜயசூரியவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.
இதன்போது, இந்த விடயத்தை நீங்கள் முன்னதாகவே எனக்கு கூறியிருக்கவேண்டும். தற்போது இதனைக் கூற முடியாது.நீங்கள் எழுத்து மூலமாகக் கோருங்கள் நான் அது தொடர்பாக கவன மெடுக்கின்றேன் எனச் சபா நாயகர் கருஜயசூரிய தெரிவித் தார்.
எனது நியாயமான விடயத்தைத் தயவு செய்து கருத்தில் கொள் ளுங்கள். இறைவரித்திணைக்கள ஊழியர்கள் சுகவீன விடு முறையில் செல்வது குறித்து வினாவொன்றை நாடாளுமன் றில் கடந்த செவ்வாய்கிழமை சபை ஒத்திவைப்புவேளை விவா தத்தின்போதும் மறுநாளும் நான் முன்வைத்தேன்.
இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம். இதனை அமைச் சர் பொருட்படுத்தாது தனிப்பட்ட வகையில் கேள்வியெழுப்பும் உறுப்பினர்களை விமர்சிக்கும் வகையில் கருத்துக்களை வெளி யிட்டுள்ளார். இது நிலையியற் கட் டளைகளின் பிரகாரம் தவறான தாகும் என்பதை இந்த சபையின் கவனத்துக்குக் கொண்டு வருகின் றேன் என்றார் பந்துல. (த-4)

# அதிக வருமானம் பெறும் நாடாக இலங்கை மிளிரும்

## *பிரதமர் ரணில் நம்பிக்கை*

கொழும்பு, செப். 10
அடுத்த இரண்டு தசாப்தங்களுக் குள் அதிக வருமானம் பெறும் பொருளாதார நாடாக இலங்கை மிளிரும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.
விஞ்ஞானத் தொழில்நுட்ப மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பமா கியது. இதில் சிறப்புரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு கூறி னார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்த இலக்கை எட்டுவதற்குத் தொடர்ச்சியான பொருளாதார அபிவிருத்திகள் அவசியம். கண்டுபிடிப்புக்கள், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப் பிலும் இந்த விடயம் தங்கியுள்ளது.
வரலாற்றில் புதிய பக்கத்தை நோக்கி இலங்கை திரும்பியுள் ளது. எமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தில் மூன்று முக்கிய தூண்கள் இந்தக் கருத் துக் களத்தின் அடையாளமாக உள்ளன.
அனைத்தையும் உள்ளடக்கிய, நிலையான மற்றும் சர்வதேசத்து டனான சிறந்த ஈடுபாடு ஆகியனவே மூன்று தூண்களாக உள்ளன.
முரண்பாடுகள் இன்றிய ஒத்தி சைவான சகவாழ்வே அனைத் தையும் உள்ளடக்கிய [illegible] விடயத்தின் அடிப்படையாக உள் ளது. இலங்கையின் பன்முகத் தன்மை பிளவுபடாமல் இருப்பது தொடர்பில் மீண்டும் கற்றுக் கொள்ளவேண்டும்.
விஞ்ஞானத் தொழில்நுட்ப அபி விருத்தி என்பது ஒரு நாட்டின் எதிர் காலத்துக்கு மிக அவசியமானது. இதற்காகத் தேசிய கொள்கை யொன்றை உருவாக்குவது முதல் நடவடிக்கையாகும்.
இலங்கை வரலாற்றில் ஒரு புதிய பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சகல துறையினரையும் உள் வாங்கி, சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் ஒரு [illegible] நாட்டில் உருவாகியுள்ளது – என்றார். (த-4)




தெல்லிப்பழை துர்க்கை அம்மன்
ஒன்பதாம் திருவிழா

பக்தருள்ளம் பக்குவமாய்
உறைபவளே துர்க்கையம்மா
பணிந்தோர் துயர் தீர்ப்பவளாம்
துர்க்கையம்மா
கனிவுடனே உனைத் துதிக்க
துர்க்கையவளே
காத்தருளும் கருணை வடிவானவளாம்
துர்க்கையம்மா.

- தெல்லியூர்த்தேவி

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இன்று (10.09.2016)
சனிக்கிழமை
ஒன்பதாம்
திருவிழா



வேட்டை, கைலாய வாகனக் காட்சி

சூலமெ டுத்தவள் எங்களைக் காத்திட
வேட்டை ஆடுகின்றாள்
சுந்தர மானதோர் வாள்கதை ஏந்தியே
வேட்டை ஆடுகின்றாள்
ஐம்புல வேடர்செய் கொடுமையை அடக்கிட
ஆடும் வேட்டையிலே
அருளொளி அபயம் கருணை யொளியினைக்
காட்டியே வருகின்றாள்

கைலை யீசனை தன்தாய் வேண்டியே
பணிந்து தொழுதிடவே
தன்கரம் கொண்டுமே இராவணன் கைலையை
எடுத்தவவ் வேளையிலே
தலையுடல் நசிந்திட ஈசனும் தன்பெரு
விரலினை ஊன்றிடவே
சாம கானமே பாடும் கைலாய
வாகனத்தில் வருகின்றாள்

அனுசரணை: திருமதி சந்திராதேவி சபாநாதன்
குடும்பம் (கைலாயவாகன உபயகாரர்)
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.




## நம் மனம் இளகட்டும்

வல்லவொரு செய்தியோடு
வரவேண்டும் வேலா
வாழ்வு ஒரு பேறாக
வரம் வேண்டும் முருகா
நல்லவொரு தீர்வோடு
நம்மண் விடியட்டும்
நம்மனம் இளகட்டும்
சந்நிதி முருகா!

-கே.எஸ்.சிவஞானராஜா




இலங்கையில் தனியார்
உயர் கல்வித் துறையின்
முன்னோடியாய் திகழும்
ICBT Campus
ICBT CAMPUS JAFFNA
580 Hospital Road
Jaffna, Sri Lanka.
Tel: 021-4777888

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வானுறையும் தெய்வத்துள் தெய்வமானார் கல்கத்தாவின் அன்னை தெரேசா

"தன்னைத்தான் தாழ்த்துகின்றவன் உயர்த்தப்படுவான்" என்ற யேசு கிறிஸ்து நாதரின் வார்த்தைகள் எவ்வளவு காத்திரமானவை என்பது, அன்னை தெரேசாவின் வாழ்வியல் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எங்கோ, பெயர் அதிகம் அடிபடாத ஊரில் பிறந்து,இறைவன் சேவையை மனதில் இருத்தி, முன்பின் அறியாத ஓர் ஊருக்கு வந்து அழுக்கடைந்த சேரிகளிலும், கைவிடப்பட்ட அனாதைகள் மத்தியிலும், பிறமனிதர்களால் ஒதுக்கிவிடப்பட்ட நோயாளர்கள் இடையிலுமாக ஒன்றாகக் கலந்து வாழ்ந்து, அவர்களின் கடைத்தேறலுக்காக அல்லும் பகலும் பசி நோக்காது, கண் துஞ்சாது கடைசிவரை உழைத்து மறைந்தவர் அன்னை தெரேசா

அவ்வாறு தன்னைத் தாழ்த்திக் கொண்டு மக்கள் பணியாற்றிய அந்த மாபெரும் தாயானவர், இன்று கத்தோலிக்க திருச்சபையினரால் புனிதர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டு வணங்கப் பெறுகின்றார். வாழ்நாளுக்குப் பிறகும் அற்புதம் புரிகின்றவர்களே புனிதர்களாக பிரகடனப்படுத்தப்படுவது வழமை. அதற்குப் பல காலம் ஏன், பல வருடங்கள் கூட எடுக்கும். ஆனால் அன்னை தெரேசா மறைந்து 19 ஆண்டுகளுக்குள்ளேயே அவ்வாறான ஒரு திவ்விய நிலையை எய்தியிருப்பதுவும் கூட ஓர் அற்புதமாகவே தோன்றுகின்றது.

அன்னை தெரேசா மெசடோனியாவின் தலைநகர் ஸ்கொப்ஜி நகரில் 1910 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26ஆம் திகதி அல்பேனிய தம்பதியினருக்கு மகளாகப் பிறந்து வளர்ந்தார். பெற்றோர் அவருக்கிட்ட பெயர் அக்னெஸ் கொன்ஷா பொஜஸ்யியு. தனது 19ஆவது வயதில் ஐரிஷ் லொரெட்டோ சமயப்பிரிவில் இணைந்து கொண்ட அவர், 1929ஆம் ஆண்டு சமயப்பணிக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். டார்ஜீலிங் என்ற இடத்தில் தெரேசா என்றபெயருடன் ஆசிரியையாகப் பணி ஏற்றார். 1946ஆம் ஆண்டு கொல்கட்டாவுக்கு (கல்கத்தா) சென்று ஏழைகள் அனாதைகள் மத்தியில் பணியாற்றத் தொடங்கினார். பின்னர் வழிப்போக்கர்களுக்கானமற்றும்கைவிடப்பட்ட சிறுவர்களுக்கான இல்லம் ஒன்றை நிறுவினார். பின்னர் கன்னியாஸ்திரிகளுக்கான மடத்தையும் கருணை இல்லத்தையும் நிறுவினார். இந்த நிறுவனம் இப்போது இந்தியாவிலும் வேறு நாடுகளிலும் கிளைகளைக் கொண்டிருக்கிறது.

கொல்கத்தாவில் மிக ஏழ்மை நிலையில் காணப்பட்ட சேரிகளில் அவர் மேற்கொண்டிருந்த பணிகளின் காரணமாக உலகத்தின் கவனத்தை ஈர்க்கலானார். 1997ஆம் ஆண்டு அன்னை தெரேசா இறந்ததையடுத்து அவர் பெயரால் நிகழ்ந்துள்ள அதிசயங்களின் காரணமாக அவர் வத்திகானிலுள்ள சென்.பீட்டர்ஸ் தேவாலயத்தில் கடந்த 4ஆம் திகதி புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். நிகழ்வில் கர்தினால் அஞ்சலோ அமட்டோ என்பவர் அன்னையின் பணிகள் பற்றிய சுருக்கமான உரையை வழங்கிய பின்னர், தேவாலயத்தின் சார்பில் அவரைப்புனிதராகப் பிரகடனப்படுத்துமாறு பாப்பாண்டவரைக் கேட்டுக் கொண்டார். பாப்பாண்டவர் பிரான்சிஸ், தமது பிரகடனத்தில் "முறையான கலந்துரையாடல்கள் மற்றும் தேவகிருபைக்கான மன்றாட்டங்கள் என்பவற்றுடன் எமது சகோதர ஆயர்களின் ஆலோசனைகளையும் பெற்றதன் பின்னர் கல்கத்தாவின் ஆசீர்வதிக்கப்பட்ட தெரேசாவை புனிதராகப் பிரகடனப்படுத்தி நிர்ணயம் செய்கின்றோம். அவரைப் புனிதர்களின் வரிசையில் நிலை நிறுத்துகின்றோம். அவ்வாறாக முழு தேவாலயத்தினாலும் வணங்கப்பெறவேண்டும் என்று கட்டளை இடுகின்றோம்" என்று தெரிவித்தார்.

அன்னை தெரேசாவின் வாழ்க்கையானது, சமயவாதிகளுக்குமட்டுமல்ல சமூகப்பணிகளில் ஈடுபடும் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாகும். சாதி, சமயம், அந்தஸ்து என்ற நிலைகடந்து சமூகத்தில் கடையர்களிலும் கடையர்களாகக் காணப்படும் மக்களுக்கு பணியாற்றுவதென்பது சாதாரணமான ஒன்றல்ல. அவ்வாறானவர்கள் வானுறையும் தெய்வத்துள் தெய்வமாக நிலை பெறுகிறார்கள். அந்தத் திவ்வியமான நிலைக்கு கல்கத்தாவின் அன்னைதெரேசா உயர்த்தப்பட்டுள்ளார்.

# அரசியல் சதுரங்கத்தில் வெற்றி பெறப்போவது எந்தத் தரப்பு?

சிங்களமூலம் : மவ்பிம
தமிழில் : வீ.எஸ்.ரீ

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான சம்பந்தன் அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, போர் முடிவுக்கு வந்த வேளை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் பதினோராயிரம் பேர்வரையிலான உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்சவின் தலைமையிலான அரசால் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். அதேவேளை மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசு, தான் பதவியேற்று ஒன்றரை வருடங்கள் நிறைவுறும் நிலையிலும், விடுதலைப் புலி சந்தேக நபர்களைச் சிறையிலிருந்து விடுவிக்கும் விடயத்தில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது எனத் தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் இந்தத் தகவலைக் கூறியபோது, மகிந்தவின் நாட்டுப்பற்றாளர் தரப்பினர் தமது காதுகளில் மெழுகை நிரப்பிக் கொண்டிருந்தார்களா என்பது கேள்விக்குரியதே. மைத்திரிபால–ரணில் அரசு கடும் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை விடுதலை செய்துள்ளதாக முன்னாள் பாதுகாப்புச்செயலாளர்கோத்தபாய கடந்த சில நாள்களுக்கு முன்னர் குற்றஞ் சுமத்தியிருந்தார். அது பயங்கரமான, நாட்டைக்காட்டிக் கொடுக்கும் செயற்பாடென மகிந்தவும் தம் பாட்டுக்கு விமர்சனம் வெளியிட்டிருந்தார். ஆனால் நாடாளுமன்றத்தில் வைத்து சம்பந்தனும், மகிந்த அரசு 11 ஆயிரம் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை விடுதலை செய்ததாகப் பெருமைப் பட்டிருந்தார்.

சம்பந்தனது மேற்குறித்த கருத்து, விடுதலைப்புலிகளுக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பதான நாட்டுப் பற்றாளர் தரப்பின் தலையில் ஓங்கிக் குத்தி விடும் வகையிலான ஒன்றாகும். தமது அந்தக் கருத்து வெளிப்பாட்டின் மூலம் சம்பந்தன், நல்லாட்சி அரசை சிக்கலில் மாட்டி விட்டுள்ளார். நல்லாட்சி அரசு, நாட்டின் வடபகுதியில் தன்னால் மட்டுமே அமைதியை ஏற்படுத்த இயலுமெனக் கூறியே, பன்னாட்டுச் சமூகத்தின் நம்பிக்கையை ஈட்டிக் கொண்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபை மகிந்தவின் கழுத்துக்குத் தடம் வைத்தாலும், நல்லாட்சி அரசு தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி மகிந்த–ரணில் அரசு,

> **சம்பந்தனது மேற்குறித்த கருத்து, விடுதலைப் புலிகளுக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பதான நாட்டுப் பற்றாளர் தரப்பின் தலையில் ஓங்கிக் குத்து விடும் வகையிலான ஒன்றாகும். தமது அந்தக் கருத்து வெளிப்பாட்டின் மூலம் சம்பந் தன், நல்லாட்சி அரசை சிக்கலில் மாட்டி விட்டுள்ளார்.**

மகிந்தவின் கழுத்துக்கு வைக்கப்பட்ட தடத்தை விலக்கி உதவியது. ஆனால் நல்லாட்சி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவேளை தொடக்கம், புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள், நல்லாட்சி அரசும் தமிழ் மக்களை ஏமாற்றியே ஆகும் எனக் கூறி வருகின்றனர். அமெரிக்கா, பிரிட்டன் உட்பட்ட மேற்குலக நாடுகள், இலங்கை அரசின் கழுத்துக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையால் போடப்பட்ட தடத்தை இறுகாமல் விலக்கியபோது, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் அதற்குத் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டன. ஆனால் சம்பந்தனோ, "நாம் நல்லாட்சி அரசுக்கு பிரச்சினையைத் தீர்க்க கால அவகாசம் வழங்கிப் பார்ப்போம்" எனக் கூறினார். ஆனால் நாள்கள் கழியக் கழிய, தற்போது சம்பந்தனுக்கு வடபகுதியின் அழுத்தம் அதிகரித்து வருகின்றது. அதனாலேயே சம்பந்தன் இன்று நல்லாட்சி அரசின் மீது குறை குற்றம் கூற ஆரம்பித்துள்ளார்.

இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கக் கடற்படையுடன் இணைந்து பயிற்சிகளை வழங்க அமெரிக்கா தயாராக உள்ளதாக அமெரிக்கத் தூதுவர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். அமெரிக்கா இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளத் தயாராவதை, பன்னாட்டு மனித உரிமைகள் சபையும் பன்னாட்டு ஊடகங்களும் கண்டித்துள்ளன. அமெரிக்கா இலங்கைப் படையினருக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கு முன்னர், நல்லாட்சி அரசு, போர்க்குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான படை அதிகாரிகளை சேவையிலிருந்து விலக்கி படைப் பிரிவுகளை தூய்மைப் படுத்த வேண்டுமென உலகப் பிரசித்தி பெற்ற சஞ்சிகை ஒன்று தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. நல்லாட்சி அரசு போர்க் குற்றச்சாட்டுக்கு ஆளான படை அதிகாரிகளைப் பாதுகாக்க முயல்வதாகக் குறித்த சஞ்சிகை குற்றஞ் சாட்டியுள்ள போதிலும், அமெரிக்கா இவை எவற்றையும் கணக்கில் எடுக்காது, இலங்கைப் படையினருடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்ளத் தயாராகி வருகிறது.


இதேவேளை மகிந்த தரப்பினரும், நாட்டுப்பற்றாளர் தரப்பினரும் அமெரிக்கத் தூதுவரின் மேற் குறிப்பிட்ட கருத்து, எமது தீரமிக்க படையினரது திறமையை மலினப்படுத்துவதற்கான முயற்சியெனக் கண்டித்துள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமெரிக்காவின் உதவி, எமது படையினருக்கு அவசியம் இல்லையென அந்தத் தரப்பினர் கூறியுள்ளனர். ஆனால் அமெரிக்கா இலங்கைப் படையினருடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக உண்மையில் வலிப்பது விடுதலைப்புலிகள் ஆதரவு புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுக்கே ஆகும்.

அப்படியானால் விடுதலைப் புலிகள் ஆதரவு புலம் பெயர் தமிழர் அமைப்புக்களுக்கும், மகிந்

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தந்திரமான காய் நகர்த்தல்களுக்குப் பழக்கப்பட்டுப்போன இலங்கை ஆட்சிகள்

யாழ்.ஆனந்தன்

யாழ்ப்பாணத்துக்கான ஐ.நா செயலாளர் நாயகத்தின் வருகை, ஈழத்தமிழர் வரலாற்றில் ஒரு மைற்கல்லாகக் கருதப்படல் வேண்டும். தமிழரின் கல்வியின் அடையாளமான யாழ். பொதுநூலகத்தில் வைத்து ஐ.நா. செயலாளர் நாயகம் வடக்கின் முதலமைச்சரைச் சந்தித்தமை மிகவும் அரிய நிகழ்வாகும். ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் உடன் வந்தவர்கள் முதலமைச்சர் கூறியவற்றை ஆமோதித்த தன்மை காணப்பட்டது. அடுத்து வலி. வடக்கில் வீமன்காமம் பகுதியில் மீள் குடியேற்றப்பட்ட மக்களை அவர் நேரடியாகச் சந்தித்துப் பேசியமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழர்கள் படும் அவலங்களையும் அதில் இருந்து அவர்கள் மீள எழும் சூழலையும் இராணுவ ஆக்கிரமிப்புத் தன்மையையும் ஐ.நா. செயலாளர் நாயகம் நேரடியாக மக்களிடம் இருந்து கேட்டறிந்து கொண்டார்.

ஆப்கானிஸ்தானை அமெரிக்கப்படைகள் ஆக்கிரமித்து வைத்த சூழல்போன்ற, ஈராக்கை அமெரிக்க படைகள் ஆக்கிரமித்து வைத்த சூழல்போன்ற, ஒரு சூழலையே ஐ.நா. செயலாளர்நேரிலேயே கண்டு உணர்ந்து கொண்டார். இதனாலேயே வடக்கு கிழக்கில் படைக் குறைப்புச் செய்யப்பட வேண்டும் என கொழும்பில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு அவர் கருத்து வெளியிட்டிருந்தார். அடுத்து, இலங்கையில் 2009 இல் இறுதிப்போர் வேளையில் நடந்த சம்பவங்களில் ஐ.நா தவறு இழைத்து உள்ளது என்பதனை ஏற்றுக் கொண்டமை அவரது இலங்கைக்கான இந்த இரண்டாவது பயணத்தில் இடம்பெற்ற முக்கிய சம்பவமாகும். ஐ.நா.வுக்குரிய இராஜதந்திரமொழியில் ருவாண்டாவில் நடைபெற்ற இனப்படுகொலை மற்றும் சேர்பியாவில் நடைபெற்ற இனப்படுகொலைகளைக் குறிப்பிட்டுவிட்டு, இனிமேல் இவ்வாறு நிகழக் கூடாது என கவனம் செலுத்திய போதிலும், அவ்வாறே இலங்கையிலும் நடந்துள்ளது எனக் கூறாமல் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தில் மக்களுடன் உரையாடும்போது குறிப்பாக ஆண்களுக்கு, வீட்டில் சமாதானமாக இருத்தல் பற்றியும், அயலவர்களுடன் சமாதானமாக இருத்தல் பற்றியும் கூறி, சமூகத்தில் சகிப்புத்தன்மையை கடைப்பிடிக்க வேண்டும் என்று வழிகாட்டுகின்றார். உண்மையான சமாதானம் ஏற்படல் வேண்டும் என அவர் மனதார விரும்புகின்றார். அவரது அத்தகைய அக்கறை சிறு குழந்தை மீதான அரவணைப்புப் போன்று இளம் சமூகத்தின் வளமான எதிர்காலத்துக்கான அக்கறையாக அமைகின்றது. திடீர் நூடில்ஸ் தயாரிப்பதுபோன்று, இலங்கை அரசு, ஐ.நாவுக்கு தனது நல்லிணக்கச் செயற்பாடுகள் மீதான அக்கறை குறித்த போக்கை மிகவும் பௌவியமாகக் காட்டியது. இலங்கை அதிபரும் பிரதமரும் படைவீரர்களைத் தண்டிக்கமாட்டோம் என பல தடவைகள் அறிவித்துவிட்டு, உள்நாட்டு விசாரணை என்றும், கால அவகாசம் தேவை எனக் கேட்பதும் மீளவும் தமிழரை அழிப்பதற்கும் நாட்டை முற்று முழுதாகச் சிங்கள மயப்படுத்துவதற்கும் ஆகும். இலங்கை சிங்கள அரசியல் வாதிகளுக்கு ஐ.நாவின் பலம், பலவீனங்கள் நன்கு தெரியும். உலகின் வல்லரசுகளின் உதவியுடன் தமக்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்களில் இருந்து விடுபடமுடியும் என்பதும் தெரியும். அவ்வாறு அமையாது போகும் பட்சத்தில், இந்தியாவின் துணை அதற்குக் கிடைக்கும். இலங்கையில் உள்ள புனர்வாழ்வு முகாம்களுக்குச் சென்ற விடுதலைப் போராளிகளை கைது செய்தும், இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் மத்தியில், சில வன்முறைகளை ஏற்படுத்தியும், தற்போதைய ஐ.நாவின் அழுத்தங்களில் இருந்து இலங்கை அரசு சுலபமாக வெளியேறிவிடும். பிறகென்ன? வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகவே ஈழத் தமிழர் பிரச்சினை தொடரத்தான் போகிறது.

> ஆப்கானிஸ்தானை அமெரிக்கப் படைகள் ஆக்கிரமித்து வைத்த சூழல் போன்ற, ஈராக்கை அமெரிக்க படைகள் ஆக்கிரமித்து வைத்த சூழல் போன்ற, ஒரு சூழலையேஐ.நா. செயலாளர் நேரிலேயேகண்டு உணர்ந்து கொண்டார்.

## சுத்துமாத்துக்கு எல்லையே இல்லையா?

போலிச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து நியமனம் பெற்ற 20 ஆசிரியர்கள் சிக்கினர் என்ற தலைப்பில் உதயனில் வெளிவந்த செய்தியை வாசித்து அதிர்ச்சி அடைந்தேன். பொதுவாகப் பரீட்சைகளில் தாம் சித்தி பெறத்தக்க திறமையைக் கொண்டிருக்கவில்லை என உணரும் ஒரு சில மாணவர்கள், எப்படியாவது குறுக்கு வழியில் பரீட்சையில் சித்தி பெற்றுவிட வேண்டுமென்ற முனைப்பில் ஆள்மாறாட்டம் செய்து, கல்வித் திறமை மிக்க வேறொரு இளைஞரையோ, மாணவரையோ தமக்காக பரீட்சை எழுத வைப்பித்து குறித்த பரீட்சையில் சித்தியடைந்த சம்பவங்கள் முன்னர் பல சந்தர்ப்பங்களில் இடம்பெற்றதுண்டு. குதிரை ஓடிப் பரீட்சையில் சித்தி பெறுவது என்று இதனைக் கேலியாகக் குறிப்பிடுவதுண்டு. அந்த அளவுக்கு இந்தத் தவறான நடவடிக்கை சமூகத்தால் புறம் தள்ளப்படுமொன்றாக, மதிப்பற்றதொன்றாகக் கருதப்பட்டது. ஆனால் புனிதமான கற்பித்தல் செயற்பாட்டைக் களங்கப்படுத்தும் வகையில் மாதா, பிதா, குரு, தெய்வம் என தெய்வத்துக்குச் சமமாக மதிக்கப்படும் ஆசிரியர்களே குறுக்கு வழியில் போலிச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து, புனிதமான ஆசிரிய நியமனத்தைப் பெற்றமை கண்டு பிடிக்கப்பட்டதான செய்தி, கற்பித்தல் தொழிலை நேசிக்கும், அர்ப்பணிப்புணர்வு மிக்க ஆசிரிய சமூகத்தையே வெட்கித்தலை குனிய வைக்குமொன்று. எந்தச் சுத்துமாத்தும் என்றோ ஒருநாள் வெளிப்பட்டே தீரும் என்பதை நம்பும் அதேவேளை, போயும் போயும் புனிதமான இந்தக் கற்பித்தல் தொழிலில் கூடவா இந்தச்சுத்துமாத்து ஊடுருவி உள்ளதென ஆச்சரியப்பட வேண்டியுள்ளது.

கே. ரமேஸ், கோப்பாய்.

## தமது இஷ்டப்படி பயணப் பாதையை மாற்றும் பஸ் சாரதிகள்

யாழ்ப்பாணம்-காரைநகர், டச்சு வீதியூடான 785/1 வழித்தட பஸ்சேவையை நம்பி டச்சு வீதி (மூளாய் சித்தன்கேணி) யிலும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் வதியும் மக்களில் அனேகமானோர் உள்ளனர். ஆனாலும் சில சமயங்கள் இந்த வழித்தட சேவை பயணிகளது காலை வாரிவிடுவதுபோல் மேற்கொள்ளப்படுகின்றமையை மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்த பஸ் சேவைக்காக யாழ்.நகரில் குறிப்பிட்டதொரு இடத்தில் காலை 8.15 மணியில் இருந்து காத்திருந்து (காலை 8.15 க்கும் 8.30க்கும் இடையில் குறித்த இடத்துக்கு அந்த பஸ் வருவது வழக்கம்) அரைமணி நேரத்தின் பின்தான் அன்றைய தினம் அந்தச் சேவை நடைபெறவில்லை என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. ஏதோ கூட்டம் ஒன்றுக்காக சில சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறுவதாகவும் அதன் காரணமாக குறித்த சேவை நிறுத்தப்பட்டிருக்கலாம் எனப் பேசிக் கொண்டனர். இது எந்த அளவுக்கு உண்மையானதோ தெரியாது. இந்தச் சேவை மறுநாள் திங்கள் நடை பெற்றது. இதே சேவையை எதிர்பார்த்து 6ஆம்திகதி செவ்வாய் காலை 8.15 மணியிலிருந்து வண்ணை சிவன் கோயிலடியில் காத்திருந்தபோது யாழ்.பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட குறித்த பஸ், கே.கே.எஸ்.வீதி, சிவன் வடக்கு வீதி வழியில் பயணிக்காமல் (789 தவிர்ந்த அரச, தனியார் பஸ்களும் இதே வழியால்தான் சேவையில் ஈடுபடுகின்றன) கஸ்தூரியார் வீதியில் இருந்து திரும்பி நேராக மானிப்பாய் வீதி வழியாக சென்று விட்டதாக அறியமுடிந்தது. ஏன் இப்படி வழமைக்கு மாறாக நடந்து கொள்கிறார்கள் என்பது தான் புரியவில்லை. அரச, தனியார் பஸ்களுக்கான இணைந்த நேர அட்டவணைப்படியான போக்குவரத்துச் சேவை கடும் நிபந்தனைகளுடன் வடக்கில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், போக்குவரத்துச் சேவையைக் கண்காணிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் பத்திரிகைச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது வரவேற்கத்தக்கது, பயனுள்ளது. ஆனால் தாம் நினைத்தபாட்டுக்கு வழித்தடத்தை மாற்றி பஸ்ஸைச் செலுத்தும் அரச பஸ் சாரதிகளது செயற்பாட்டைத் தடுக்க என்ன செய்யலாம் என்பது குறித்துப் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள இ.போ.ச.சாலை அதிகாரிகள் முன்வருவார்களா?


வே.கி.ஆனந்தன். சிவன்கோயிலடி
யாழ்ப்பாணம்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவால் அவமானம்: டொனால்ட் ட்ரம் தெரிவித்தார்

வொஷிங்டன், செப். 10
ஒபாமாவும், கிலாரி கிளிங்டனும் இணைந்து நாட்டை மோசமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளனர். அவர்களால் அமெரிக்காவுக்கு அவமானம் எனத் தெரிவித்தார் டொனால்ட் ட்ரம். அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. தேர்தல் பிரச்சாரங்கள் சூடு பிடித்துள்ளன. அமெரிக்காவின் இரு பிரதான கட்சிகளில்,



குடியரசுக்கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக கிலாரி கிளிங்டன் ஆகியோர் உள்ளனர். மெக்சிக்கோவுக்கு எதிராக சுவர் கட்டப்படும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை நிறுவியவர் ஒபாமா, அகதிகள் அமெரிக்காவுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள், அவ்வாறு அனுமதிக்கப்பட்டு குடியுரிமை பெறாமல் இருக்கும் அகதிகள் திருப்பி அனுப்பப் படுவர் போன்ற தேர்தல் முழக்கங்களால் சர்ச்சைகள் பலவற்றை ஏற்படுத்திய டொனால்ட் தற்போது ஒபாமாவாலும், கிலாரியாலும் அமெரிக்காவுக்கு அவமானம் என்றும் குறிப்பிட்டார். அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். முன்னதாக அமெரிக்க அரசு பிரச்சார ஒழுக்கத்தைப் பேணுமாறு அவருக்கு எச்சரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)



## உலகை மிரட்டும் வடகொரியா

# கண்டம் விட்டு கண்டம் பாயும

# அணுகுண்டு நேற்றுச் சோதனை

பியாங்யாங், செப்.10
கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அணுகுண்டை நேற்று (இலங்கை நேரப்படி காலை 6 மணி) சோதித்தது வடகொரியா.
ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, உலகின் ஏனைய நாடுகள் பலவும் வடகொரியாவின் அணுவாயுத சோதனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற போதிலும், அந்த நாடு தொடர்ந்தும் தனது சோதனைகளை முன்னெடுத்து வருகிறது. இது வடகொரியாவின் ஐந்தாவது அணுகுண்டுச் சோதனையாக அமைந்தது. இதுவரை மேற்கொள்ளப் பட்டவற்றில் நேற்று நடத்தப்பட்ட அணுகுண்டுச் சோதனையே மிகவும் சக்தி வாய்ந்தது என்று வடகொரியா அறிவித்தது. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை வடகொரிய இதுவரை சோதித்துள்ள போதிலும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அணுகுண்டுச் சோதனை நடத்தப்பட்டது இதுவே முதல் தடவை.
புஞ்சி என்ற பகுதியிலேயே இந்தச் சோதனை நடத்தப்பட்டது. சோதனையின் போது 5.3 ரிச்டர் அளவில் நில அதிர்வு உணரப்பட்டதாக அயல் நாடான தென்கொரியா தெரிவித்தது. இதனை உறுதிசெய்த அமெரிக்க புவியியல் திணைக்களம், இது ஒரு செயற்கையான அதிர்வு எனவும் குறிப்பிட்டது. இந்த அளவு, கடந்த ஜனவரியில் வடகொரியா செய்த சோதனையின் இரு மடங்காகும். அணுகுண்டுச் சோதனை நடத்தப்பட்ட சில மணி நேரங்களில் தென்கொரியா தனது கண்டனத்தை வெளியிட்டது. வடகொரிய ஜனாதிபதி கிம் ஜே
உன், தொடர் அணுகுண்டுச் சோதனைகளால்
னாட்டு வெறுப்பைச் சம்பாதிக்கிறார். இவ்வாற
முயற்சிகள் தன்னை தானே அழித்துக் செ
வதற்கு சமனானது. இது உலகின் அமைதின
கெடுக்கும் செயல் என தென் கொரிய ஜனாத
தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டார்.
குறித்த சோதனையால் காற்றில் பரவியுள்ள இ
யன மாற்றத்தை அவதானிக்க அமெரிக
ஆளில்லா விமானங்களை அனு து. கதிர் தெ
பாட்டை அளவிட ஜப்பான் நான்கு ஆளில்
விமானங்களை அனுப்பியது. சோதனை நட
பட்டதாகக் கருதப்படும் இடத்தின் செயற்
கோள் ஒளிப்படங்களும் ஆராயப்பட்டன. (ம-

# சீனப் பெருஞ்சுவரை பாதுகாக்க நிதி சேகரிப்புப் பணி ஆரம்பம்

பீஜிங், செப். 10
உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் சேதமடைந்ததை அடுத்து, சீனாவின் கலாசாரங்களைப் பாதுகாக்கும் அமைப்பு சீனப் பெருஞ்சுவரைச் சீரமைப்பதற்காக நிதி திரட்டும் நடவடிக்கையில் களமிறங்கியது.
500 வருடங்கள் பழைமை வாய்ந்த சீனச்சுவர், சீனாவின் 9 மாகாணங்களை ஊடறுத்து, 21ஆயிரம் கிலோமீற்றருக்கு வியாபித் துள்ளது. சமீபகாலமாக சீனப் பெருஞ்சுவரில் பல சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சேதங்களைச் சீர்செய்வதற்காக இலங்கை மதிப்பில் 23 கோடியே 3 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இதனையடுத்தே குறித்த அமைப்பு நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அறிய வருகிறது. (ம-ரி4)



# குருதி நிறத்துக்கு மாறிய ஆறு

மொஸ்கோ, செப்.10
ரஷ்யாவின் நொர்ல்ஸ்க் பகுதியில் உள்ள ஆறு குருதி நிறத்தில் மாறியதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமையில் இருந்து இந்த மாற்றத்தை அவதானித்ததாக அவ்விடத்தில் வசிக்கும் மக்கள் பன்னாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.
டல்யிகான் என்ற ஆறே இவ்வாறு சிவப்பாக மாறியது. இந்த மற்றத்தில் காலநிலை பாதிப்பு செலுத்தியிருக்குமா? என்று சுற்றப்புறச் சு
ஆர்வலர்கள் சோதனை நட
வருகின்றனர். உலகிலேயே அ
நிக்கலை உற்பத்தி செய்யும் நடீஸ்
உலோக ஆலையின் கழிவு
குறித்த ஆற்றிலேயே கலக்கின்ற
இதனால் ஆறு குருதி நிறத்து
மாறியிருக்கலாம் என்றும் கருதப்
கின்றது.
நிபுணர்கள் இது தொடர்பாக
சோதனைகளை நடத்தி வருகி
னர். (ம-

# அமெரிக்க இராணுவத்திலிருந்து ஐ.எஸ்ஸில் இணைந்த சிப்பாய்

டமஸ்கஸ், செப். 10
அமெரிக்க இராணுவச் சிப்பாய் ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்து பதவி உயர்வு பெற்றுள்ளார் என ஈராக் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.
அமெரிக்க இராணுவத்தில் சிப்பாயாக இருந்த குல்ரோட் கலிமூவ் என்ற நபரே அவ்வாறு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்தவராவார். அவர் தனது பெயரை தஜிக் என்று மாற்றியுள்ளார். குல்ரோட் கலிமூவுக்கு ஐ.எஸ்.



அமைப்பின் போர் அமைச்சராக பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. இந் தத்தகவலைஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வில்லை. அவ்வாறு அறிவித்தால் தமக் கெதிராக அமெரிக்கா மேற்கொண்டுவரும் வான் தாக்குதல் இன்னும் அதிகரிக்கக்கூடும் என்ற அச்சத்திலேயே ஐ.எஸ்.ஐ.எஸ். குறித்த விடயத்தை இரகசியமாகப் பேணுவதாக ஈராக் ஊடகம் செய்தி வெளியிட்டது.
இதனையடுத்து கலிவ் மூவை கைது செய்ய தகவல் வழங்குபவர்களுக்கு இலங்கை மதிப்பில் 26 கோடி வழங்கப்படும் என அமெரிக்கா அறிவித்தது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமா - டுடேர்தே திடீர் சந்திப்பு

வொஷிங்டன், செப். 10
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடேர்தேயும் சந்தித்துக் கலந்துரையாடினர் எனப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

14 ஆவது ஆசியன் மாநாடு லாவோஸ் நாட்டில் நடைபெற்றது. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் இதில் கலந்துகொண்டார். பிலிப்பைன்ஸின் புதிய ஜனாதிபதி டுடேர்தேயும் கலந்துகொண்டார். ஒபாமா-டுடேர்தே சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. குறித்த சந்திப்பில் ஒபாமா, டுடேர்தே பதவியேற்ற பின்னர் போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கு எதிராக அவர் கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருவதும், எந்தவிதமான சட்ட நடிவடிக்கைகளும் இல்லாமல் கடத்தல்காரர்கள் கொலை செய்யப்படுவது தொடர்பாகவும் கலந்துரையாடத் திட்டமிட்டார். இதனையடுத்து கோபமடைந்த டுடேர்தே, ஒபாமாவுக்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்ததுடன் அவரை விபச்சாரியின் மகன், பெட்டை நாயின் மகன் என விளித்திருந்தார். பிலிப்பைன்ஸின் விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்றும் எச்சரித்தார். இது உலகெங்கிலும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந் தது.

இதனையடுத்து ஒபாமா-டுடேர்தே சந்திப்பை கைவிடுவதாக வெள்ளை மாளிகை அறிவித்தது. இந்தநிலையில்தனது கருத்துக்காக டுடேர்தே மன்னிப்புக் கேட்டதையடுத்து இருவருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. ஆசியன் மாநாட்டில் பங்கேற்ற தலைவர்களுக்கான விருந்து நிகழ்ச்சியில் வைத்தே இவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டனர். (ம-ரி4)





# தமிழ்நாட்டுக்கு காவிரி; முடங்கியது கர்நாடகா

தமிழகத்துக்கு காவிரி நீர் வழங்கப்பட்டதைக் கண்டித்து கர்நாடக மாநிலம் முழுவதும் நேற்று முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழ் நாட்டின் விவசாய மாவட்டங்களில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா பயிரிடப்பட்டுள்ளது. போதிய நீர் இல்லாததால் நெற்செய்கை பாதிக்கப்பட்டது.

இதனை யடுத்து இந்த விவகாரம் இந்திய உச்ச நீதிமன்றத்திடம் எடுத்துச்செல்லப்பட்டது. வழக்கை விசாரித்த மன்று வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் 10 நாள்கள் தண்ணீர் வழங்குமாறு உத்தரவிட்டது. முதல் கட்டமாகக் கடந்த செவ்வாய்க்கிழமை தண்ணீர் வழங்கப்பட்டது.

இதற்கு கடந்த சில தினங்களாக கர்நாடகாவில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. நேற்று முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

கர்நாடகாவின் இயல்புவாழ்க்கை முழுவதுமாக ஸ்தம்பிதமானது. பெங்களூர் விமான நிலையத்தின் முன்பாகப் பெண்கள் போராட்டம் நடத்தினர். நூற்றுக் கணக்கான பெண்கள் கைது செய்யப்பட்டனர். கர்நாடகம், தமிழ்நாடு முதல்வர்களின் உருவப்பொம்மைகள் எரிக்கப்பட்டன. அச்சம் காரணமாக கர்நாடகாவில் வாழும் தமிழர்களும் முழு அடைப்புக்கு ஒத்துழைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-ரி4)

ஆண்டுகள் ஏழு ஆன பின்பும்
ஆறவில்லை உம் நினைவு
மண்ணோடு 06.07.1951
கண்ணோடு 28.08.2009



அமரர்
சின்னத்தம்பி
செல்வராஜா
(மாயவன் பாரவூர்தி உரிமையாளர்)



ஆண்டுகள் ஏழு ஆனபோதும் அப்பா!!
உங்கள் நினைவுகள் இன்னும் நீங்கவில்லை
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் நீங்கள் இருந்து
எமக்காய் என்றும் ஒளிவீசினீர்கள்
எம்மை விட்டு நீங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்முடனே
எங்கள் உயர்வுக்கு எல்லாம்
உங்கள் ஆசீர்வாதம் என்றும் இருக்கின்றது
ஏழு ஆண்டுகள் என்ன நூறாண்டுகள் ஆனாலும்
உங்கள் கள்ளமில்லாச் சிரிப்பும் நேசமும்
மறைந்து போகுமா எம்மை விட்டு

திதி:- நவமி
(10.09.2016)

என்றும் உங்கள் நினைவுகளுடன் நாம்
குடும்பத்தினர்.
சங்கானை வீதி, அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர்

**செப்ரெம்பர் 1 முதல்31 வரை**

## துலாம்

நியாயமான திட்டங்களுக்கு ஆதரவு அளித்து அடுத்தவர் மதிப்பை பெறும் துலா ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் ஆக்கபூர்வமான யோசனைகளை செயற்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். தெளிவான மனநிலை இருக்கும். ராசிநாதன் சுக்கிரன் சஞ்சாரத்தால் சாமர்த்தியமாக செயல்பட்டு சாதகமான பலன் பெறுவீர்கள். செயற்றிறன் அதிகரிக்கும். ஆனால், உங்களுக்கு எதிராக சிலர் செயற்படும் சூழ்நிலை இருப்பதால் கவனம் தேவை. நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். ரியல் எஸ்டேட் சம்பந்தமான விடயங்களில் இருந்து வந்த மந்த நிலை மாறும். தொழில் ஸ்தானத்தை தன வாக்கு சப்தமாதிபதி செவ்வாய் பார்க்கிறார். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயற்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டு கிடைக்கப் பெறுவார்கள். ஆனால், அலைச்சல் உண்டாகும். குடும்ப ஸ்தானத்தில் சனி இருக்கிறார். குடும்பாதிபதி செவ்வாய் தைரிய ஸ்தானத்தில் நட்பாக சஞ்சரிக்கிறார். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்க மனம் விட்டுப் பேசுவது நன்மை தரும். உறவினர்கள் வருகை இருக்கும். அவர்களிடம் நிதானமாக பேசுவது நன்மை தரும். பிள்ளைகளிடம் கோபம் காட்டாமல் அன்பாக பேசுவது நல்லது. மகிழ்ச்சி உண்டாகும். பெண்களுக்கு எதிலும் சாமர்த்தியமாக செயற்பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள். வீண் அலைச்சல் உண்டாகும். கலைத்துறையினருக்கு உடன் பணிபுரிபவர்களுடன் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. எனவே அனுசரித்துச் செல்வது நல்லது. பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வீண் அலைச்சல் ஏற்படலாம். ஆனாலும், சுக்கிரன் சஞ்சாரத்தால் மனதில் இருந்த குழப்பம் நீங்கி நிம்மதி உண்டாகும். கடன் பிரச்சினை தீரும். அரசியல்துறையினருக்கு நீங்கள் அவசரப்படாமல் நிதானமாக எதையும் செய்தால் வெற்றி நிச்சயம்.


இந்தக் காலகட்டத்தில் எதிர்ப்புகள் விலகும். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்களின் நட்பும் அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். சூரியன் சஞ்சாரத்தால் ஏற்கனவே செய்த ஒரு செயலை நினைத்து வருந்த நேரிடும். மாணவர்களுக்கு செயல் திறமை அதிகரிக்கும். உயர்கல்வி கற்பவர்கள் கூடுதல் கவனத்துடன் பாடங்களைப் படிப்பது நல்லது.

**பரிகாரம்:** ஸ்ரீசரஸ்வதி தேவதையை பூஜித்து வர அறிவுத்திறமை அதிகரிக்கும். கல்வியில் வெற்றி உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** திங்கள், வெள்ளி.




மருத்துவர்
இரத்தினசிங்கம் சிவசங்கர்



# தானங்களில் உயர்ந்தது குருதித் தானம்

அன்புடையார் என்பும் உடையார் பிறர்க்கு என்பது பெரியோர் வாக்கு. அன்பு செலுத்துவதால் திருப்தியும், மகிழ்ச்சியும் கிடைக்கின்றன. எம்மிடத்தில் உள்ளதைப் பலருக்கும் பகிர்ந்து கொடுப்பதால் ஏற்படுகின்ற மகிழ்ச்சி எனக்கு எனக்கு என்று பொத்தி வைத்திருப்பதால் கிடைப்பதில்லை. அன்பினால் உதவி செய்கின்ற மனம் விசாலமடைகின்றது. மனவிசாலம் சாந்தியை ஏற்படுத்துகின்றது. மனச்சாந்தியே நாம் அடையும் இறுதிச் சுகமாகும்.

எமக்குத் தெரிந்தவர்களுக்கு நாம் செய்யும் உதவியால் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் எமக்குத் தெரியாதவர்களுக்குச் செய்யும் உதவியால் நாம் அதிக மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்வோம். காலம் அறிந்து பிறருக்கு நாம் செய்யும் உதவி எமக்கு மன நிம்மதியைத் தருகின்றது. இந்தப் பிரபஞ்சத்திலுள்ள அனைத்து உயிர்களுடனும் உள்ளார்ந்த நிலையில் நாம் தொடர்புபட்டிருக்கிறோம். பிணைக்கப்பட்டிருக்கிறோம். அதனாலேயே மற்றவர்களின் வருத்தம் எமக்கு மனத்துன்பத்தைத் தருகின்றது. அதனால் மற்ற உயிர்களின் வருத்தத்தை நாம் குறைக்கும்போது எமது மனம் சுகம் பெறுகின்றது. இது நாம் எல்லோரும் பெற்றிருக்கும் அனுபவமாகும்.

மேலும் ஏதேதோ வகையில் பல்வேறு குறைபாடுடைய குணாம்சங்களுடன் பிறந்திருக்கும் நாம் எம்மை மேலான குணாம்சம் பெற்றவர்களாக வளர்த்துக் கொள்ள முனைகின்றோம். அதற்கான வழிவகைகளைத் தேடுகின்றோம். அல்லற்படுபவர்களை ஆற்றுப் படுத்துவதே எம்மை நல்ல குணாம்சம் உடையவர்களாக வளர்த்துக் கொள்ள உதவும் வழியாகும்.

*அன்பிலா கடமை வெறுக்கத்தக்கது*
*அன்புடன் கடமை விரும்பத்தக்கது*
*கடமையில்லா அன்பு தெய்வீகமானது*
என்றார் சத்தியசாயிபாபா

எமக்கு வேண்டியவர்கள், உறவினர் மற்றும் நண்பர்களுக்கு உதவி தேவைப்படும்போது வேண்டா வெறுப்பாகக் கடமைக்காக அன்பற்ற நிலையில் உதவி செய்வது வெறுக்கத்தக்கது. எமக்கு கடமை என்று வருகின்ற விடத்து அன்புடன் அவற்றை நிறைவேற்றுவதே விரும்பத்தக்கது. ஆனால் எமக்கு கடமையென்று இல்லா நிலையிலும் அன்பின் நிமித்தம் உதவி செய்வது எம்மைத் தெய்வீகக் குணங்களுக்குரியவர்களாக உயர்த்தி விடுகின்றது. மனிதனும் தெய்வமாகலாம் எனும் நிலை இதனால் அடையப்படுகின்றது.

பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட சேவை செய்யும் கரங்கள் உயர்ந்தவை என்று சத்தியசாயி பாபா கூறுகின்றார். அத்துடன் இருகரம்கொண்டு இறைவனை வணங்குவதை விட ஒருகரம் நீட்டிப் பிறருக்கு உதவி செய்தல் எம்மைத் தெய்வமாக்கி விடுகின்றது [illegible] ஞாலத்தில் பெரிது. மேற்கூறிய அனைத்தையும் உள்வாங்கிப் பார்க்கும்போது, தற்போதைய காலத்தில் குருதித்தானம் செய்வது மேற்கூறிய விளைவுகளை எம்மில் ஏற்படுத்தும் என்பதைக் கண்டு கொள்ளலாம். அவசர தேவையில் உயிருக்குப் போராடும் முகம் தெரியாத உயிர்களைக் காப்பாற்றும் புண்ணியமான, உத்தமமான செயலே குருதித்தானம் ஆகும். தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுப்பதற்கு ஒப்பானதே தவிக்கும் உயிருக்கு குருதி வழங்குவது ஆகும். தினசரி எத்தனையோ உயிர்கள் குருதி ஏற்றுவதால் காப்பாற்றப்படலாம். குறித்த வகைக் குருதி குறித்த நேரத்தில் கிடைக்காமையால் உயிர் பிரியும்கர்ப்பிணித்தாய்மார்களும், சிறுவர்களும் இருக்கின்றனர். [illegible] சில வியாதிகளின் நிமித்தம் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் குருதி ஏற்றுவதாலேயே சிறுவர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவசர தேவையின் போது குருதித்தானம் செய்து உதவும் முகம் தெரியாத கதாநாயகர்களால் பல உயிர்கள் தொடர்ந்து காப்பாற்றப்பட்டு வருகின்றன. அந்த இனம் தெரியாத உத்தம கதாநாயகர் பட்டியலில் அன்புள்ளம் கொண்ட அனைவரும் இணைந்து கொள்வது அனைவருக்கும் நன்மையே ஆகும்.

அன்பின் நிமித்தம் தானம் செய்யப்படும் இந்தக் குருதியைத் திரவ அன்பு என்று பாபா போற்றிக் கூறி இருக்கின்றார். இறை அன்பே எம் அனைவரையும் போசித்துக் காத்து வருகின்றது. எமது திரவஅன்பு அந்தரிக்கும் உயிர்களைக் காத்து உயிர்ப்பிக்கட்டுமே! மனமிருந்தால் இடமுண்டு. ஆம் எத்தகைய கெடுதல்களையும் எமக்கு ஏற்படுத்தாத இந்தப் புனிதமான உத்தமமான குருதித்தானச் செயலுக்கு எமக்குத் தேவைப்படுவது எமது மனவிருப்பமே. மனம் கொண்டால் இதை ஆற்றலாம். தடை, கெடுதல் ஏதும் இல்லை.

18 வயது அடைந்து 50 கிலோ கிராம் உடல் நிறைக்கு மேற்பட்டோர் சாதாரண ஆரோக்கிய நிலை இருப்பின் குருதித்தானம் செய்யும் தகுதியைப் பெறுகின்றனர். அடிப்படை உடல் பரிசோதனை வைத்தியர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட பின்னர் குருதித்தானம் செய்ய அனுமதிக்கப் படுவார்கள். குருதித்தானம் செய்ததன் பின்னர் விசேட கவனிப்பு எதுவும் தேவையில்லை. தேவையான அளவு நீராகாரம் எடுத்த பின்னர் தத்தமது நாளாந்த வேலைகளைக் கவனிக்கக் கூடியவர்களாக இருப்பர். மேலதிக சத்தான உணவுகள் எடுத்துக் கொள்ளும் தேவையும் இல்லை. ஒருவர் தானமாக வழங்கும் குருதி செங் குழியங்கள்,

(23ஆம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வவேலாயுதம்

புது வருடப்பிறப்புக்காக மதுக்கடைகள் பூட்டு, அதனை மீறி மதுபானம் விற்பனை செய்வோர்கைது செய் யப்படுவர் என்று அரசு அறி விக்கும் செய்திவரும். இதனைக் கேலிசெய்வது போன்று புது வருடத்திற்கு முன்பின்னான ஐந்து தினங்களில் போதையில் வாகனம் செலுத்திய 800 இற்கும் மேற்பட்டோர் பற்றியும் போதையில் நடந்த அடிதடிகளில் கைது செய்யப்பட்டோர் பற்றியும் செய்திகள் வரும். அப்படியானால் இது எப்படி நிகழ்கிறது?



# பதில் தேடும் கேள்விகள்

நல்லூரானின் பெருந்திருவிழாவும் நடந்து முடிந்து விட்டது. வழிபட வந்தவர்கள் வழிபட்டார்கள். பொழுது போக்க வந்தவர்கள் பொழுதைப் போக்கிக் கொண்டார்கள். வியாபாரம் செய்ய வந்தவர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். கலை நிகழ்வுகளைக் காணவந்த ஆர்வலர்கள் அவற்றில் மூழ்கித்திளைத்துக்கொண்டார்கள். அன்னதானங்களை எதிர்பார்த்து வந்தவர்கள் பசியாறிக் கொண்டனர். இப்படியாக நல்லூரான் திருவிழாக்கள் பல்வேறு வழிகளில் பலவாறாகப் பயன்பட்டிருக்கின்றன. எமது வாழ்வியல் பண்பாடுகளும் ஆசாரங்களும் இந்த இருபத்தியைந்து நாள்களும் எம்மவர்கள் போய்வருமிடங்களிலும் வாழிடங்களிலும் கோலோச்சிக் கொண்டிருந்தன. அந்தளவு தூரத்துக்கு நல்லூரானின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது எம்மவர் பூமி.

ஆலயச் சூழலிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் காணப்பட்ட வித்தியாசமான வாசகங்கள் கொண்ட பதாகைகள் காண்பவர் கவனத்தை ஈர்த்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நாற்றமான, கசப்பான, எரிவான சாராயத்தை மகிழ்ச்சியெனப் பொய்சொல்லி இளைஞர்களை ஏமாற்ற முற்படுவது யார்?

இவைபார்ப்பவர் கவனத்தை ஈர்த்ததோ இல்லையோ, பருகுபவர் கவனத்தை நிச்சயம் ஈர்த்திருக்கலாம். இந்தக் கேள்விக்கான பதில் முன்பள்ளிப் பிள்ளைக்குக்கூடத் தெரிந்திருக்கும். ஆனால் வெளியே சொல்வதற்குத்தான் துணிவு வருமா?

புது வருடப்பிறப்புக்காக மதுக்கடைகள் பூட்டு, அதனை மீறி மதுபானம் விற்பனை செய்வோர் கைது செய்யப்படுவர் என்று அரசு அறிவிக்கும் செய்திவரும். இதனைக் கேலிசெய்வது போன்று புது வருடத்திற்கு முன்பின்னான ஐந்து தினங்களில் போதையில் வாகனம் செலுத்திய 800 இற்கும் மேற்பட்டோர் பற்றியும் போதையில்நடந்தஅடிதடிகளில் கைது செய்யப்பட்டோர் பற்றியும் செய்திகள் வரும். அப்படியானால் இது எப்படி நிகழ்கிறது?

பொதுவாக பத்திரிகையிலோ, வானொலி தொலைக்காட்சியிலோ, கைபேசிக் குறுந்தகவலாகவோ, பொருள்களின் விலை அதிகரிப்புப்பற்றிய செய்திவரும்போதும், முழு அடைப்புப் போராட்டங்கள், காரணமாக வணிக நிலையங்கள் திறக்கப்படமாட்டா என்றாலும், மக்கள் உணவுப் பொருள்கள், எரிபொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பண்டங்களை முற்கூட்டியே வாங்கிவைத்துக் கொள்வார்கள். எமது பெண்களின் மனைப் பொருளாதரம் அப்படியானது.

இந்தக் குடிமக்கள் விடயத்தில் மட்டும் இல்லத்தரசிகள் மதுபான வகைகளை பவர் ஸ்ரொக்காக வைத்துப் பேணமாட்டார்கள். ஆனாலும் புத்தாண்டுக்கு பார்பூட்டு, போயாவுக்கு பார் பூட்டு என்பதெல்லாம் குடிமக்களை ஒன்றும் செய்துவிட முடியாது. இப்படியான அறிவிப்புக்கள் வெளியாகும் போதே மதுபானசாலைகளில் அலைமோதும். குடிமக்கள் இதனை ஆதாரப்படுத்துவார்கள். முன்னராக வாங்கி வைத்திருக்க வசதிப்படாதவர்களுக்கு இருக்கவே இருக்கிறார்கள் சட்ட விரோதமாக இவற்றை விற்பனைசெய்வோர். விசேட தினங்களில் மதுக்கடைகளைப்பூட்டும் சட்டங்கள், இப்படியான சட்டவிரோதச் செயல்களைப்புரியும் சமூக விரோதிகளை வாழவைக்கும் தெய்வங்களா?

இலங்கையில் அரசவிடுமுறைகள் அதிகமாக உள்ளனவாம். இதனால் எமது பொருளாதாரம் பாதிக்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனராம். மும்மதங்களைச் சார்ந்தோர் வாழும் இங்கு மதவிடுமுறைகள் அதிகம். குறிப்பாக ஆண்டுக்கு 12 புனித போயா தினங்களிலெல்லாம் மது பான சாலைகள் மூடப்படுகின்றன.

ஆனாலும் மதுபான விற்பனையில் இலங்கை, அதுவும் குறிப்பாக வடக்கும் கிழக்கும் சாதனை படைத்து வருகின்றன. எம்மினத்தைச் சிதைக்க வேண்டும் என்பவர்கள் விதைத்தவைகளில் முளைத்ததுதான், இந்தத் தாராள மதுப் பாவனைக்கான புறச்சூழல்

இங்கு பனஞ்சாராயம் மட்டும் விற்க வேண்டும் என்பது நடைமுறையில் இருந்த காலப்பகுதி அது. அப்போது 500 ரூபா விலையிலான தென்னஞ் சாராயம் இங்கு 1500 ரூபாவாக களவில் விற்கப்பட்டது. அப்படி இங்கு கொண்டு வந்தால் சுளையாக 1000 ரூபா இலாபம். இது கொம்படியூடான போக்குவரத்துச் செலவுகளைச் சரிக்கட்ட உதவுவதாக இருந்தது. நீ கொண்டுவா தம்பி, நானெல்லோ வித்துத்தருவன் என்று தரகுவேலை பார்த்து 100, 200 சம்பாதித்தவர்களும் இருக்கின்றனர். இந்த வகையில் கொழும்பு சென்று திரும்பும் போது 100 ரூபா ஆசையில் ஒரு மெண்டிஸ் போத்தலும் பயணப்பையில் பயணித்து யாழ்ப்பாணத்துக்கு. இராணுவச் சோதனைச் சாவடியில் போத்தலைக் கண்டதும் அவர்கள் கண்களைச் சிமிட்டியபடி, முதுகில் தட்டி உற்சாகமூட்டி அனுப்பி வைத்தனர். வெளியேறி இவர்களின் சோத னைச்சாவடிக்கு வந்தபோது, "உங்கடை பயணப் பெட்டியைத் திறவுங்கோ" என்றார்கள். சாராயப் போத்தல் கண்ணை உருட்டியது. "ஐயா, உங்களுக்குத் தெரியும் தானே தென்னஞ் சாராயத்துக்கு இங்கு தடை என்று. பனஞ்சாராயம் தான் தாராளமாக இருக்குதானே. இதற்குப் பைன் அடிக்கப்போகிறோம்" என்றார் தம்பி ஒருவர்.

ஏற்கனவே புறோக்கர் சொல்லித்தந்து ஒத்திகை பார்த்ததன்படி "தம்பிஎனது தகப்பனாருக்கு வாதப் பிளான் (துகப்பனார் காலமாகி பல வருடங்கள்) தமிழ் வைத்தியர் மருந்து செய்ய தென்னஞ் சாராயம் வேணும் என்டவர், அது தான் தம்பியவை" என்றதற்கு, "சரி ஐயா நீங்கள் இதைக் கொண்டு போகேலாது. ஆனால் நாங்கள் உங்கள் பெயரில் ஒரு பற்றுச் சீட்டைத் தருகிறோம். தமிழ் மருந்துக்கு இதுதேவை என்று வைத்தியரது பரிந்துரையையும் இணைத்து பற்றுச் சீட்டைக் கொண்டுபோய் கந்தர்மடம் வருவாய்த்துறையில் கொடுத்தால் அங்கு அவர்கள் இதை உங்களுக்குத் தருவார்கள்" என்றனர். கிடுக்கிப்பிடிதான் போட்டிருக்கிறார்கள்.

ஐயோ தம்பி உம்மட பற்றுச்சீட்டு வேண்டாம் என்ரை மெண்டிசும் வேண்டாம் என்று கூறிவிட்டு வெளியேறியபோது 1000ரூபா இலாப ஆசை 500ரூபா நட்டத்துடன் போனதே, நல்லவேளை பைன் அடிக்காமல் விட்டார்களே என்பதை நினைக்க பஞ்சம் போகும் பஞ்சத்தில் பட்ட வடு போகாது என்ற முதுமொழி தான் ஞாபகத்துக்கு வந்தது. தென்னஞ் சாராயத்தில் ருசி கண்டவர்களைக் காசைக் காசு என்று பாராமல் செலவிட வைத்து ஏனையோரையும் சிக்கலில் மாட்டிவிடப் பார்த்ததே இந்த மதுபோதை.

பனஞ்சாராயத்தில் 5.5 வீதம் தான் மதுசாரச் செறிவுள்ளது. தென்னஞ்சாராயத்திலோ 33 வீதம்வரை அதாவது சுமார் ஆறு மடங்கு மதுசாரச்செறிவு உள்ளது என்பதை தென்னஞ்சாராயத்தின் பிரியர்களுக்குச் சொல்லிப் பாருங்கள். என்ன தம்பி இரண்டும் சாராயம்தானே என்று சொல்லி உங்களைப் பரிகசிப்பார்கள். பனையை விட தென்னையில் கிக் அதிகம். அது, இவர்களை விரைவில் உலகில் இருந்தே நொக்அவுட் ஆக்கி விடும் என்பதை அவர்கள் உணரும் காலம் அவர்களுக்குக் கடைசிக் காலம் தான். இலங்கைப் பொருளாதாரத்துக்குப் பங்களிப்பு செய்கின்றோம் என்று தமது தலையில் தாமே மண் அள்ளிப் போடுகிறார்களோ?

இவற்றுக்கெல்லாம் நெத்தியடியாக, குடிப்பதில் யாழ்ப்பாணம், நுவரெலியா, மட்டக்களப்பு ஆகிய இடங்கள் முன்னிலையில் உள்ளதாக இந்த நாட்டின் முதற்பிரசையானவர் தெரிவித்திருப்பதுடன், இது ஆரோக்கியமான செயற்பாடு அல்ல எனவும் தெரிவித்திருக்கிறார். தமிழர் என்றொரு இனம் உண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு என்றெல்லாம் ஏற்றப்பட்ட தமிழர்தான் மேற்சொல்லப்பட்ட மூன்று இடங்களிலும் கூடுதலாக வாழ்கிறார்கள் என்பதையும், நல்லூர் ஆலயச் சூழலில் காணப்பட்ட விளம்பரப் பதாகையில் கேட்டிருந்த கேள்விகளுக்கும் ஏதோ ஒருவகையில் 'ஓர் இது' இருப்பது புலனாகின்றதா?

இந்தியத் தொலைக்காட்சி விளம்பரங்களில், 'ஆரோக்கியா' பாலுக்கான விளம்பரம் வரும். அதன் இறுதிக்காட்சியில் 10 சக்கரங்களைக் கொண்ட வண்டி ஆரோக்கியா பால் எனும் பெயருடன் விரையும். எமது மண்ணை நோக்கியும் 10 சக்கரங்களைக் கொண்ட வண்டிகள் போத்தல் போத்தலாகவும், ரின்ரின்னாகவும் பல்வேறு தினுசுகளிலும் ரகங்களிலும் மதுபானத்தைக் கொண்டு வருகின்றமை எங்களவர்களது ஆரோக்கியத்துகாகவா?

இந்தமுறை நல்லூர் நாடகத்திருவிழாவில் நடைபெற்ற செயற்றிறன் அரங்க இயக்கத்தின் 'தூவானம்' நவீன நாடகத்தின் இறுதிக் காட்சியின்போது பின்னணியில் ஒலித்த எம்மினத்துக்கு இது யார் போட்ட சாபமோ என்ற, விரக்தியில் தோய்ந்து வேதனையில் மூழ்கிய சோகப்பாடலின் கேள்விக்கான விடை மட்டும் எவருக்குத்தான் தெரியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRIN
Twitter : UTHAYANPRINT

# வரலாற்றில் இன்றைய தினம்

1823 - பெரு நாட்டின் ஜனாதிபதியாக சிமன் பொலிவர் தெரிவு செய்யப்பட்டார்.

1846 - தையல் இயந்திரத்துக்கான காப்புரிமம் எலியாஸ் கவுஸுக்கு வழங்கப்பட்டது.

1857 - அமெரிக்காவில் 20 ஆயுதமற்ற குடிவரவுவாசிகள் சட்ட நடைமுறைப்படுத்துனர்களால் கொல்லப்பட்டனர்.

1919 - போலந்து, ஹங்கேரி, செக்கஸ்லோவிகியா மற்றும் யூகோஸ்லேவியா ஆகியவற்றுக்கு சுதந்திரத்தை அங்கீகரிக்கும் ஒப்பந்தத்தில், ஒஸ்ரியாவும் கூட்டு நாடுகளும் ஒப்பிமிட்டன.

1936 - முதலாவது மோட்டார் சைக்கிள் ஓட்டப் பந்தயம் இங்கிலாந்தின் வெம்ளி விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

1943 - ஜேர்மன் படைகள் ரோமைஆக்கிரமித்தன.

1960 - ரோமில் நடந்த கோடைக்கால ஒலிம்பிக்கில் வெறுங்காலுடன் ஓடி மரதன் ஓட்டப் போட்டியில் ஆபிரிக்கரான அபீபே பிக்கிலா தங்கப் பதக்கத்தை வென்றார்.

1976 - பிரித்தானிய விமான சேவைக்குரிய ஹங்கர் ட்றைடன் ரக விமானமும் ஜனெக்ஸ் டிசி-9 ரக விமானமும் யூகோஸ்லேவியா ஷக்ஹெப் பிற்கு அருகில் மோதி விபத்துக்குள்ளாகியதில் 176 பேர் உயிரிழந்தனர்.


2002 - வடக்குக் கிழக்கில் அகற்றப்பட்ட 120 படை முகாம்கள் 300 யார் தூரத்தில் மீளவும் அமைப்பு.
- புலிகள் மீதான தடை நீக்கத்துக்கு எதிராக ஜனாதிபதி சட்ட நடவடிக்கை.
- நடுநிலை நாடான சுவிற்சர்லாந்து ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்து கொண்டது

2003 - ஈழத் தமிழ் குற்றக் கும்பல்களை ஒடுக்க லண்டனில் சிறப்புப் பொலிஸ் அதிரடிக் குழு.
- அதிகாரப் பரவலாக்கல், சமஷ்டி ஆட்சி முறை தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆலோசனை வழங்க சுவிஸ் தயார் எனத் தெரிவிப்பு.
- வடக்கு- கிழக்கைப் பிரிப்பதற்கு முஸ்லிம்கள் கோருவது நியாயமில்லையென பிரதியமைச்சர் ஷேகு தாவுத் தெரிவிப்பு.
- ஜப்பானில் 100 வயதைக் கடந்தோர் இருபதாயிரம் பேர் உள்ளதாகக் கணக்கெடுப்பு.

2007 - 1999 இராணுவ சதிப் புரட்சியின் போது நாட்டை விட்டுச் சென்ற பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரிப் 7 ஆண்டுகளின் பின், நாடு திரும்பினார்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## உலகப் பழமொழிகள்

**பாரசீகம்**

- ஒருபிடி உப்பை மன்னன் தனக்கென அள்ளினால் அடுத்த விநாடி உப்பு மலையே காணாமல் போய் விடும்.
- முழுக்க முழுக்க சர்க்கரையாக இருந்து விட்டால் உலகம் உன்னை விழுங்கிவிடும். முழுக்க முழுக்க எட்டிக் காயாக இருந்து விட்டால் உலகம் உன்னை உமிழ்ந்து விடும்.
- புத்தகம் - சட்டைப் பையிலுள்ள பொக்கிஷம்
- தற்சமயம் சிறிய விஷயங்களைச் செய். நாளடைவில் பெரிய காரியங்கள் தங்களையும் செய்யுமாறு கேட்டுக் கொண்டு உன் எதிரே நிற்கும்.
- சந்திரன் பல மலர்களைப் பார்க்கும். மலர்கள் ஒரு சந்திரனையே பார்க்கின்றன.
- அம்பின் வேகம் அதிகம். பழிவாங்கலின் வேகம் மிக அதிகம். எல்லாவற்றையும் விட அதிக வேகமாயிருக்க வேண்டும் தவறுக்கு வருந்துவதில்.
- இரண்டு பெண்களும் ஒரு வாத்தும் இருந்தால் சந்தையாகி விடும்.
- இரக்கமுள்ள மனிதன் இறைவனின் தோழன்.
- அயலாருடன் சோலையில் இருப்பதைக் காட்டிலும் நண்பர்களுடன் சிறையில் இருப்பது மேலானது.
- நாம் பேசுவது விதைப்பதற்குச் சமம், கேட்பதோ அறுவடைக்குச் சமன்.
- ருசி பார்க்க ஆரம்பத்தில் ஒரு மடங்கு ஆசை என்றால் ருசி கண்ட பின்னே பலமடங்கு ஆசை.
- ஐயப்படுதல் என்பது அறிவின் திறவுகோல்.
- அரசனையும், பெண்ணையும், குதிரையையும் அப்படியே நம்பிவிடக் கூடாது.
- நிறைமனம் இருந்தால் நீதான் மன்னன்.
- நீ சுவைக்கும் கனியைத் தந்தது மற்றவர் நட்ட மரம்.

# பெரியவர்களை மதித்து நடப்போம்

ஒரு காட்டில் தாய் எலியும், மகன் எலியும் வசித்து வந்தன. இவை அந்தக் காட்டிலே சந்தோசமாகவும் அன்பாகவும் வாழ்ந்து வந்தன. தாய் எலியும் மகன் எலியும் சேர்ந்து ஒன்றாக அயலூருக்குச் சென்று இரைதேடித் தமக்குத் தேவையான, நெல்மணி மற்றும் தானியங்களைப் பெற்று வந்தன.

இவை செல்லும் அயலூரில் நிறையத் தானியங்கள் இருக்கும். ஒரு நாள் "நாங்கள் வழமைபோல் அதை உண்டு விட்டு வரலாம்" என்று தாய் எலி கூறியது. அவ்வூரிலே ஒரு பூனையும், சேவலும் நண்பர்களாக இருந்தன. இவையிரண்டும் எந்த நேரமும் ஒன்றாகச் சேர்ந்து திரிவதைக் காண முடிந்தது. இவ்வாறு இருக்கையில் வழமைபோல தாய் எலியும், மகன் எலியும் உணவுக்காக அயலூருக்குச் சென்றன. பூனை தனியாக நிற்பதைப் பார்த்த தாய் எலி, குட்டி எலியிடம், "எம்மினத்துக்கான எதிரி அங்கே நிற்கின்றது. இன்று நாம் உணவுக்காகச் சென்று நம் உயிரையே விடுமளவுக்கு ஆளாக நேரிடும். அதனால் இன்று இந்த உணவு உண்பதை விட்டுவிட்டு வீடு திரும்பிச் செல்வோம். உணவானது இன்று இல்லாவிட்டாலும் இன்னொரு நாள் சாப்பிட்டு உயிர்வாழலாம். ஆனால், உயிரை விட்டால் திரும்பப் பெற முடியாது" என அறிவுரை கூறியதால் இரண்டும் திரும்பத் தமது இடத்திற்கு சென்று விட்டன.



அடுத்த நாள் குட்டி எலி பசி தாங்காமல் தாயைக் கேட்டது, "அம்மா நான் அங்கு சென்று உணவை எடுத்து வருகின்றேன்" என்று. அதற்குத் தாய் எலி "அங்கு நீ செல்ல வேண்டாம். அங்கே எமது இனத்தின் எதிரி நிற்கின்றான். உன்னைக் கண்டால் அவன் உயிருடன் விடமாட்டான் நீ அங்கே செல்லாதே" என்றது. இளமையும், துடிப்பும் கொண்ட மகன் எலி தாயின் சொல்லைக் கேட்காமல் அயலூருக்கு உணவு எடுக்கச் சென்றது. அங்கே சேவலும் பூனையும் கூடி நின்றன. சேவல் கொக்கரக்கோ எனக்கத்தியது. குட்டி எலி அப்போது சேவலை உற்றுப் பார்த்து விட்டு தலை தெறிக்கக் காட்டுக்கு ஓடியது.

அங்கே தாயிடம் தான் கண்ட விசித்திர உருவத்தை வர்ணிக்கத் தொடங்கியது. "அம்மா நான் சாப்பாட்டுக்காக அங்கே சென்றபோது நமது எதிரிக்கு முன்னால் இன்னொரு விசித்திர உருவம் நின்றது. அதன் உருவம் போர் வீரனைப் போல் தோற்றமளித்தது" என்று தாயிடம் படபடப்புடன் குட்டி எலி கூறியது.

"மகனே அவ்வாறான உருவமாகக் காணப்பட்டது சேவல். அது எம்மினத்தை ஒன்றும் செய்யாது. அதன் உருவம் தான் அப்படி. ஆனால் அதற்குப் பக்கத்தில் இருந்த பூனைதான் எம்மினத்தைத் தேடித் தேடி வேட்டையாடி உண்ணும்" என்று கூறிய தாய் எலி மகன் எலியைப் பார்த்து, "நான் போக வேண்டாம் என்று சொன்னதையும் கேட்காமல் நீ போனதால் நீ அந்த உருவத்தைக் கண்டு பயப்பட நேர்ந்தது. இனியாவது எனது சொல்லைக் கேட்டு நடந்துகொள்" என்றது. அப்போது தான் குட்டி எலிக்கு தன்னைச் சுற்றி உள்ள உலகும், தாயின் சொல்லைத் தட்டக் கூடாது என்பதும் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்து கொண்டது. சிறுவர்களாகிய நாமும் எம்மைச் சூழ்ந்துள்ள பகுதிகளில் என்ன நடப்பதென்பதைப் புரிந்து கொண்டு பெரியவர்களின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து நடக்க வேண்டும்.

– கௌசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தில் சுயநலம் வேண்டாம்

பாடசாலைகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை வலியுறுத்தி மாணவர்கள் போராட்டம் நடத்துவதை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது. உரிமை மீறல், பாலியல் துர்நடத்தை உள்ளிட்ட பல காரணங்களுக்காக அவர்கள் போராட்டத்தை மேற்கொள்கிறார்கள்.

ஆனால் சில பாடசாலைகளில் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இடமாற்றப்படும்போது அதனை நடைமுறைப்படுத்துவதா வேண்டாமா என்பதற்கு அப்பால் அதில் தடங்கல்கள் மற்றும் தலையீடுகளை ஏற்படுத்துவதும் இத்தகைய போராட்டங்கள் மூலமாக இடம்பெற்றுள்ளன. அதிபர் மற்றும் ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பில் தீர்மானங்களைச் கல்வி அதிகாரிகள் உள்ளிட்ட இடமாற்றச் சபையே தீர்மானிக்கிறது.

ஒருவரை இடமாற்றம் செய்யும்போது கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டியது என்று ஏதாவது இருந்தால் அது பற்றிய, விளக்கங்கள், தேவைப்பாடுகள் பற்றி அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறலாம். அவர்கள் (அதிபர் அல்லது ஆசிரியர்) அந்தப் பாடசாலையில் தொடர்ந்து இருக்க வேண்டிய தன் அவசியம், அல்லது அவர்களை மாற்ற வேண்டிய அவசியம் குறித்து மாணவர்களோ, சங்கமோ சம்பந்தப்பட்டவர்களோ திணைக்களத்துக்கு அல்லது இடமாற்றச் சபைக்குப் பரிந்துரைக்கலாம். தெளிவுபடுத்தல்களை வழங்கலாம். ஆனால், தாம் சொல்பவற்றையே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்கமுடியாது. ஆனால் அது பற்றிய புரிதல்களை மாணவர்கள் கொண்டிருப்பதில்லை. அது பற்றி மாணவர்கள் தெரிந்திருத்தல் வேண்டும். அதில் தெளிவு கொண்டிருத்தல் வேண்டும்.

சில இடங்களில் அதிபர்கள் அல்லது ஆசிரியர்கள் தமக்கு ஒரு பிரச்சினை என்று வரும்போது அதனை மாணவர்களை வைத்து முன்னெடுத்துச் செல்வதோ, மாணவர்களைக் கொண்டு சாதிப்பதோ ஏற்கக்கூடிய விடயமல்ல. தமது பக்கத்தில் சரி பிழை என்பதற்கப்பால், தாம் நினைத்ததை மாணவர்கள் மூலமாகச் சாதிப்பதற்கு அவர்கள் முற்படுகிறார்கள். சில இடங்களில் அவ்வாறு நடத்தியுள்ளனர்.

இதுவரை காலமும் போர் என்ற நிலைப்பாட்டால் இடமாற்றங்களோ, நியமனங்களோ உரிய முறையில் செயற்படுத்தப்படவில்லை. அதனால் பலர் தமக்கு இயன்றவர்களைப் பிடித்து தாம் விரும்பிய இடங்களில் நன்றாகவே குளிர்காய்கின்றனர். கடந்த ஆட்சியிலும் அந்த நிலை நன்றாகவே நீடித்தது. தற்போது மெல்ல மெல்ல நிலைமை சீராகி வருகிறது. விரும்பியோ விரும்பாமலோ அதனை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அரச பாடசாலை, தனியார் பாடசாலை என்ற வகைப்பாட்டினுள் வேறுபாடு இருக்கலாம். ஆனால், எந்தப் பாடசாலையாக இருந்தாலும் கல்வி கற்பது மாணவர்கள்தான். மாணவர்களில் தனியார் மாணவர், அரச மாணவர் என்ற வகைப்பாடு இல்லையே! மாணவர்களைப் பொறுத்தளவில் கல்வி கற்கத்தானே அத்தகைய பாடசாலைகளுக்குச் செல்கிறார்கள்.

சில நாள்களாக உடுவில் மகளிர் கல்லூரியில் அதிபர் பிரச்சினை இருந்து வந்தது. ஏனைய பாடசாலைகளைப் பொறுத்தளவில் நிர்வாகக் கட்டமைப்பு வலயத்திடமும் மாகாணக் கல்வித் திணைக்களத்திடம் உள்ளது. ஆனால் தனியார் பாடசாலையான உடுவில் மகளிர் கல்லூரி நிர்வாகம் தனியாரிடம் - மதத்துடன் தொடர்புடைய நிர்வாகக் கட்டமைப்பையுடையது.

60 வயது வந்ததும் உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுவது வழமை. அவர்கள் விலக அவர்களுக்குக் கீழ் உள்ள இளையோர் அந்த இடத்தை அலங்கரிப்பர். சில இடங்களில் அது நடக்கத் தவறிவிடுவதனால் வீணான பிரச்சினைகள் வருகின்றன.

நீதியான செயற்பாடுகள் மெல்ல மெல்ல இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் ஓய்வு பெறவேண்டிய வயதுக்குப் பின்னரும் விட்டுப் போகமாட்டேன் என்று அடம் பிடிப்பது வரவேற்கக்கூடியதல்ல.

தவிர நிர்வாகக் கட்டமைப்பின் கீழுள்ள நிறுவனங்கள் நிர்வாகத்தின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டாக வேண்டியது பொது நலன் சார்ந்த விடயங்களில் தவிர்க்க முடியாதது.

வடக்கில் சில பாடசாலைகளில் இடம்பெற்றிருந்த மாணவர்களின் போராட்டங்களின் பின்னால் சுயநலம் மறைந்திருந்தது என்பதை மறுக்க முடியாது. அந்தச் சுயநலன்களை மாணவர்கள் கண்டு விலக வேண்டும். பாடசாலைகளில் இடம்பெறும் போராட்டங்களில் மாணவர்களின் பங்களிப்பை வைத்து அதனைக் கண்டு கொள்ளலாம். எனவே மாணவர்களும் சிந்திக்கவேண்டும். மாணவர்களைப் பகடைக் காய்களாக்கிக் குளிர் காய்பவர்களும் இனிமேல் இதைத் தவிர்க்க வேண்டும்.



# உயர் கல்வி அறை கூவல்கள் சாதகமாக இல்லாத இலங்கைப் பல்கலைக் கழகங்கள்

மு.சந்திரகுமார்

இலங்கைப் பல்கலைக்கழக முறைமைகளைப் பகுத்தறிவுக்குப் பொருந்தும் வகையில் சீரமைக்க வேண்டிய அவசர தேவை இன்று ஏற்பட்டுள்ளது. உயர்கல்வித்துறை அறைகூவல்களுக்குச் சாதகமான நிலை போதுமானதாக இல்லாத பல்கலைக் கழகச் சூழலில் மாணவர்கள் தீவிரவாதிகளால் தூண்டப்பட்டுத் தாமே வன்முறைகளுக்கு ஆளாகும் நிலை உடனடியாகத் தவிர்க்கப்பட வேண்டும் என கல்வியமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் பா.தனபாலன் தெரிவித்தார்.

'இலங்கையில் உயர்கல்விக் கலாசாரமும், வேலைவாய்ப்புக்களும்' என்ற தலைப்பிலான செயலமர்வு அண்மையில் திருநெல்வேலி ஆசிரிய வாண்மை விருத்தி நிலையத்தில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தனதுரையில் பட்டதாரிகள் இயல்புகளுக்கும் வேலை உலகின் தேவைகளுக்கும் அதாவது வழங்கல்களுக்கும் கேள்விக்கும் இடையிலான பொருத்தமின்மை அடுத்த பிரச்சினையாகிவிட்டது.

இதன் விளைவாக கூட்டான துறையில் பெருந்தொகையான பட்டதாரிகளுக்குத் தொழிலின்மையும் தகுதிக்குக் குறைந்த தொழிலில் அமர்கின்றமையும் இடம்பெறுகின்றது. பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்தல் தொடர்பான தெளிவான கொள்கை ஏதுமின்றி பெருந்தொகையான பட்டதாரிகளைத் தனது சேவையில் உறிஞ்சிக் கொள்ளும் தொழில் வழங்குநர் என்ற நிலைக்கு அரசு கட்டாயத்தின் பேரில் தள்ளப்படுகின்றது.

பொதுப்படையான திறன்கள் இன்மை, குறைந்த அளவிலான மொழித் தேர்ச்சி, மிருது நிலைத்திறன் குறைபாடுகள், உயர் தொழில்நுட்ப அறிவின்மை, தொழிற்தேர்ச்சி தொடர்பான சீரான அறிவின்மை, தொழிற் சூழலுக்குத் தன்னை இயல்பாக்கிக் கொள்ளும் ஆற்றலின்மை, குழுவாகச் சேர்ந்து இயங்க முடியாமை, முரண்பட்டு வேலையிலிருந்து விலகுதல், முன்னேற்றத்தில் அக்கறையீனம் என்பன பட்டதாரிகளுக்கு எதிரான பிரதான முறைப்பாடுகளாகும்: சமூக ரீதியான பெறுமானமும், பொருளாதார ரீதியான பெறுமானமும் உள்ள புதிய, நவீன அறிவை, ஆய்வு மூலம் பிறப்பிப்பதில், இலங்கைப் பல்கலைக்கழகங்கள் உரிய இடத்தை அடையவில்லை. புதிய, நவீன அறிவுத்திறன் வாய்ந்த சொத்துக்களான பல்கலைக் கழகங்களின் பங்களிப்புக் குறைவாகவேயுள்ளது. அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில், பல்கலைக்கழகங்கள் புத்தாக்கக் காரணிகளாகவும், தொழில் முனைவாண்மையைச் சீராக வளர்க்கும் தாபனமாகவும் இருத்தல் வேண்டும்.

> சமூக, அரசியல், பொருளாதார, கலாசாரப் பிரச்சினைகள் சம்பந்தமான உண்மையான, அறிவியல்ரீதியான உரையாடல்களையும், வாதப்பிரதிவாதங்களையும், மேம்படுத்துபவையாக இலங்கையின் பல்கலைக்கழகங்கள் இல்லை.

சமூக, அரசியல், பொருளாதார, கலாசாரப் பிரச்சினைகள் சம்பந்தமான உண்மையான, அறிவியல்ரீதியான உரையாடல்களையும், வாதப்பிரதிவாதங்களையும், மேம்படுத்துபவையாக இலங்கையின் பல்கலைக்கழகங்கள் இல்லை. தமது கொள்கைகளைத் திணித்து வசப்படுத்தும் உப கலாசாரத்தினால் சுதந்திரமான சிந்தனைகள் புறக்கணிக்கப்படுகின்றன. அறிவு சார்ந்த கெட்டிக்காரர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். சந்தர்ப்பவாதிகள் பதவிகளைப் பெற்றுத்தம் கதிரைகளுக்காகச் சுயமிழந்த நிலை, பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியைப் பெரிதும் பாதிக்கின்றது.

கூட்டாக நோக்கும்போது அறிவுசார் பொருளாதாரத்தின் தேவைகளை உயர் கல்வித் துறை முழுமை செய்ய இயலாமல் இருப்பதற்கு, மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் சான்று பகர்கின்றன. தமது வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் மேம்படுத்துவதற்கு, அறிவை உருவாக்கி, பரப்பிப் பயன்படுத்துதலே அறிவுசார் பொருளாதாரம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய துறை சார் பொருளாதார – சமூக அபிவிருத்தியை நோக்கி இந்தப் பல்கலைக் கழகங்கள் தமது ஆய்வுகளை விஸ்தரிக்க வேண்டும்.

நவீன, அரச, தனியார் பல்கலைக் கழகங்களின் வகிபங்கு, சமூகத்தில் வாண்மையாளர்களை உருவாக்குவதற்குரிய பயிற்சிமையம், அதன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய ஆராய்ச்சிமையம், சிந்தனையாளர்களுக்கு சுயாதீனமான ஒரு சூழலை வழங்கும் பண்பாட்டுமையம் ஆகியவை உள்ளடங்கிய பரந்த பொருளாதார சமூக பண்பாட்டு மறு மலர்ச்சியை ஏற்படுத்துபவையாக பல்கலைக் கழகக் கல்வியில் சீர் திருத்தங்கள் விரைவாகக் கொண்டுவர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"மனேஜர் வேலையெல்லாம் முடிச்சிட்டு வந்து என்னைப் பாரெண்டு மசேஜ் அனுப்பிருக்கார்... பார்க்காத மாதிரியே போயிடுவோம். கேட்டா வீட்டுக்குப் போய்த்தான் பார்த்தனெண்டு சொல்லிடுவோம்.



செல்போன் காதலால் விபரீதம். காதலியை நேரில் பார்த்தவர் ரயிலில் பாய்ந்து தற்கொலை.



"எதுக்கு உங்க புருஷன போட்டு இப்படி அடிக்கிறீங்க?" "என் PHOTO வை UPLOAD பன்னிருகான் பாவி..." PHOTO UPLOAD பண்ணதுக்கா இந்த அடி?" "அதை OLX ல UPLOAD பண்ணிருக்கான்..!"



"இருபத்திரண்டுவயசாச்சு... இன்னுமா ரோட்டில போற நாய்க்குப் பயப்படுற?"
"22 வயதெண்டு, எனக்குத் தெரியும். நாய்க்குத் தெரியுமா?"

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** முக்கியமான செயலை, பிறரை நம்பி ஒப்படைக்க வேண்டாம். நிதானமுடன் செயற்பட்டால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். தொழில், வியாபாரத்தில் மந்தநிலை நிலவும். திடீர் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். அரசியல்வாதிகள் தலைமையின் ஆதரவைப் பெற்று மகிழ்வர்.

**மிதுனம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் பன்மடங்கு உயரும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி நிலவுவதால், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர். கண் பாதுகாப்பில் தகுந்த கவனம் தேவை.

**சிங்கம்:** குழப்பமான சிந்தனை மனதில் உருவாகலாம். நண்பரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மந்த நிலை நிலவும். இலாபம் சுமார். குடும்பச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**கன்னி:** கடந்த கால உழைப்பிற்கு, உரிய பலன் தேடி வரும். அவமதித்தவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**துலாம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் படிப்படியாக உயரும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். வாகன பயணத்தில் மிதவேகம் நல்லது.

**விருச்சிகம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். நிலுவைப் பணமும் வசூலாகும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும். பணியாளர்கள் சலுகைப் பயன் பெறுவர்.

**தனுசு:** எதிலும் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் தகுதிக்கு மீறி செலவு செய்ய நேரிடலாம். உடல்நிலை திருப்தியளிக்கும்.

**மகரம்:** சிறு செயலையும் நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். கடனில் பெரும் பகுதி அடைபடும்.

**கும்பம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். திட்டமிட்டபடி பணிகள் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். குடும்பத்தில் சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும்.

**மீனம்:** சுயநலத்துடன் சிலர் உங்களுடன் நட்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பெண்கள், தாய் வீட்டினரின் உதவி கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | | | 7 | |
| 1 | | | 8 | | | | | 5 |
| | | | 4 | | 3 | | | |
| | 2 | 6 | | | | 4 | 9 | |
| | | | | 6 | | | | |
| | 9 | 3 | | | | 2 | 6 | |
| | | | 7 | | 6 | | | |
| 8 | | | 3 | | 1 | | | 6 |
| | 4 | | | | | | 1 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 6 | 9 | 8 | 2 | 4 | 7 | 3 |
| 7 | 4 | 8 | 6 | 3 | 5 | 1 | 2 | 9 |
| 2 | 3 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 | 6 |
| 6 | 2 | 7 | 3 | 5 | 4 | 9 | 1 | 8 |
| 5 | 9 | 3 | 1 | 2 | 8 | 6 | 4 | 7 |
| 8 | 1 | 4 | 7 | 6 | 9 | 3 | 5 | 2 |
| 4 | 7 | 1 | 2 | 9 | 3 | 8 | 6 | 5 |
| 3 | 6 | 5 | 8 | 4 | 7 | 2 | 9 | 1 |
| 9 | 8 | 2 | 5 | 1 | 6 | 7 | 3 | 4 |

புதிதாகக் கல்யாணம் ஆன தம்பதியர் சாலையோரத்தில் நடந்து கொண்டிருந்தனர். திடீரென்று ஒரு நாய் குலைத்துக் கொண்டு ஓடி வந்தது. அவர்கள் இருவரையும் கடிக்கப் போகிறது என இருவரும் நினைத்தார்கள்.

நல்ல உள்ளம் கொண்ட அந்தக் கணவர் தன் மனைவியைத் தூக்கி வைத்துக் கொண்டார். நாய் கடித்தால் என்னை மட்டும் கடிக்கட்டும்; என் மனைவி தப்பிவிடுவாள் என நினைத்தார்.

ஓடி வந்த நாய் இந்தச் செயலைப் பார்த்ததும் திரும்பிச் சென்றது. பிறகு மனைவியை இறக்கிவிட்ட கணவன் தன்னுடைய நற்செயலுக்காக மனைவி தனக்கு முத்தம் மழை பொழிவாள் என்று எதிர்பார்த்தார்.

அடுத்த கணமே மனைவி கோபத்துடன் "எல்லோரும் நாய் வந்தா கல்லைத் தூக்கி எறிவார்கள். ஆனால், தன் மனைவியைத் தூக்கி எறியும் கணவனை இப்பதான் பார்க்கிறேன்." என்றாள்.

நீதி: கணவன் என்னதான் நல்லது செய்தாலும் அவன் மனைவிக்குத் தப்பாத்தான் தெரியும்.




யாத்திரி

நிரூபிக்க அவசியமற்ற அன்பு எப்போதும் காலம் கடந்தே புரிந்து கொள்ளப்படுகிறது.

# முதல் முறையாக ஆமிர் கான், அமிதாப் இணையும் பிரம்மாண்ட படம்

ஹிந்தி சினிமாவின் ஜாம்பவான்களான அமிதாப் பச்சன் மற்றும் அமீர் கான் இதுவரை சேர்ந்து நடித்ததே இல்லை. இந்தக் குறை இனிமேல் இல்லை. அவர்கள் இருவரும் தற்போது 'தக்ஸ் ஆஃப் ஹிந்துஸ்தான்' (Thugs of Hindostan) என்ற படத்தில் இணைந்து நடிக்கவுள்ளனர்.
யாஷ் ராஜ் பிலிம்ஸ் தயாரிக்கவுள்ள இந்தப் படத்தை விஜய் கிருஷ்ண ஆச்சார்யா இயக்கவுள்ளார். இவர் இதற்குமுன் 'தூம் 3' படத்தை இயக்கியவர். இந்தச் செய்தியை அமீர் கான் தன் டுவிற்றர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். படப்பிடிப்பு விரைவில் தொடங்கும் எனவும், அடுத்த வருடம் தீபாவளிக்கு வெளியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

ஆவணி-26
ஞாயிற்றுக்கிழமை
-11.09.2016
திதி: தசமி பி.இ.05.19
நட்சத்திரம்: மூலம் கா.06.58
ராகுகாலம்: 04.33-06.03 வரை
சுபநேரம்: 09.03-10.33 வரை



# கல்கண்டு வடை

**தேவையான பொருள்கள்**

உளுத்தம்பருப்பு – 1 கப்
பச்சரிசி – 1/4 கப்
கல்கண்டு – 11/4 கப்
எண்ணெய் – தேவையான அளவு

**செய்முறை:**

உளுத்தம்பருப்பு, அரிசியை 1 மணி நேரம் ஊற வையுங்கள். தண்ணீரை நன்கு வடித்துவிட்டு, ஒட்ட அரைத்தெடுங்கள். அவ்வப்பொழுது சிறுது தண்ணீர் தெளித்து கெட்டியாக அரைக்க வேண்டும். நன்கு நைஸாக அரைபட்டதும் கல்கண்டையும் சேர்த்து அரையுங்கள். எண்ணெயை நிதானமான தீயில் காய வைத்து, மாவை சிறு வடைகளாக தட்டிப் போட்டு நன்கு வேக விட்டெடுங்கள். கல்கண்டு வடை தயார்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | [illegible] | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 800 | 700 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 500 | – |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 700 | – | – |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 400 | 600 | 450 |
| விளை | 650 | 500 | 300 | 600 | 600 | 500 | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 400 | 350 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 400 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 300 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | – | 170 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | 600 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 300 | – |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | [illegible] | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 60 | 50 | 80 | 60 | 40 | 30 | 90 | 30 |
| கரட் | 80 | 100 | 120 | 100 | 100 | 120 | 110 | 90 |
| மரவள்ளி | 60 | 90 | 100 | 80 | 70 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 60 | 50 | 80 | 40 | 40 | 80 | 100 | 50 |
| பாகல் | 100 | 70 | 150 | 100 | 100 | 100 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 120 | 160 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 90 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 70 | 120 | 90 | 90 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 | 40 | 70 | 20 |
| தக்காளி | 40 | 40 | 50 | 50 | 40 | 80 | 120 | 35 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 100 | 60–80 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 80 | 80 | 70 | 100 | 200 | 80 |
| புடோல் | 40 | 40 | 40 | 60 | 40 | 60 | 70 | 30 |
| கோவா | 100 | 80 | 80 | 100 | 80 | 100 | 90 | 40 |
| வெண்டி | 100 | 60 | 80 | 80 | 40 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 160 | 160 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 100 | 100 | 120 | 90 | 90 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 40 | 30 | 30 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 150 | 200 | 300 | 220 | 220 | 200 | 120 | 180 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 100 | 100 | 200 | 80 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 160 | 140 | 260 | 160 | 140 | 200 | 80 | 100 |



## இது புதுசு

சீனா சேட்கள் அறிமுகமாகியுள்ளன. பல வர்ணத் துணிகள் இணைத்து இந்தவகை சேட்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கொலர், சேட் பொக்கற் ஆகியன பல வர்ணங்களில் வடிவமைப்புச் செய்யப்பட்டிருக்கும் இவை, ஆயிரத்து 200 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன. [illegible]களுக்கு ஏற்ற ஆடை.

## வேக வைத்துச் சாப்பிட வேண்டிய சில முக்கிய காய்கள்

காய்கறிகளின் மகத்துவத்தைப் பற்றி சொல்லித் தெரிவதில்லை. ஒவ்வொரு காயுமே ஒவ்வொறு உறுப்பிற்குத் தனிப்பட்ட நன்மைகளை தருபவை. காய்கறிகளை வேக வைத்துச் சாப்பிடக் கூடியவை மற்றும் பச்சையாகச் சாப்பிடக் கூடியவை என பிரிக்கலாம். சில காய்கறிகளில் சத்துக்கள் செயற்படாத நிலையில் இருக்கும். அவற்றை வேகவைக்கும்போதே உயிர் பெறும்.

நீரில் கரையும் உணவுகளான விட்டமின் சி நிறைந்த வெள்ளரிக்காய், நெல்லிக்காய், ஆகியவற்றை வேகவைக்காமல் பச்சையாக சாப்பிட்டால் நல்லது. புரோட்டின், கார்போஹைட்ரேட் நிறைந்த காய்கறிகளை வேக வைத்தால்தான் சத்துக்கள் இரட்டிப்பாகும்.




**பீட்ரூட்** : பீட்ரூட்டைப் பச்சையாகக் காட்டிலும் வேகவைத்துச் சாப்பிடும் போது அதிலுள்ள ஆண்டி ஒக்ஸிடென்சுகள் மற்றும் நுண்சத்துக்கள் உயிர்பெறுகின்றன. 3 நிமிடங்கள் வேக வைத்தால் போதுமானது.

**உருளைக் கிழங்கு:** உருளைக்கிழங்கில் மாச்சத்து அதிகம் இருப்பதால் இதனைச் சமைக்கும்போது அதன் சத்துக்கள் வெகுவாக எமக்குக் கிடைக்கிறது. குறிப்பாகக் குழந்தைகளுக்கு வேகவைத்துக் கொடுப்பது நல்லது. பெரியவர்களுக்கு உடல் எடையைக் குறைக்கும். பச்சையாகவோ அல்லது எண்ணெயில் பொரித்தோ சாப்பிடும்போது அவை கொழுப்பாக மாறி அஜீரணத்தையும், உடல் பருமனையும் தந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## செல்லையா
## மண்டலாய்விநாயகமூர்த்தி (பாலு)

(சமாதான நீதிவான்,
திரியாய் அம்மன், இயக்கச்சி கண்ணகை அம்மன் ஆலய பூசகர்)



கோயில்வயல் இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் நிரந்த வதிவிடமாகவும், தற்போது இல.596, கனகரத்தினம் மகாவித்தியாலயம் முன்பாக நாவலர் வீதியில் வசித்து வந்தவருமான செல்லையா மண்டலாய்விநாயகமூர்த்தி அவர்கள் 07.09.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், அருட்செல்வி (பிரான்ஸ்), தவச்செல்வன் (பிரான்ஸ்), தமிழ்ச்செல்வன் (லண்டன்), அருள்மதி (லண்டன்), அருளிசா (லண்டன்), தர்சன், தனுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிரங்கன் (பிரான்ஸ்), துசாயினி, தர்சிகா, இராஜபரன் (லண்டன்), வெற்றிக்குமரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், சாருஜன், சாதனா, சஞ்சய், ஆருஷி, ஆருன், அனிஷா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற வாரித்தம்பியின் சகோதரனும், பாலபரமேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநாதன், தெய்வேந்திரராசா, மகேந்திரராசா ஆகியோரின் மைத்துனரும், வசந்தஞானகி, புஸ்பஞானகி, விஜயஞானகி ஆகியோரின் சிறியதந்தையும், புருஸோத்மன், கீர்த்தன் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் தற்காலிக வதிவிடத்தில் இடம்பெற்று பிற்பகல் 12.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.596,**
**நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 386 6675**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தானங்களில் ...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறுதட்டுகள், குருதி உறை பதார்த்தம், திரவபாயம் எனும் கூறுகளாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும். ஒருவர் தானம் செய்த குருதி நால்வருக்குப் பயன்படுகிறது.

இதன் அடுத்த படியாக முழுக் குருதியாக தானம் செய்வதுடன், குருதிச் சிறுதட்டுக்களை மட்டும் தானம் செய்யும் வசதியும் யாழ்ப்பாணத்திலுள்ள குருதி வங்கிகளில் நடைமுறையில் உண்டு.

குருதித்தானம் நான்குமாத இடைவெளியில் வழங்கக் கூடியதாக உள்ளது. குருதிச் சிறுதட்டுக்களை இரண்டு கிழமை இடைவெளிகளிலும் வழங்கலாம். மேலும் ஆண்டுக்கொரு முறையாகத் தமது பிறந்த தினத்திலும், தமது அன்புக் குரியோரின் நினைவையொட்டியும் குருதித் தானம் வழங்கலாம்.

தொடர் குருதித்தானம் செய்வோரில் இருதய வியாதிகள் கால்வாசி அளவுக்குக் குறைவதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. கொலஸ்ரோல், உயர்குருதி அமுக்கம் (பிறசர்) பாரிசவாதம், இருதய தாக்கம் போன்றவை தொடர் குருதித் தானம் செய்வதால் குறைகின்றது. எனவே நடுத்தர வயதினர் இரத்ததானம் செய்வதனால் மேற்குறித்த நோய்கள் தமக்கு ஏற்படும் ஆபத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

உயிருடன் இருக்கும்போதே பல முறை செய்யக்கூடிய ஒரே ஒரு உடல்சார் தானமாக குருதித்தானம் திகழ்கின்றது. எமக்குப் பல்வேறு இருதயம் சார் நோய்களின் தாக்கத்தை குறைத்து, ஏனையோருக்கு உயிர்காக்க உதவி எமக்கு ஆத்ம திருப்தியை தரும் குருதித்தான செயலில் இணைந்து கொள்வோம்.

*எல்லோரையும் அன்பு செய்வோம்*
*எல்லோருக்கும் சேவை செய்வோம்*

உலகசத்தியசாயி சேவா நிறுவனத்தின் குருதித்தான தின நிகழ்வை ஒட்டி நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை சேர்.பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிறுவனத்தில் காலை 9 மணி தொடக்கம் நண் பகல் ஒரு மணி வரை வரையில் குருதித் தான நிகழ்வு ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் இரத்ததானம் செய்து உயிர் காக்கும் பணியில் இணைந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கப்படு கின்றீர்கள்.

*கட்டுரையாளர்*
*முன்னாள் இரத்த வங்கி*
*மருத்துவ அதிகாரி*

## மைத்திரி மீது...

நிர்வாகத்துடன், நல்ல முறையில் நடத்துவார் என்ற நம்பிக்கை எமக்கெல்லோருக்கும் உண்டு. இவ்வாறு தெரிவித்தார் வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார். அவர் முன்னிலையிலேயே வடக்கு முதலமைச்சர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

இதன்போது முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தாவது:

எப்பொழுதும் பன்மொழி - பல் மதத் தேர்ச்சி நன்மை அளிக்கவல்லன. இன்றைய கால கட்டத்தில் நாங்கள் தமிழையும் சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் நன்றாகப் படிக்க வேண்டியகட்டத்தில் இருக்கின்றோம். தமிழ் மகன் சிங்களத்தையும், ஆங்கிலத்தையும் நன்றாகப் படித்தால் தான் சிங்கள மக்களுக்கு தனது குறைகளை, எதிர்பார்ப்புக்களை, தேவைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறக் கூடியதாக இருக்கும். வெறுமனே தமிழில் பாண்டித்தியம் பெற்று தமிழ் மக்களிடையே எமது கருத்துக்களை கொண்டு செல்வதால், அவை இங்கேயே தேங்கியிருப்பன. சிங்கள மக்கள் எமது உணர்வுகளையும் தேவைகளையும் வேணவாக்களையும் நேரடியாக உணராது விட்டு விடுகின்றார்கள். இதையறிந்து தெற்கில் பாடசாலை மாணவ மாணவிய ருக்குத் தமிழ் ஒரு கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டு வருகின்றது.

ஒரே நாட்டுக்குள் எம்முடைய தனித்துவத்தைப் பேணிக்கொண்டு ஒருமித்து வாழப் போகின்றோம் என்ற முடிவுக்கு நாம் வந்துவிட்டோமானால், எமது சகோதர மொழியையும் ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ந்து கொள்ளுதல் மிக அவசியம். எம்முடைய இரு இனங்களுக்கிடையே இருக்கும் சந்தேகங்கள், வெறுப்புக்கள், புரிந்துணராமை போன்றவை மற்றையவரின் மொழியை நாம் தெரிந்துகொள்வதால் அவை இல்லாதாக்கப்படுகின்றன அல்லது இல்லாதாக்கப்படுவதற்கு வழிவகுக்கின்றன.

சகோதர மொழியைக் கற்பதால் சகோதர மக்களிடையே நிலவும் எம்மைப் பற்றிய தப்பபிப்பிராயங்களை நீக்க அது உதவி புரிகின்றது. எம்முடைய மொழியை நன்றாகப் படித்துப் பேணிப் பாதுகாத்து வரும் அதே நேரத்தில், பிறிதொரு மொழியில் பாண்டித்தியம் பெறுவது பிழை என்று கூற முடியாது.

சிங்கள மொழியைக் க்றறால் தமிழ் புறக்கணிக்கப்படக் கூடும் என்ற கருத்து எம் மக்கள் சிலரிடையே இருக்கின்றது. வட - கிழக்கு மாகாணங்களுக்கு உரிய உரித்துக்கள் தரப்படாது கொழும்பின் அதிகாரம் இந்த இரு மாகாணங்களில் ஊடறுத்துச் செல்லும் நிலை தொடர்ந்தால், அவ்வாறான ஒரு நிலை ஏற்படக் கூடும். நாங்கள் தற்போது எம்முடைய தனித்துவத்தை ஏற்றுக்கொள்ளும் அரசமைப்பை யாத்தளிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அடுத்த கட்டமான நல்லிணக்கத்துக்கு சகோதர மொழிப் பாண்டித்தியம் உதவி புரியும் என்று நம்புகின்றேன்.

அரசியல் ரீதியாக நாம் எதிர்பார்க்கும் எல்லாம் கிடைக்கும் என்று நாங்கள் நம்பாவிட்டாலும் எம்முடைய பல கரிசனைகள் மனதுக்கு எடுக்கப்பட்டு உரிய அரசியல் தீர்வை நாங்கள் பெறுவோம் என்ற நம்பிக்கையை நாம் வளர்த்துக்கொள்வோம். நம்பிக்கைதான் வாழ்க்கை. இறைவன் மீது பாரத்தைப் போட்டு நம்பிக்கையுடன் முன்செல்ல முன் வருவோமாக!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த நாட்டை நல்வழியில், நல்லிணக்கத்துடன், நல்ல நிர்வாகத்துடன், நல்ல முறையில் நடத்துவார் என்ற நம்பிக்கை எமக்கெல்லோருக்கும் உண்டு. அவருக்கு இறைவனின் ஆசி எந்நேரமும் இருக்கக் கடவதாக - என்றார்.

(வ-5)

## தேசிய...

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தாக்கல் செய்த மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது அமைச்சரவையின் அங்கத்தவர்கள் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் இந்த ஆட்சேபனையை முன்வைத்தார்.

தற்போதைய தேசிய அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலம் நிறுவப்பட்டதாகக் குறிப்பிட்ட வழக்கறிஞர், நாடாளுமன்ற தீர்மானத்தை ஆராய்வதற்கு உயர் நீதிமன்றுக்கு அதிகாரங்கள் இல்லை என்று தெரிவித்தார். எனவே இந்த மனுவைத் தள்ளுபடி செய்யுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த ஆட்சேபனை தொடர்பாக எதிர் வரும் 3ஆம் திகதி ஆராயப்படுமென்று தலைமை நீதியரசர் கே.சிறிபவன் அறிவித்தார். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் படி, நாடாளுமன்றத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து நிறுவப்படும் அரசே தேசிய அரசு என்று கூறப்படுவதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகள் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள அரசுக்கு தேசிய அரசு என்று குறிப்பிட முடியாது என்று தீர்ப்பளிக்குமாறு அந்த மனுவில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(வ-5)

## மரண அறிவித்தல்

### குமாரசுவாமி விஜயகுமார்

தொழில் அதிபர் - (கனடா)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 . 01 . 1958 | 09 . 09 . 2016 |

பொன்னையா வளவு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கு.விஜயகுமார் 09.09.2016 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொ. குமாரசுவாமி - கமலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மகனும், லியனோரின் அன்புக் கணவரும் கிரிஸ், றபி ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற கமலகுமார் (முன்னாள் கணக்காய்வாளர் - இ.போ.ச - கனடா) மற்றும் உதயகுமார் (ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்), பிரேமகுமார் (கட்டடக் கலைஞர் கனடா), ஆ.ஜெயகுமாரி, காலஞ்சென்ற பாலகுமார் (கடற்படை அதிகாரி) மற்றும் ராஜ்குமார் (ஓய்வுநிலை விமானப்படை அதிகாரி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், க.புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான ஜோசி (கனடா), ஆலாலசுந்தரம் (சவுதிஅரேபியா, பிறவுனிங் பெரிஸ் கம்பனி மேற்பார்வையாளர்), அற்புதரஞ்சிதம் மற்றும் நளினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், ஹரேந்திரன் கலா (கனடா), தர்சினி விஜயகுமார் (கனடா), பிரதாபன் கவிதா (சுவிஸ்), ஜனார்த்தனன் அனுஷா (ஆஸ்திரேலியா), ரஞ்சித்குமார், பிரியா ரமணா (லண்டன்), சுரேஸ்குமார் சாயினி (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**பொன்னையா ஒழுங்கை,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்:**
**கு. உதயகுமார் (சகோதரர்)**
**021 221 3258**

(ஜே.4463) (13.18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புஸ்பவதி வாமதேவன்



உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியைச் சேர்ந்த திருமதி புஸ்பவதி வாமதேவன் 07.09.2016 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாமதேவனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திலகவதி, மகேஸ்வரி, மற்றும் குகனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் வேதாரணியம், ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், கனகரட்ணம் மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரியும் சியாமளா(லண்டன்), சுரேஷ் (லண்டன்), சியாதா(ஆசிரியை-கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் மோகன குமார் (லண்டன்), மனோஹரி (லண்டன்), ஆனந்தஜோதி ஆகியோரின் அன்பு மாமியும் சூரியமோகன் (லண்டன்), பிரியந்தி (லண்டன்), ஆரபி (லண்டன்) வராஹி (லண்டன்), வித்தியாஷாகர், அபிஷாகர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காந்தரூபன், குமுதினி, சயந்தினி, சிவதக்ஷினி, சுவேந்திரனி, சிவாஜினி, ஸ்ரீகரன், சுதாகரன்,ஸ்ரீ ஜனனி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**அ.ஆனந்தஜோதி (மருமகன்)**
**021 2230616**

### திருமதி நல்லம்மா சிவகுரு



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் தெற்கு, உடுவில், புதுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சிவகுரு 09.09.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கறுவல் - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - அன்னாசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற துரையப்பா சிவகுருவின் பாசமிகு மனைவியும் தர்மலிங்கம், ஜெயநாயகி, செல்வநாயகம் (சுவீடன்), பரராஜசிங்கம், தவமலர், நாகேஸ்வரி, நர்கதேவி (பெல்ஜியம்), நல்லசிவம்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினம், கௌரிதேவி, ஜீவருவநாதன், கனகநாயகம், இராஜேந்திரம், இராணிமலர், கமலேஸ்வரி, அம்பிகா தேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும் பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உடுவில் தெற்கு,**
**புதுமடம்,**
**மானிப்பாய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
(நல்லசிவம் - மகன் (சுவிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையால்....

யோசிக்கின்ற - பிள்ளைகளில் அக்கறை கொண்டுள்ள எவரொருவரும் போதைப் பழக்கத்தைப் பழகமாட்டார்கள். போதையை இல்லாது ஒழிப்பதற்கு நாம் அனைவரும் பொறுப்புணர்ந்து ஒன்றுபட வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'போதையற்ற நாடு' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போதைப் பொருள்களில் சட்டவிரோதமான போதைப் பொருள்களும், சட்டரீதியான அனுமதி பெற்ற போதைப் பொருள்களும் உண்டு. போதைப் பொருள் விற்பனைக்கு அனுமதி வழங்குவதென்பது மக்களைக் கொல்வதற்காகத் தான். போதைப் பொருள் எனும் விடயத்தில் சட்ட ரீதியான அல்லது சட்டவிரோதமான என்று இரண்டு வகை இருக்கக் கூடாது.

எதுவாக இருந்தாலும் எல்லாவற்றுக்கும் எதிராக நாங்கள் குரல் எழுப்ப வேண்டும். போதைக்கு எதிராக நாங்கள் அணி திரள வேண்டும். மது மற்றும் போதைக்கு எதிராக பொதுக் கருத் தொன்றை நாங்கள் கொண்டு வர வேண்டும். அரசியல் வாதிகள், பெற்றோர்கள், பிள்ளைகள், பொதுமக்கள் என்று அனைவருக்கும் இந்தப் பொறுப்பு இருக்கின்றது.

உலகில் பல அரசுகளின் ஆட்சிக் கவிழ்ப்புக்கு போதைப் பொருள் வியாபாரிகள் காரணமாக இருந்திருக்கிறார்கள். இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு நாம் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

எமது நாடு ஒரு தீவாக - கடலால் சூழப்பட்டு இருப்பதனால் நாட்டுக்குள் போதைப் பொருள்கள் ஏதோ ஒரு வகையில் வந்து கொண்டே இருக்கின்றன. உள்நாட்டிலும் போதைப் பொருள் வியாபாரிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதனால் தான் 'போதையற்ற நாடு' போதைக் கெதிரான தேசிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்தோம். போதையில் இருந்து விடுதலையான நாடு என்ற சொல்லைத் தாரக மந்திரமாக ஏற்றுக் கொண்டுள்ளோம். போதையில் இருந்து விடுதலையான நாடு என்ற இந்தச் சொல்லை நீங்கள் உங்கள் உதட்டிலும் உள்ளத்திலும் வைத்திருக்க வேண்டும்.

கடந்த முறை யாழ்ப்பாணத்துக்கு வந்த போது பாடசாலைப் பிள்ளைகளைச் சந்தித்துக் கலந்துரையாடினேன். என்னால் உங்களுக்கு ஆக வேண்டியது என்ன என்று அவர்களிடம் நான் கேட்டேன். அவர்கள் தங்கள் பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளைக் கூறினார்கள். ஆனால் எல்லோருமாக - ஏகோபித்த குரலில் சொன்ன ஒரு விடயம் தாங்கள் பாடசாலைக்கு வரும் போதும், பாடசாலையை விட்டுப் போகும் போதும் இருக்கின்ற மதுபானக் கடைகள் தங் களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்து கின்றன என்பதுதான்.

சாராயக் கடைகளுக்கு அனுமதி வழங்குவதற்கென்று சில நடைமுறைகள் உண்டு. பாடசாலைகளுக்கும் வணக்கத் தலங்களுக்கும் 100 மீற்றர் தூரத்தினுள் சாராயக் கடைகளை வைப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் விதிமுறைகள் பின்பற்றப்படாமல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்குப் பெரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கடல் மார்க்கமாக - சட்ட விரோதமாக எடுத்து வரப்படும் போதைப் பொருள்களினாலும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் பொறுப்பு இருக்கின்றது. வடக்கு முன்னாள் மதுவரி ஆணையாளர் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். இதனைக் கருத்திற் கொண்டு ஒவ்வொருவரும் தமக்குரிய பொறுப்பைச் சரிவர செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்தை நிர்வகிக்கின்ற அத்தனை பேரும் இங்கே கூடி இருக்கிறீர்கள். இங்குள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள் அனைவரிடமும் நான் வேண்டுகோள் முன்வைக்கிறேன். உங்களுடைய அலுவலகங்களில் போதைக் கெதிரான அலுவலகத்தை ஆரம்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

இங்கே வந்திருக்கிற சிலர் சாராயம் அருந்தலாம். சிகரெட் புகைக்கலாம். பியர் மற்றும் கள்ளு போன்றவற்றையும் குடிப்பார்கள் என்றே நம்புகிறேன். யாழ்ப்பாணத்தில் கூடுதலாக பியரும், கள்ளும் தான் விற்பனை செய்யப்படுகின்றது. இந்தக் கூட்டத்துக்கு வந்தவர்கள் மதிய போசனத்துக்காக போகும் போது கூட மது அருந்தலாம். இரவு வீட்டுக்குப் போனபின் கூட ஜனாதிபதி இப்படி எல்லாம் சொன்னார். சாராயத்தை விட வேண்டும் தானா என்றெல்லாம் யோசிப்பீர்கள். அப்படி யோசித்தால் வீட்டிலுள்ள கண்ணாடியின் முன்னால் நின்று பாருங்கள். என்னைப் போல ஒரு மாடு - எருமை மாடு இருக்க முடியுமா என்று யோசியுங்கள். உங்களை உங்களால் கட்டுப்படுத்த முடியாதா என்று நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன்.

வயது வந்தவர்கள் இப்படி நடந்தால், சிறியவர்களை நல்ல வழியில் கொண்டு போக முடியுமா? மது மற்றும் போதையினால் நீங்கள் நோயாளி ஆகுவீர்கள். பொருளாதாரத்தில் நொடிந்து பிச்சைக்காரர்கள் ஆகி விடுவீர்கள். சமூகம் உங்களை ஒதுக்கி வைக்கும். சமூகம் உங்களை வெறுக்கும். நாட்டை உலுக்கிய சம்பவம் நடந்தது. அதுதான் மாணவி வித்தியா கொலை. அந்தக் கொலையுடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கும் போதைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக பொலிஸ் அறிக்கை கூறுகின்றது.

இலங்கையின் வருமானத்தில் 125 முதல் 150 பில்லியன் வரை மதுபான வரியினால் கிடைக்கின்றது. திறைசேரி அதிகாரிகளின் தகவலின் படி அந்த வருமானம் இல்லாது விட்டால், வரவு - செலவுத் திட்டத்தை வரைய முடியாது என்கிறார்கள். இதனை நினைத்து நான் வேதனைப் படுகின்றேன். வெட்கித் தலைகுனிகின்றேன். 2020ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் போது, இவற்றின் வருமானம் இல்லாத வகையில் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்போம்.

சட்ட விரோதமாக பல வகைப் போதைப் பொருள்கள் இந்த நாட்டுக்குள் வருகின்றன. அவை வெவ்வேறு வடிவங்களில் கிடைக்கின்றன. அவற்றை விற்பனை செய்வதற்காக போதைப் பொருள் வியாபாரிகள் பாடசாலை மாணவர்களைப் பயன் படுத்துகிறார்கள். போதைப் பொருள் வியாபாரம் நடப்பதை நீங்கள் அறிந்தால் அதனை ஒதுக்க வேண்டும் - எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் - என்றார்.

இதேவேளை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வறுமையையும் - ஏழ்மையையும் துப்பாக்கி ரவைகளினாலும் போக்க முடியாது. அபிவிருத்தி என்ற உபகரணத்தின் மூலமே போக்க முடியும். வறுமையைப் போக்க - அனை வரையும் போர்க்கொடி தூக்க ஒன்று திரளுமாறு அழைக்கின்றேன்.

உங்கள் பாடசாலை 200ஆவது ஆண்டைக் கொண்டாடுவது என்பது மிக இலகுவான விடயம் அல்ல. 4 சந்ததியை உருவாக்கிய பெருமையையும் கடந்துள்ளது.

நாட்டில் இருக்கும் மிகப்பெரிய சொத்துக்கள் பிள்ளைகள். இந்த நாட்டில் இருக்கும் பிள்ளைகள் மீது தான் மிகப்பெரிய அக்கறை கொள்கின்றேன். பிள்ளைகள் எதிர்பார்க்கும் இந்த சுதந்திரத்தை யதார்த்தமாக்க வேண்டும்.

பிஞ்சு உள்ளங்களுக்கு தவறான எவற்றையும் மனதிற்கு உட்படுத்தக் கூடாது. பிள்ளைகளை தவறான வழியில் இருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அண்மையில் இருக்கும் பாடசாலை தான் நல்லதென கூறுவது போன்று, எப்போதும் பிள்ளைகளுக்கு நல்ல விடயத்தைத் தான் கொடுக்க வேண்டும்.

இந்த வருடத்தில் வடமாகாணத்தின் கல்விக்காக 4 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா நிதி வழங்கியிருக்கின்றோம். கொழும்பு கல்வி அமைச்சின் ஊடாக மாகாண கல்வி அமைச்சுக்கு 100 கோடி வழங்கியுள்ளோம். இந்த வருடம் வடமாகாணக் கல்விக்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் வடமாகாண கல்விக்காக இதைவிட அதிகமான நிதியை ஒதுக்குகின்றேன்.

வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மாகாண அபிவிருத்தி குறித்துக் கூறினார். கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கியிருக்கின்றோம். நிதி ஒதுக்கப்பட்டாலும், வளங்களின் குறைபாடுகளினால் அபிவிருத்தி வேலைகள் மிக மெதுவாக நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளின் குறைபாடுகளை நிறைவு செய்வதற்காக இங்குள்ள அதிகாரிகளை மிகவிரைவில் அழைத்துத் கலந்துரையாடவுள்ளேன். நல்லாட்சியில் இருக்கும் அதிகாரிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் தாமதம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

வடக்கின் அபிவிருத்தி வேலைகள் தாமதமின்றி முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(வ-5-21-106)

## 20 மாதங்களில்

நாடாளுமன்றத்தில் அறிவித்தது சட்டம், ஒழுங்கு அமைச்சு.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின் போது, மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எழுப்பிய கேள்விகளுக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சு சபையில் முன்வைத்த பதிலிலேயே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டது.

2015 ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 443 கொலைச்சம்பவங்களும், 2015 ஜனவரி முதல் 2016 ஓகஸ்ட் முதலாம் திகதிவரையில் 334 கொலைகளும் பதிவாகியுள்ளன.

அநுராதபுரத்தில் 32 கொலைகளும், அம்பாறையில் 24 கொலைகளும், பதுளையில் 14 கொலைகளும், மட்டக்களப்பில் 18 கொலைகளும், பண்டாரவளையில் 15 கொலைகளும், சிலாபத்தில் 18 கொலைகளும், வடகொழும்பில் 13 கொலைகளும், தென்கொழும்பில் 9 கொலைகளும், நடுவண் கொழும்பில் 9 கொலைகளும் எம்பிலிப்பிட்டியவில் 51 கொலைகளும் இடம் பெற்றுள்ளன.

அத்துடன், இரத்தினபுரியில் 46 கொலைகளும், கம்பஹாவில் 43 கொலைகளும், தங்காலையில் 37 கொலைகளும், மாத்தறையில் 33 கொலைகளும், நுகேகொடயில் 37 கொலைகளும் இடம்பெற்றுள்ளன. இந்தக் காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் 43 கொலைகளும், கிழக்கு மாகாணத்தில் 53 கொலைகளும் இடம்பெற்றுள்ளன. நாடு முழுவதிலும் இடம்பெற்ற 82 கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட குற்றவாளிகள் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

இலங்கையில் கடந்த 2013ஆம் ஆண்டு 402 கொலைகளும், 2014இல் 391 கொலைகளும், 2016இல் முதல் 8 மாதங்களில் 301 கொலைகளும் இடம்பெற்றுள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டது.

(வ-5)


### பெற்ற மனமும் கல்லாகிப் போனதே!

இத் தகவலைத் தருவது ஒளிஅரசி....




மேலும் விபரங்களுக்கு
செப்டெம்பர் மாத
சஞ்சிகையைப் பார்க்கவும்

### வேலையாள்கள் தேவை

எமது தச்சுத்தொழில் சாலைக்கு
நன்கு வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை.
தமிழ் தெரிந்த வெளிமாவட்டத்தவர்கள் விரும்பத்தகது.
கேற் கிறில் றஸ் வேலை தெரிந்த வெல்டர் தேவை.
(தகுந்த சம்பளம், தங்குமிடம், உணவு வழங்கப்படும்)
தொடர்பு - 076 5564495


### கண்ணீர் அஞ்சலி




எமது நிறுவனத்தில் கடமையாற்றும்
திருமதி மலர்விழி இரவிதாஸ் அவர்களின்
மாமனார்
பொ. சபாரட்ணம்
அவர்கள் அமரத்துவம் அடைந்ததை
இட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன
வடபிராந்திய முகாமையாளரும்,
ஊழியர்களும்.
(J 2993)(12.18)

### புதுக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் இராஜகோபுர கட்ட நிதிக்காக நடத்தப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

| பரிசு | பெயர் | முகவரி | சிட்டை இல |
|---|---|---|---|
| முதலாம் | லக்சா புடைவையகம் | புதுக்குடியிருப்பு | 610 |
| 2ஆம் | ஜீ.கேமரூபன் | 7ஆம் வட்டாரம், புது | 176 |
| 3ஆம் | கு.செல்வந்தன் | தேவிபுரம் | 561 |
| 4ஆம் | ஜீவராசா | 2ஆம் வட்டாரம், புது | 1904 |
| 5ஆம் | ப. பத்மநிதி | 7ஆம் வட்டாரம், புது | 1021 |
| 6ஆம் | தர்மிலா | 4ஆம் வட்டாரம், புது | 1259 |
| 7ஆம் | 077 6071728 | | 2871 |
| 8 ஆம் | வி.றசிகாந்தன் | 2ஆம் வட்டாரம், கைவேலி | 130 |
| 9 ஆம் | ம.லபிஷன் | 2ஆம் வட்டாரம், புது | 152 |
| 10 ஆம் | செல்லப்பிள்ளையார் | 3ஆம் கண்டம் இடதுகரை | 2093 |
| 11 ஆம் | தி.வசந்தாதேவி | | 455 |
| 12 ஆம் | மிதுசாந் | 10ஆம் வட்டாரம் | 1756 |
| 13 ஆம் | NE 6277 | | 1347 |

ஆலயபரிபாலனசபை

### 12ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 02 . 03 . 1973



உதிர்வு 24 . 08 . 2004

அமரர் சுப்பையா
சுபேந்திரன் (செல்வா)
திதி : நவமி 10.09.2016
சனிக்கிழமை

ஆறிரண்டு ஆண்டுகள் ஆலாய்ப் பறந்தாலும்
ஆர்ப்பரிக்கும் துயரமது ஆற்றொணாது - செல்வா!
ஓரிரண்டு நாளிகையில் ஓடிவரும் விழிநீரும்
ஒரு பொழுதும் ஓயவில்லை ஒருவரிடத்திலுமே காண்
காலனவன் கூவிவிட அவன் காலடியில் நீ விழுந்தாய்
வாழுகின்ற சொந்தங்களை வழிவிட்டே சென்றதேனோ?

"மிசாந்த மஹால்"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.
(J/4486)(10.18)


### பிரத்தியேக வகுப்புக்கள்

பெற்றோர் விருப்பத்திற்கேற்ப தரம் 06-O/L கணிதம், வரலாறு வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். O/L Day Class மாணவர்களுக்கு பகல்நேர வகுப்புக்களும் எடுக்கப்படும்.
075 2480158

### வீடு வாடகைக்கு தேவை

இருவர் அடங்கிய சிறிய குடும்பம் ஒன்றிற்கு
வாடகைக்குத் தேவை.
0777736508, 077 7577175


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரணைமடுக்...

சீரமைப்புக்கு அரசு முன்னுரிமை கொடுத்து அவற்றைச் செயற்படுத்தி வருகின்றது. வடக்கு மாகாண மக்கள் விவசாயத்தில் மிகவும் திறமைசாலிகள். வட மாகாணத்தில் குறைபாடுகள் இருந்தாலும், விவசாயிகள் நாட்டுக்கு நல்ல உணவுகளைத் தருகின்றார்கள். வட மாகாண முதலமைச்சர் கூறிய விடயத்தை எனது கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளேன்' என்று ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

**பின்னணி**

கிளிநொச்சி மாவட்டத்தில் 9 ஆயிரம் விவசாயிகளின் உயிர் நாடியாக விளங்கும் இரணைமடுக் குளத்தின் கீழான 25 ஆயிரம் ஏக்கர் சிறுபோகம் நிறுத்தப்பட்டு குளத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. குளச் சீரமைப்புப் பணிக்காக அருகில் இருந்து மண் பெறப்படும் பிரதேசம் வன வளத் துறையின் கட்டுப்பாட்டில் வருவதாகக் கூறி பணியை முடக்கினர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலரின் கவனத்திற்கு விடயம் கொண்டு செல்லப்பட்டது. மாவட்டச் செயலர் பரிந்துரை மேற்கொண்ட வேளையில், குறித்த பகுதி முல்லைத்தீவின் நிர்வாக எல்லை எனவும், அதனால் அந்த மாவட்ட வன வளப் பகுதியினர் தடைபோட்டனர். இதன் பிற்பாடு மீண்டும் கிளிநொச்சி மாவட்டச் செயலரை விவசாய அமைப்புக்கள் நாடின.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் மீண்டும் முல்லைத்தீவு மாவட்டச் செயலருடன் உரையாடி அதன் மூலம் முல்லைத் தீவு மாவட்ட வனவள அதிகாரிகள் நேரில் பார்வையிட்டனர். பின்னர் ஓர் தீர்மானத்தின் பிரகாரம் பணிக்கான மண்ணைப் பெற அனுமதித்தனர்.

இதன் பிரகாரம் பணியை ஆரம்பிக்க முயன்ற வேளையில், தொல்லியல் திணைக்களத்தினரும், கனிய வளத் திணைக்களத்தினரும் மண்ணை அள்ளினால் கைது செய்வோம் என்று தெரிவித்தனர். இதனால் இரணைமடுக்குள சீரமைப்புப் பணிகள் இடம்பெறவே மாட்டாது என்ற அபாய நிலைக்கு வந்திருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே ஜனாதிபதி நேற்று மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

(வ-5-106)

## வடக்கு மக்கள்....

3 திணைக்களங்கள் மாறி மாறித் தடை போட்டு வருகின்றன.

இவ்வாறு தடை போடும் திணைக்களங்களான வன வளத் திணைக்களம், தொல் பொருள் திணைக்களம், கனிய வளங்கள் திணைக்களம் ஆகியவற்றிடம் உரிய அனுமதியைப் பெற்று வழங்குமாறு விவசாயிகளும், மக்கள் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்தும் இன்றுவரை சீரமைப்புத் தொடர்பில் எந்த முன்னேற்றமும் கிடைக்கவில்லை.

இதனால் இறுதியில் விவசாயிகள் சார்பில் ஊடகத்தின் உதவியும் நாடப்பட்டது. இதன் பிற்பாடு வடக்கு மாகாண முதலமைச்சர், உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குளத்தின் தற்போதைய நிலையை நேரில் பார்வையிடுவதற்காக நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு இரணைமடுக் குளப் பிரதேசத்துக்குச் செல்கின்றனர்.

இவ்வாறு செல்வது தொடர்பிலும் இரணைமடு விவசாயிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ -101)

## மரண அறிவித்தல்

### சீனியர் கந்தசாமி

(ஓய்வு பெற்ற ஊழியர்
சீமெந்து கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை)



அளவெட்டி தெற்கு பெரிய மதவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் கந்தசாமி நேற்று (09.09.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை-சீதை தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராவின் அன்புக் கணவரும் மயூரதன் (முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் வலி வடக்கு அஞ்சல் உத்தியோ கத்தர்),குகரதன் (விற்பனை பிரதிநிதி றூபிஜெலி), ரகுரதன்(கட்டார்), செந்தூரன் (கட்டார்), அகல்யா, கஜலியா, நிறோஜா, தனுரதன்(சுவிஸ்), யான்சன் (டுபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்மிளா, ஆரபி, தர்சனா, ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும் துவாரகன், ஹர்னிகன், லிவின்சன், ஜனன் ஆகியோரின் அன்புப் பேரனும் நவமணி, பார்வதி, காலஞ்சென்ற பவுண் மற்றும் புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(11.09.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### நாகேந்திரன் வேலாயுதபிள்ளை



சரவணை கிழக்கு 9ஆம் வட்டாரத்தை (மயிலப்புலம்) பிறப்பிடமாகவும், 24/2, மதவடி லேன் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரன் வேலாயுதபிள்ளை நேற்று (09.09.2016) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக்கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24/2, மதவடி லேன்,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.
கிருஸ்ணகுமார் (மகன்)
077 4627285
077 225 0375

### துரைசிங்கம் பரமானந்தம்

(கொழும்பு சினிமாஸ் பிரைவேற் லிமிற்றட் பிளாஷா திரையரங்கு முன்னாள் ஊழியர்)



பண்ணாகத்தைச் சேர்ந்த துரைசிங்கம் பரமானந்தம் நேற்று (09. 09.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம்-செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ் சென்றவர்களான இராமலிங்கம்-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் பரமேஸ்வரியின் (திரவியம்) அன்புக் கணவரும் அஜித்குமார், (சோலைவரிப்பகுதி யாழ் மாநகரசபை சாரணர் தலைமைக் காரியாலய ஆணையாளர்), சூரியகுமார் (வட்டு அபிவிருத்தி நிறுவனம்), நிரஞ்சனா(கனடா), சுமிதா(உப தபாலதிபர், பண்ணாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தாரணி(ஆளுநர் செயலகம் வடமாகாணம்), விஜயரமணி (கமநல அபிவிருத்தி திணைக்களம் முல்லைத்தீவு), சுதர்சன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனோஸ்(கனடா) அவர்களின் பேரனும் கனகபூசணம் (கனடா) , காலஞ்சென்றவர்களான சற்குணசிங்கம்(மலேசியா), ஸ்ரீ பத்மநாதன் மற்றும் மனோன்மணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2016) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

தகவல் :குடும்பத்தினர்.
077 1915509, 021 3215934

### பொன்னையா சபாரட்ணம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி)



நந்தாவில் கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கேணியடி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சபாரட்ணம் நேற்று (09.09.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்லையா- சுபத்திரை தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானசௌந்தரி யின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், அன்னபூரணம் மற்றும் இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சுந்தரலிங்கம், இரத்தினம், பொன்னுத்துரை, தர்மலிங்கம் மற்றும் லலிதாதேவி, பாலச்சந்திரன், இராமச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரவிச்சந்தர் (ஜேர்மனி), சந்திரிக்கா, இரவிகரன் (நல்லூர் பிரதேச சபை), இரவிதாஸ் (நல்லூர் .ப. நோ. கூ. சங்கம்), இரவி சங்கர் (கல்வியற் கல்லூரி கோப்பாய்) ஆகியோரின் பாசமிகுதந்தையும், தர்மபாலா (புகையிரத திணைக்களம்), மகேஸ்வரி (ஜேர்மனி), மஞ்சுளா (யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்), மலர்விழி (பெற்றோலியக் கூட்டுத் தாபனம்), மூதினி (நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனும், ஆர்த்திகா, அக்ஷ்சிதா (ஜேர்மனி), ரத்னாங்கி, சித்ராங்கி (கொக்குவில் இந்துக் கல் லூரி), பலராம் ( யாழ். இந்துக் கல்லூரி), வித்தகன், மதுமிலன், யதுசயன், பவதர்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

.அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி

தகவல்:
குடும்பத்தினர்.
021 205 4284

## மரண அறிவித்தல்கள்

### இராசையா வசந்தநாதன்



புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை(U.K) வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா வசந்தநாதன் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா-அரும்பொருள் தம்பதியரின் அன்பு மருமகனும், மங்களகௌரியின் அன்புக் கணவரும் சிந்துசன் (UNILEVER-SVM), யசிந்தன் (UNILEVER-SVM), ஆகியோரின் அன்புத் தந்தையும் அகிலாண்டேஸ்வரி(கனடா), விஜயலட்சுமி(U.K), ஜெகநாதன் (கனடா), செல்வநாதன் (ஜேர்மனி), சிவநாதன், ரவிநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.116,அஷாத் ஒழுங்கை,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(புங்குடுதீவு-07)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
077 5731574

### பொன்னுத்துரை பாலகுமார்

(மாவட்ட முகாமையாளர் - இலங்கை வங்கி வன்னி மாவட்டம்)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்.பாலகுமார் 08.09.2016 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை - பாலாம்பிகை தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், நவசக்தியின் அன்புக் கணவரும், சஞ்ஜைகுமார், ஜனகன் (சனச அபிவிருத்தி வங்கி, வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்தியகலாநிதி சகிதேவி தயாபரனின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஞானசக்தி, சிவமூர்த்தி மற்றும் சிவராசமூர்த்தி, கருணாமூர்த்தி, பராசக்தி, வினாயகமூர்த்தி, கணேசமூர்த்தி, குகமூர்த்தி, ரவிமூர்த்தி, ஜெயசக்தி, கிரியாசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இல.68, மருதடிவீதி, நல்லூரில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.68, மருதடிவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
சி.தயாபரன்
(மைத்துனர்)

077 714 5751

### திருமதி ஜெயந்தி சசிகுமார்



யாழ் வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயந்தி சசிகுமார் கடந்த (08.09.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை-அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரவேற்பிள்ளை - ரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு 'மருமகளும் சசிகுமார் அவர்களின் அன்பு மனைவியும் அபிஷன் அவர்களின் அன்புத் தாயும் சாந்திகா, சுகந்தி, நந்தகும்ார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவகுமாரன், முரளிதரன், சாந்தினி, நந்தினி, நந்தகும்ார், விஜயகுமார், பாலகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சின்னராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகளும் பிறேமி, கண்ணன், ராஜன், சாந்தன், ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மச்சாளும் மதன், வாணி,சுபா, உமா, நிரோ ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் நவீன், பிரவீனா, லக்ஷியா, லாவண்யா, அபீனா, ஜவீன்.பிரித்திகா, அஜய், டருன், டிஜான், விஷானா ஆகியோரின் அன்புச் சித்தியும் ரமேஷ், தனுசன், நிரோசன், அபிதா, அபிலாஷ், அபிநயா, விதுஷன், லக்ஷன் ஆகியோரின் அன்பு மாமியும் பிரித்திகா, அஜய், விஷானா, டருன், டியான் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அப்புத்துரை வீதி,
வல்வெட்டி.

தகவல் :குடும்பத்தினர்.
021 2263981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கபடியில் கலக்குகிறது நெல்லியடி மத்தி.

யாழ்ப்பாணம், செப். 10
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டக் கபடித் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றது.
மாத்தறை உயன்வத்தை கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மட்டக்களப்பு பட்டிருப்பு அணி மோதியது. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 28:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று, காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதிபெற்றது. (ம-422)

## மகாஜனா முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செப். 10
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டக் கால்பந்தாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இரண்டாவது சுற்றுக்கு முன்னேற்றம் கண்டது.
அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து கன்னங்கரா மகா வித்தியாலய அணி மோதியது. இதில் 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது மகாஜனக் கல்லூரி. (ம-422)



# தேசியமட்ட கபடித் தொடரில் நெல்லியடி மத்தி. முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செப். 10
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கபடித் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில், நெல்லியடி மத்திய கல்லூரி அணி காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றது.
மாத்தறை உயன்வத்தை கல்லூரி மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது.
காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில், நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து பண்டாரநாயக்க மகா வித்தியாலய அணி மோதியது. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 38:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-422)

# மெதடிஸ்த பெண்கள் முன்னேற்றம் கண்டது

யாழ்ப்பாணம், செப். 10
பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அணிகள் முன்னேற்றம் கண்டன.
குருநாகல் சென். ஆன்ஸ் மகா வித்தியாலய மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது.
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 15 வயதுக்குட்பட்ட அணி தனது முதல் சுற்று ஆட்டத்தில் மத்திய மாகாண வத்தேகம வித்தியாலய அணியை எதிர்த்து மோதியது. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 43:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 17 வயதுக்குட்பட்ட அணி தனது முதல் சுற்று ஆட்டத்தில் காமினி மகா வித்தியாலய அணியை எதிர்த்து மோதியது. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 22:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 19 வயதுக்குட்பட்ட அணி மயூரபாலா மகா வித்தியாலய அணியை எதிர்த்து மோதியது. 50:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்ற மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## இன்றைய மோதல்கள்

வல்வை- நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாச்சிமார் கோவிலடி சிறிஅம்பாள் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் கிளிநொச்சி ஜொலி போய்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)



# தேசியமட்ட கபடித் தொடரில் சாவகச்சேரி இந்து வென்றது

கரணவாய், செப். 10
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கபடித் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
மாத்தறை நகரசபை மைதானத்தில் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தமித்தேகம மகா வித்தியாலயம் மோதியது. அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 36:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனது முதல் வெற்றியைப் பதிவுசெய்தது. (ம-108-422)

## தேசியமட்ட எல்லே

# சாவகச்சேரி இந்துவிடம் கந்தளாய் ம.வி. வீழ்ந்தது



கரணவாய், செப். 10
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட எல்லே தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
குருநாகல்- குளியாப்பிட்டி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கந்தளாய் மகா வித்தியாலயம் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி, நிர்ணயிக்கப்பட்ட 80 பந்துகளில் 13 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சங்கரி 5 ஓட்டங்களையும், காயத்திரி 3 ஓட்டங்களையும் பெற்றனர். 14 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய கந்தளாய் மகா வித்தியாலய அணி 3 ஓட்டங்களை மட்டுமே பெற்றதையடுத்து, 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி. (ம-108-422)

# ஹாட்லி யைற்ஸ் - சென்றல் மூன்றாவது ஆட்டம் நாளை

யாழ்ப்பாணம், செப். 10
யாழ். சென்றல், ஹாட்லி யைற்ஸ் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.
கடந்த மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் யாழ். சென்றல் அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 113 ஓட்டங்களால் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது ஹாட்லி யைற்ஸ். முடிவடைந்த இரு ஆட்டங்களின் அடிப்படையில் இரு அணிகளும் 1:1 என்ற நிலையில் உள்ளன. மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணத்தைக் கைப்பற்றும் என்பதால் ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. ஹாட்லிக் கல்லூரியின் மைதானத்தில் ஆட்டம் நடைபெறும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியமட்ட கால்பந்தாட்டம்; சென். பற்றிக்ஸ் வெற்றிநடை

யாழ்ப்பாணம், செப். 10

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அணிகள் வெற்றிநடை போடுகின்றன. அனுராதபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 15 வயதுக்குட்பட்ட அணி நேற்றுக் காலை பதுளை மகா வித்தியாலய அணியை எதிர்த்து மோதியது. இந்த ஆட் டத்தில் 6:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வென்றது. மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சஹிராக் கல்லூரி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் பற்றிக்ஸ் வென்றது.


சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்ட அணி நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் அல் கிஜிரா மாகா வித்தியாலய அணியை எதிர்த்து மோதியது. இந்த ஆட்டத்தில் 5:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வென்றது. சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட அணி நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் அல் மிஸ்பா முஸ்லிம் கல்லூரி அணியை எதிர்த்து பலப்பரீட்சை நடத்தியது. இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## நெல்லியடி மத்தி. கபடியில் கலக்கல்

யாழ்ப்பாணம், செப். 10

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கபடியில் நெல்லியடி மத்திய கல்லூரியின் 17 வயதுப் பிரிவு அணி காலிறுதிக்கு முன்னைய ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மாத்தறை உயன்வத்த கல்லூரியின் மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நெல்லியடி மத்திய கல்லூரி அணி, காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் பண்டாரநாயக்க மகா வித்தியாலய அணியை எதிர்த்து மோதியது. இந்த ஆட்டத்தில் 38:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்கு முன்னேறியது நெல்லியடி மத்தி. (ம-422)



## தேசியமட்ட கூடைப்பந்தாட்டத்தில் மல்லாவி மத்தி சிறந்த தொடக்கம்

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் மல்லாவி மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் இம்முறை யாழ். மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. யாழ். மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து குருநாகல் சென். ஆன்ஸ் மகா வித்தியாலய அணி மோதியது. ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய மல்லாவி மத்திய கல்லூரி அணி 65:44 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## அமெரிக்கத் தொடரில் முர்ரே வெளியேற்றம்

அமெரிக்க ரென்னிஸ் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள வீரரான முர்ரே.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், இங்கிலாந்தின் முர்ரேயை எதிர்த்து ஜப்பானின் நிசிகோரி மோதினார். முதல் செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முர்ரே கைப்பற்றினார். இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நிசிகோரி கைப்பற்றினார். மூன்றாவது செற் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முர்ரேயினதும், நான்காவது செற் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படை



யில் நிசிகோரியினதும் வசமாகின. தற்போது நிலமை 2:2. இறுதி செற்றில் வெற்றி பெறுபவரே அரையிறுதிக்குத் தகுதி பெறலாம் என்ற நிலையில் அந்த செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய நிசிகோரி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

## போராடி வீழ்ந்தது இராமநாதன் மகளிர்

யாழ்ப்பாணம், செப். 10

தேசியமட்ட கூடைப்பந்தாட்டத்தில் கடும் போராட்டத்தின் பின்னர் தர்மசோப கல்லூரியிடம் தோல்வியடைந்தது இராமநாதன் மகளிர் கல்லூரி அணி. வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து தர்மசோப கல்லூரி அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் 35:35 என்றிருந்தமையால் மேலதிக நிமிடங்களில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலதிகமாக வழங்கப்பட்ட 5 நிமிடங்களில் சிறிது ஆதிக்கம் செலுத்திய தர்மசோப கல்லூரி அணி முடிவில் 41:35 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இராமநாதன் மகளிர் அணியை வீழ்த்தியது. (ம-23)



## ஹென்றிஸின் மிரட்டல் ஆரம்பம்

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

அநுராதபுரத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி தனது முதல் சுற்று ஆட்டத்தில் மேரியன் மகா வித்தியாலய அணியுடன் மோதியது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-422)



## காலி மத்திய மகா வித்தியை வென்றது விக்ரோறியா

யாழ்ப்பாணம், செப். 10

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட வலைப்பந்தாட்டத்தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி காலி மத்திய மகா வித்தியை வென்றது.

குருநாகல் சென். ஆன்ஸ் மகா வித்தியாலய மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி தனது முதல் சுற்று ஆட்டத்தில் காலி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து மோதியது. இதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 21:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வருவேன் சாய்னா நம்பிக்கை

இந்தியாவின் முன்னணி பூப்பந்தாட்ட வீராங்கனையான சாய்னா நேவால், விரைவில் காயத்திலிருந்து மீண்டு வருவேன் என்று தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக சாய்னா நேவால் முழங்காலில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். ரியோ ஒலிம்பிக் தொடரிலும் அவர் காயத்துடனேயே கலந்துகொண்டார். தோல்வியடைந்து முதல் சுற்றுடன் நாடு திரும்பினார். காயத்துக்காக அறுவைச்சிகிச்சை செய்து ஓய்விலிருக்கும் அவர் விரைவில் குணமடைந்து மீண்டும் வருவேன் எனத் தெரிவித்தார்.

காயம் பெரிய அளவில் இல்லாவிட்டாலும், முழங்காலில் ஏற்பட்டுள்ளதால் குணமடைய அதிக காலம் எடுக்கிறது. பூப்பந்தாட்டத்திலிருந்து விலகியிருப்பது வேதனை தருகிறது. காயம், தோல்வி என்பவற்றிலிருந்து மீண்டு, வலிமையான வீராங்கனையாக மீண்டும் வருவேன். இந்த வருடம் முழுவதும் ஓய்விலிருக்கும்படி மருத்துவக் குழு ஆலோசனை வழங்கியதால் அடுத்த வருடத்திலேயே எனது மீள் வருகை சாத்தியமாகும் என சாய்னா நேவால் மேலும் தெரிவித்தார். (ம)



# இலங்கைக்கு எதிரான ரி-20 தொடரை வழித்துத் துடைத்தது ஆஸ்திரேலியா

இலங்கைக்கு எதிரான இரு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரை 2:0 என்ற அடிப்படையில் முழுமையாகக் கைப்பற்றியது ஆஸ்திரேலியா.

தொடரில் இரு ஆட்டங்கள். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றதால், குறைந்த பட்சம் தொடரைச் சமன்செய்ய இந்த ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற நிலையில் இலங்கை களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக டில்சான் மற்றும் குசல் பெரேரா. ஒரே ஓட்டத்துடன் டில்சானை வீழ்த்தினார் ஹஸ்டிங்ஸ். பெரேராவுடன் இணைந்தார் டி சில்வா. இருவரும் இரட்டை இலங்கங்களில் ஓட்டங்களைப் பெற்றனர். நேற்றைய ஆட்டத்தில் இலங்கையின் சார்பாக இரட்டை இலக்கத்தில் ஓட்டத்தைப் பெற்றவர்கள் இவர்கள் இருவரும் மட்டுமே. 22 ஓட்டங்களுடன் பெரேரா ஆட்டமிழந்ததுதான் தாமதம் மத்திய வரிசை அப்படியே கவிழ்ந்தது. டி சில்வா ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் மென்டிஸ், கப்புக்கெதர, திசர பெரேரா மூவரும் முறையே 5, 7 ஓட்டங்களுடனும் ஓட்டமெதனையும் பெறாமலும் பவிலியன் திரும்பினர். சந்திமல்லால் 4 ஓட்டங்கள் மட்டுமே முடிந்தது. டி சில்வா அரைச்சதம் கடந்தார். அவர் 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க முடிவில் இலங்கை 128-9.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் சார்பாக பல்க்நெர், சாம்பா இருவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு முதலாவது ரி-20 ஆட்டத்தைப் போல் மீண்டும் அதிரடி காட்டி பலமான அடித்தளம் அமைத்துக் கொடுத்தார் மக்ஸ்வெல். வோர்ணரும் ஓரளவு தாக்குப்பிடிக்க ஆஸ்திரேலியா 8 பந்துப்பரிமாற்றங்களில் 90 ஓட்டங்களை எட்டியது. மக்ஸ்வெல் 18 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். ஆஸி 93 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 66 ஓட்டங்களுடன் மக்ஸ்வெல்லின் ஆட்டம் முடிவு கண்டது. மக்வெல்லின் இழப்புக்கு பின்னர் ஆஸ்திரேலியா சில இலக்குகளை இழந்தாலும் இலக்கு எட்டக்கூடிய தூரத்தில் இருந்ததால் பதற்றம் ஏற்படவில்லை. முடிவில் 13 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளால் வென்றது ஆஸி. (ம)

# செரீனா வில்லியம்ஸ் வெளியேற்றம்; முதலிடத்தை இழக்கவும் வாய்ப்பு

அமெரிக்க ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்துடன் வெளியேற்றப்பட்டார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ்.

நடப்பு வருடத்தின் கடைசி பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் ஒன்றான அமெரிக்க ரென்னிஸ் தொடர் அந்த நாட்டின் தலைநகர் நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டமொன்றில் செரீனா வில்லியம்ஸை எதிர்த்து பத்தாம் நிலை வீராங்கனையான கரோலினா பிலிஸ்கோவா மோதினார். முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய பிளிஸ்கோவா, இரண்டாவது செற்றிலும் கடும் சவாலை வழங்கினார். இரண்டாவது செற்றும் 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பிளிஸ்கோவாவின் வசமானது. முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார். செரினா வெளியேற்றப்பட்டார்.

இரண்டாம் நிலை வீராங்கனையான கெர்பரும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றதையடுத்து, கடந்த மூன்று வருடங்களாகத் தரப்படுத்தலில் முதலிடத்திலிருந்துவந்த செரீனா வில்லியம்ஸ், தற்போது தனது தரப்படுத்தல் நிலையை கெர்பரிடம் இழக்கும் நிலையும் ஏற்பட்டது. (ம)



# தேசியமட்ட வாய்ப்புக் கிடைத்தும் உடுவில் மகளிர் களமிறங்கவில்லை

யாழ்ப்பாணம்,செப்.10

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் விளையாட உடுவில் மகளிர் கல்லூரிக்கு வாய்ப்புக் கிடைத்தும் அந்தப் பாடசாலையின் அணி போட்டிக்காக சமுகம் தரவில்லை.

பாடசாலைக்களுக்கு இடையிலான தேசியமட்ட கூடைப் பந்தாட்டத் தொடர் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமானது. 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் விளையாட உடுவில் மகளிர் கல்லூரி அணி தகுதி பெற்றிருந்தது. ஆனால் குறித்த பாடசாலையில் தற்போது நிலவும் அசாதாரண சூழ் நிலை காரணமாக அந்த அணி தொடரில் கலந்துகொள்ள வரவில்லை. இந்த விடயத்தை உடுவில் மகளிர் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் உறுதிப்படுத்தினார். (ம-23)

# பன்னாட்டு அரங்கிலிருந்து விடைபெற்றது 'டில்ஸ்கூப்'

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், முன்னாள் அணித்தலைவருமான டில்சான் பன்னாட்டு ஆட்டங்களிலிருந்து விடை பெற்றார்.

டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து ஏற்கனவே ஓய்வை அறிவித்த டில்சான், ஒருநாள், ரி-20 ஆட்டங்களில் தொடர்ந்து விளையாடி வந்தார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்துடன் பன்னாட்டு ஒருநாள் ஆட்டத்துக்கு விடை கொடுத்த அவர், ஆஸ்திரேலியா- இலங்கை அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ரி-20 ஆட்டத்துடன் பன்னாட்டு கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து கனத்த இதயத்துடன் விலகினார்.

ஆட்டம் முடிவடைந்ததும் அவர் மைதானத்தைச் சுற்றி வலம்வந்து ரசிகர்களிடமிருந்து விடைபெற்றார். சில ரசிகர்கள் ஆர்ப்பரித்தனர், சிலர் அழவும் செய்தனர்.



தாழ்வாக வரும் வேகப்பந்துகளை இலக்குக் காப்பாளருக்கு மேலாக தூக்கி விட்டு வித்தியாசமான அணுகுறையை பன்னாட்டு அரங்கில் அறிமுகம் செய்த பெருமை டில்சானைச் சேரும். வேறெந்த வீரரும் இவ்வாறான அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்தினாலும், அது 'டில்ஸ்கூப்' என்ற பெயரால் அழைக்கப்படும் அளவுக்கு ஆழமாக வேரூன்றியிருந்தது. டில்சானுடன் இணைந்த அவரது பிரத்தியேகமான டில்ஸ்கூப்பையும் நாம் இனித் தவறவிடுவோம் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்த மாதம் 14 ஆம் திகதி 40ஆவது வயதை எட்டவுள்ள டில்சான், இலங்கை அணியின் சார்பாக இதுவரை 87 டெஸ்ட் ஆட்டங்களிலும், 330 ஒருநாள் ஆட்டங்களிலும், 79 ரி-20 ஆட்டங்களிலும் விளையாடியுள்ளார். டெஸ்ட் ஆட்டங்களில் 193 ஓட்டங்களும், ஒருநாள் ஆட்டங்களில் ஆட்டமிழக்காது 161 ஓட்டங்களும், ரி-20 ஆட்டங்களில் ஆட்டமிழக்காது 104 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். மூன்று வகையான ஆட்டங்களிலும் சதத்தைப் பதிவுசெய்த பெருமையும் டில்சானுக்கு உள்ளது. (ம)

விசேட கருத்தரங்கு
Sep - 18 ஆம் திகதி நடைபெறவுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் போட்டிப்பரீட்சை வகுப்புகள்
காலம் - 10/09, 11/09, 12/09, 16/09, 17/09 5Days
நேரம் 3.00 - 3.00 pm
முற்றிலும் எதிர்பார்க்கும் விடயங்கள் ஆராயப்படும்.
வடமாகாண பட்டதாரி ஆசிரியர் போட்டிப்பரீட்சை வகுப்பு பிரதி ஞாயிறு 9.00 - 4.00 Pm
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நி[illegible]வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org